# ஓலைப் பட்டாசு

சுஜாதா



விசா பப்ளிகேஷன்ஸ்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நட்பு | 5 |
| பென்சில் | 17 |
| அண்ணாசாலை 2094 | 22 |
| பீட்டர் | 27 |
| கைது | 39 |
| அட்டாக் | 50 |
| ஓலைப்பட்டாசு | 68 |
| கடவுள் இயந்திரம் | 76 |
| ஆக்கிரமிப்பு | 82 |
| ஒரு பூச்சியின் உரையாடல் | 94 |
| சேச்சா | 102 |
| ஜாய் ரைடு | 113 |
| தாசன் | 122 |
| பிசாசு வந்த தினம் | 139 |
| சிறு சிறு கதைகள் | 151 |
| புதிய நீதிக் கதை -1 | 153 |
| புதிய நீதிக் கதை - 2 | 157 |


# நட்பு

ஸ்கூட்டரில் கூந்தல் பறக்கப் போய் வந்து கொண்டிருந்தவனை கார் வாங்க வைத்ததற்கு சம்பத்துதான் காரணம். கம்பெனி அளித்த நானூற்றைம்பது ரூபாய் அலவன்ஸூம் என்னுடைய கார் மோகத்துக்கு உபரி காரணம்.

''கம்பெனில அலவன்ஸ் தரான். அட்வான்ஸ் தரான்... ஒண்ணு வாங்கிப் போட்டுர வேண்டியதுதானே?'' என்றான் சம்பத்.

என் மனைவி, ''உங்களுக்கு ஸ்கூட்டரே சரியா... ஓட்டத் தெரியலை... பூனை நாய்க்கெல்லாம் தெகச்சுண்டிருக்கேள், எதுக்கு காரு?'' என்றாள்.

ஆபீஸ் கிளார்க் ரங்காச்சாரியை விசாரித்தபோது, ''ஆமாம், அந்த மாதிரி ஒரு ஸ்கீம் இருக்கு. கம்பெனில முப்பதாயிரம் ரூபாய் வரைக்கும் லோன் தரா. நானூற்றைம்பது கார் அலவன்ஸூம் தரா...''

''உடனே கார் வாங்கிடணுமா ஆச்சார்?''

''கார் வாங்கவே வேண்டாம். எதாவது ஒரு டப்பா இருந்தாப் போறும். நாலு சக்கரம் ஒரு ஆர்ஸி புக் போறும். ஒரு தடவை காரை இன்ஸ்பெக்ஷனுக்குக் கொண்டு

வந்துட்டா போறும். இதைக் கூட யாரும் தீவிரமா பார்க்கறதில்லை.''

''அப்ப நான் கூட கார் வாங்கலாம்னு சொல்லு'' என்றேன் சந்தோஷத்துடன்.

''வாங்கலாம். ஆனா, உங்களுக்கு கார் ராசி மூஞ்சில கொஞ்சம் கூட இல்லை!''

''அது என்ன கார் ராசி?''

''கார் வெச்சுக்கறாப்பல ஒரு தேஜஸ்! ம்ஹூம்! இருக்கிற வெஸ்பா போறும். அதையே சரியா ஓட்ட கத்துக்கணும்.''

எனக்குக் கோபம் வந்து, ''போயா... உனக்கென்னய்யா...'' என்று சத்தம் போட்டேன்.

''எனக்கு ஒண்ணுமில்லைதான். இதோ, அப்ளிகேஷன். போடும் லோனுக்கு மனு!''

ஒரு வாரத்தில் பங்களூரில் இருந்த அத்தனை 'இரண்டாம் கை' கார்களையும் பார்த்தாயிற்று. 'சிங்கிள் ஓனர், ரேடியல் டயர், ரீபோர்' போன்ற சொற்றொடர்களெல்லாம் அத்துப்படி ஆயிற்று. இந்த நாட்களில்தான் ருக்மிணியைச் சந்தித்தேன்.

பெண்ணல்ல. ருக்மிணி கலரில் ஒரு ஃபியட் கார். சலிம் அலி என்கிற பிரிகேட் ரோடு வீடியோ வியாபாரியின் சொந்த கார். சலிம் நல்ல சிவப்பாக, நூறு நாள் பட டைரக்டர்போல தங்கத் தோடா போட்டுக் கொண்டு, வாசனையாக, கண்கள் எப்போதும் அலைய, ''சலாக்கே தேகோ'' என்றான். ருக்மிணியை அறிமுகப்படுத்திய புரோக்கர் முகத்தில் முள் தாடியும், பையில் நம்பர்கள் குறித்து வைத்த அழுக்கு நோட்டும், மப்ளருமாக, பான் போட்டுக் கொண்டு, உருதுவில் ருக்கின் மகிமைகளைச் சொன்னான் – சொல்லவே வேண்டியதில்லை. ருக்மிணியைப்



பார்த்தவுடன் காதல் கொண்டேன். ருக்மிணிக்குள்ளே ஜில்லுப்பு. கொசகொச என்று ஒரு நாய் பொம்மை கண்ணாடியருகில் தொங்க, இத்தாலிய ஒரிஜினல் ஸ்டியரிங்; புகை போட்ட கண்ணாடி சன்னல்கள்; மெத்தென்ற சீட்டுகளில் உட்கார்ந்தால், திடும் திடும் என்று கென்வுட் ஸ்டீரியோ சங்கீதம். அக்கணமே தீர்மானித்து விட்டேன், 'எப்படியாவது இந்தக் காரை, வலது கையை விற்றாவது வாங்கி விடுவது' என்று. சம்பத் 'முதலில் ஓட்டிப் பார்க்கலாம்' என்றான். அவனுக்குத்தான் கார் ஓட்டத் தெரியும். அவன்தான் எனக்குக் கற்றுத் தரவும் போகிறான். முன்பக்கம் சம்பத்தும், பின்பக்கம் நானும் புரோக்கரும் உட்கார்ந்து கொள்ள, பிரிகேடு ரோடு, காலக்ஸி, எம். ஜி. ரோடு, சிவாஜி நகர், ரஸ்ஸல் மார்க்கெட் என்று ஹை ஆக்டேன் கனவு போலச் சென்றது. பின்னணியில் குலாம் அலியின் கஜல். ஆரனை அழுத்தினால்... 'டுட்டுய்' என்று சங்கீத புஷ்பம்!

திரும்ப சலிமிடம் வந்து நின்றதும், ''சம்பத், இதை வெலை பேசிரு'' என்றேன்.

''சலிம் சோடையான காரையே வைத்திருப்பதில்லை. எனக்கு ஒரு 'மாருதி அலாட் ஆகியுள்ளது. ஏஸி, இம்போர்ட்டட் ஸ்டியரிங் இரண்டையும் எடுத்துக் கொண்டு 'ஒரிஜினல்' ஸ்டியரிங் போட்டுக் கொடுக்கிறேன். அறுபதாயிரம் ரூபாய் விலை'' என்றான் சலிம் அலி.

சம்பத்தைத் தனியாக அழைத்துச் சென்று பேசியதில், ''பாலு, இது அறுபதாயிரம் ஒர்த் இல்லை...''

''கார் எப்டி?''

''நல்ல கண்டிஷனில் இருக்கு. 'பிக்-அப்' எல்லாம் சரிதான். ஆனா, அறுபது பெறாது. நாற்பத்தெட்டுக்கு கேளு.''

''கோவிச்சுக்கப் போறாம்பா. தீப்பெட்டி கூட ஃப்பாரினா வெச்சிருக்கான் அவன்.''

''கேளேன்...''

கேட்டதில் சலிம் லேசாகப் புன்னகைத்தான்: ''ஸாப், அம்பத்தெட்டுக்கு ஒரு பார்ட்டி ஆஃபர் இருக்கு. ப்ளாக் மே தேத்தா ஹை.''

என்னால் அதிகப்படியாக அம்பதுதான் தர முடியும் என்றேன். இதற்கே சம்பத், 'ஏய்!'' என்று அதட்டினான்.

சலிம் அருகே இருந்த ஒரு 'ஹோண்டா'வைக் கிளப்பித் தடதடவென்று பிரிகேட் ரோடு எதிரொலிக்கக் கிளம்பி விட்டான். எனக்கும் ருக்மிணிக்கும் பிராப்தமில்லை என்று பிரிந்தாலும், மனசுக்குள் அந்தக் கார் உறுத்திக் கொண்டே இருந்தது. அதற்கப்புறம் பார்த்த காண்டாமிருகம் மாதிரி அம்பாஸடர், சோனி ஹெரால்டு, உடலெல்லாம் தேமல்களுடன் ஃபியட் எதிலும் நாட்டம் போகவில்லை. 'ருக்மிணி... ருக்மிணி!'

''யாரு ருக்மிணி?'' என்றாள் மனைவி, நடுராத்திரியில்.

''காரு'' என்றேன்! என்னை ஒரு மாதிரி பார்த்தாள்.

இருபதாம் தேதி, புரோக்கர் என் ஆபீஸ் நம்பரை எப்படியோ தேடிப் பிடித்து போன் பண்ணிவிட்டான்:

''சலிம் அம்பத்திரண்டுக்கு மன்ஜுராம் (சம்மதம்).''

''என்னால் அம்பதுக்குமேல் கொடுக்க முடியாது என்று சொன்னேனே...?''

''சரி, அம்பதே கொடு. ஒரு மூணு நாளைக்குள் ஏற்பாடு பண்ணிருங்க. சலிமுக்கு உம் முகத்தைப் பிடிச்சுப் போச்சு. அவருக்கு பணம் முக்கியமில்லை, அதான்'' என்றான். எனக்கு சந்தோஷம் பிரவாகமாக மனசுக்குள் பாய, ரங்காச்சாரியை மனுப்போட சந்தித்தேன்.

''அம்பதா! காருக்கா? ஏன்யா, உனக்கு ஏதாவது பைத்தியமா?''



செவிட்டில் அறைய வேண்டும்போல கோபத்தை அடக்கிக் கொண்டு, ''யோவ்... உமக்கு என்ன... அப்ளிகேஷன் பாரம் கொடுக்க வேண்டியதுதானே?'' என்றேன்.

''கம்பெனில முப்பதாயிரம்தான் லோன் தருவா... தெரியுமோல்லியோ?''

''தெரியும்.''

''இருவதாயிரம் கடனா?''

''உமக்கென்னய்யா...?''

''ஆமா! எனக்கென்ன'' என்று மனுத் தாளைக் கொடுத்தார். அவருக்கென்ன? பொறாமைதான்! அவர் கிரேடுக்கு இந்த ஸ்கீம் கிடையாது. கம்பெனி செலவில் கார் வாங்குகிறானே என்று எரிச்சல். இவனும் நண்பன், சம்பத்தும்தான் நண்பன்! எத்தனை வித்தியாசம்? தீர்மானித்த கையோடு மேற்கொண்டு இருபதாயிரத்துக்கு நிமிஷமாக ஏற்பாடு பண்ணித் தந்தான். ஸ்கூட்டரை விற்றதில் எட்டாயிரத்து சொச்சமும், மச்சினனிடமிருந்து அஞ்சாயிரமும், கங்கம்மா சர்க்கிளில் அம்பிகா ஃபைனான் ஸிலிருந்து ஏழாயிரம் என்று ஏற்பாடு பண்ணி விட்டான். லோன் ஸாங்ஷன் ஆவதற்குள் காயத்ரிக்கு ஒரு முறை கொண்டு காட்டினேன், ருக்மிணியை.

''ரொம்பப் பணக்கார கார் மாதிரி இருக்கே...'' என்றாள் என் மனைவி.

''உக்காந்து பாக்கணும்... புஷ்பம்'' என்று ருக்மிணியை, மூடின கருங்கதவுகளுக்கு உள்ளே எட்டிப் பார்த்து, மேனியெல்லாம் தடவிக் கொடுதேன். அதன் 'டாஷ்போர்டு' ஜாலங்களையெல்லாம் சுட்டிக் காட்டினேன். ''நமக்கு எதுக்கு காரு?'' என்றாள்.

அம்பதாயிரத்தை ஒரு சேரப் பார்த்திருக்கிறீர்களோ? சலிம் செக் வாங்க மறுத்து விட்டதால், புது நோட்டும்

பழைய நோட்டுமாக சாமி படத்துக்கு முன்னால் வைத்து, ராகு காலமில்லாமல் பார்த்து எட்டு தடவை 'ஜாக்கிரதை, ஜாக்கிரதை' என்று சொல்லி வழியனுப்பப்பட்டு, சம்பத்துடன் ஆட்டோ ரிக்ஷா பிடித்து பிரிகேடு ரோடு வந்தேன்.

மத்தியான வேளை. கூட்டம் அதிகமில்லை. ஆட்டோவுக்கு, தனியாக வைத்திருந்த பணத்தில் இருபது ரூபாய் கொடுத்து, சில்லறை வாங்கிக்கொண்டு பணப் பையை எடுக்க... ஐயோ! பணப் பை எங்கே!

''என்ன பாலு...?'' என்றான் சம்பத்.

''ஒண்ணுமில்லை... இந்தப் பைல பணம் வெச்சிருந்தேன்.''

''எவ்ள பணம் ஸார்?'' என்றான் ஆட்டோ.

''நான் இங்கதான் இருக்கேன் ஸார்... சரியா பாருங்க ஸார்...''

சட்டைப் பையில், ஆட்டோ சீட்டைப் புரட்டி, பின்பக்கம் கொஞ்ச தூரம் சாலையில்... சம்பத், ''என்ன சொல்ற பாலு... யூ மீன் அம்பது ரூபாய் ரொக்கமா வெச்சிருந்த பையா!?''

''ஆமா சம்பத்... எப்டி போச்சுன்னு!''

''ஸார், எம் பையை வேணா பாத்துரு ஸார்! அப்புறம் தகராறு வேணாம்!''

ஆட்டோ அப்படியே நிற்கிறது. சீட்டில் பை இல்லை. சம்பத் குஷனையும் பின் சீட்டையும் புரட்டித் தள்ளுகிறான். ம்ஹூம்! அம்பதாயிரம் ரூபாய் ரொக்கம் வைத்த பை, மாயமாய் போய் விட்டது! 'வழில எங்கயாவது விழுந்திருக்குமா சம்பத்? தெருக் கோடில தொட்டுப் பார்த்துண்டேனே...''



எனக்கு இழப்பின் முழு அர்த்தம் புரிய ஆரம்பிக்க, கை நடுங்கத் துவங்கியது. உதடுகள் துடிக்க, நாக்கு உலர... மயக்கம்போல வந்தது.

''அம்பதாயிரம் ரூபா சம்பத்து...'' என்றேன். வயசான பின் முதல்முறை அழுதேன்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து, ''இவ்வளவு அஜாக்கிரதையா இருப்பீங்களா...?'' என்றார்.

விவரமாக விசாரித்தார். கம்ப்ளெயிண்ட் எழுதிக் கொடுத்தான் சம்பத். எனக்குப் பிரமை பிடித்தாற்போல இருந்தது. சலிம் அலி ரொம்ப அனுதாபத்தோடு, ''என் காருக்கு உங்களை அடைய அதிர்ஷ்டம் இல்லையென்று சொல்ல வேண்டும். பணம் நிச்சயம் கிடைத்துவிடும். இந்த போலீஸ் நிலையத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியக்காரர்கள். கண்டுபிடித்து விடுவார்கள்'' என்றான். காயத்ரிக்குச் சொல்லி அனுப்பி, அவள் அலறியடித்துக் கொண்டு வந்து சாவு போல அழுதாள். ''பையைத் தோளில மாட்டிக்கக் கூடாது? சம்பத் ஸார், இவருக்குத்தான் சாமர்த்தியம் போறாதுன்னு தெரியுமே! நீங்களாவது பார்த்துக்கக் கூடாதா?''

சம்பத் அவளைச் சமாதானப்படுத்தி, ''என்ன பண்றது... வேற எதோ பெரிசா வர இருந்தது இதோட போச்சுன்னு வெச்சுக்குங்க'' என்றான். போலீஸ்காரர்கள் போட்டோவெல்லாம் காட்டி, தீவிரமாக விசாரித்தார்கள். ஆட்டோ ரிக்ஷாக்காரரையும் துருவிக் கேட்டார்கள். எனக்கு வழியில்தான் விழுந்திருக்கும் என்று தோன்றியது. அட்ரஸ் கூட இல்லை. யாராவது நாணயமானவர்கள் கையில் கிடைக்கும் என்றான் சம்பத். கிடைத்து, அவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு சேர்ப்பித்து விடுவார்கள் என்றான். மனைவி, ''ஐயோ... ஐயோ! கடன்லே மூழ்கிடப் போறோமே'' என்று அங்கலாய்த்தாள். பரவால்லை

சமாளிக்கலாம் என்று சம்பத் சொன்ன ஆறுதல் ஒன்றுதான் அந்த முனி அடித்த வேளையில் இதமாக இருந்தது.

ஒரு வாரமாகியும் பணம் கிடைக்கவில்லை. சம்பத்தும் நானும் மனைவியும் கொஞ்சம் கவலை விலகின வேளையில் அதைப் பற்றித் தீவிரமாகப் பேசினோம்:

''த பாரு பாலு, உனக்கு இந்த சமயத்தில பாவம்னு ஆறுதல் தேவையில்லை. நடைமுறையில எப்படி இந்தக் கடனைச் சமாளிக்கிறதுன்னு பார்க்கணும்!''

''சம்பத், நான் காலி'' என்றேன்.

இரு... திங்ஸ் ஆர் நாட் தட் பேட்! மொத்தம் அம்பதாயிரத்தில கம்பெனில வாங்கின முப்பதாயிரத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம். அவா சம்பளத்தில படிப்படியா கழிச்சுக்கட்டும்!''

''ஐயோ! கார் எங்கன்னு அவா கேட்டா...?'' என்றாள் காயத்ரி.

''ஆர்ஸி புக் ஒண்ணு, ஃபார்ம் எய்ட்டீன் எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்றேன்!''

''என்ன சொல்றே சம்பத்து...?''

''த பாரு... உனக்கு நடந்தது அநியாயம். பெரிய அநியாயம். உன்னைப்போல அப்பாவிங்களுக்கு இந்த மாதிரி ஏற்படறதைப் பார்த்தா எனக்கு தர்மம், கடவுள் எல்லாத்திலயும் நம்பிக்கை போயிடுத்துப்பா. உனக்கு ஏன் இந்த மாதிரி நிகழணும்? யாருக்கு நீ தீங்கு பண்ண? சொல்றதைக் கேளு. பி. எஃப்-ல் ஒரு லோன் போடு, 'மனைவிக்கு உடம்பு சரியில்லைன்னு' சொல்லி. கார் வாங்கினதா அத்தாட்சிக்கு ஆர்ஸி புக் எல்லாம் நான் ஏற்பாடு பண்ணித் தரேன்.''

''சம்பத், எனக்கு பயமா இருக்கே... ஏதாவது ஆயிடுத்துன்னா?''



உனக்கு ஆக வேண்டியதெல்லாம் ஆயிடுத்தப்பா! அம்பதாயிரம் தொலைஞ்சது போதாது?''

ஆபீசில் முப்பதாயிரம் கடனுக்காக ஆர்ஸி புத்தகம் ஏற்பாடு பண்ணிவிட்டான். நான் ஒரு ஹெரால்டு கார் வாங்கியிருப்பதாக நிரூபிக்கப்பட்டு, மாதம் நானூற்று ஐம்பது ரூபாய் அலவன்ஸுக்கும் ஏற்பாடு பண்ணி விட்டான். இருநூற்றம்பது ரூபா லோனுக்காகக் கழித்தது போக, நிகரமாக மாசம் நூற்றைம்பது! வியாதி என்று சொல்லி பி எஃப் லோன், சம்பத் முன் வந்து வட்டியில்லாமல் கொடுத்த இரண்டாயிரம்... எல்லாம் சேர்த்து ஒப்பேற்றி வைத்துவிட்டான். சம்பத்தைப்போல ஒரு நண்பன் கிடைத்ததுதான் எத்தனை பாக்கியம் என்று எண்ணிக் கொண்டிருக்கையில்... எப்படியோ அந்தப் பேரிழப்பைச் சமாளித்து விட்டோம்.

ரங்காச்சாரிக்கு எப்படியோ மூக்கில் வியர்த்து விட்டது.

''பாலு, எனக்கு எல்லாம் தெரியாது என்று நினைப்பா... என்னிக்காவது ஒரு நா மாட்டிண்டா வேலை போயிடும், தெரியுமோல்லியோ?'' சம்பத் கூட இருந்தான்.

''த பாரு... ரங்காச்சாரி! அவங்கிட்ட கார் இல்லைங்கறியா? இப்பவே வா வீட்டுக்கு. காட்டறனா இல்லையா பாரு...''

''எனக்கு என்ன? காட்றவனுக்குக் காட்டினா சரி.''

''பின்ன கம்முனு இருக்கியா!''

''த பாரு... நான் யார் கிட்டயும் கம்ப்ளெயிண்ட் பண்ணப் போறதில்லை. ஆனா, இந்த மாதிரி விஷயமெல்லாம் வெளியே வந்துரும்!''

ரங்காச்சாரியைப் போல மோசமான ஆசாமி இருக்க முடியாது. அவன்தான் வத்தி வைத்திருக்க வேண்டும்.

கவர்ன்மெண்ட் ஆடிட், விஜிலன்ஸ் ஸ்குவாட் என்று, சொல்லி வைத்தாற்போல வந்தார்கள். இந்த மாதிரி 'லோன்' கேஸ்களையெல்லாம் நோண்டினார்கள். என்னுடைய கார் லோனைப்பற்றி விசாரித்ததில், காரில்லாமல் லோன் என்று கண்டுபிடித்து உடனே என்னை வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள்.

அதைத் தொடர்ந்த நான்கைந்து மாதங்களைச் சொல்லி மாளாது! அங்காடி நாய்போல, வேலை வேலைன்னு கம்பெனி கம்பெனியாக அலைந்ததும், இருக்கிறதெல்லாம் விற்றதும், முதன்முதல் ஏழ்மையால் ஏற்படும் பசி என்பதன் முழு அர்த்தம் எனக்குப் புரிந்ததும், காயத்ரியை அடித்ததும் குடித்ததும்... கொடுமை! இந்த நாட்களில் சம்பத் ஒருவன்தான் நிச நண்பனாக என்னை வந்து விசாரித்தான். ஒரு சந்தோஷ சமாசாரம் சொன்னான்:

''உன் போஸ்ட்டில என்னை ப்ரமோஷன்ல போட்டிருக்காம்பா. எனக்கு ரொம்ப கில்ட்டியா இருக்கு. பாலு, நீ வேலையில்லாம இருக்கிறதைப் பார்க்க எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. பீண்யாவில ஒரு கம்பெனியில ஒரு வேலை இருக்கு. சம்பளம் அவ்வளவு இருக்காது... சின்ன வேலைதான்...''

''பரவால்லை சம்பத்! எப்டியாவது ஏதாவது வேலை கிடைச்சா போதும்.''

''அப்ப திங்கக்கிழமை இந்த அட்ரஸ்ல போய், சம்பத் அனுப்பிச்சான்னு விஜயகுமார்ங்கிறவரைப் பாரு...''

என் மனைவி, ''சம்பத், உங்களுக்கு எப்படி நன்றி சொல்றது...?'' என்றாள்.

''இல்லையம்மா, நல்லது நினைக்கப் போயி இப்படி வேலை போயிடுத்தேன்னு எனக்கு ரொம்ப குற்ற உணர்ச்சியா இருக்கு.''



''நீங்க நல்லதை நினைச்சுத்தான் செய்திங்க! உங்க மாதிரி நண்பர்கள் ஆசீர்வாதத்தில மறுபடி தலையெடுத்துடு வார்னு நம்பிக்கை...''

''நிச்சயம். பாலு, எப்பவுமே கஷ்டம் தொடர்ந்து வந்திண்டிருக்கக் கூடாது!''

நியாய அநியாயங்கள் எனக்குப் புரியவில்லை. ஆனால், சம்பத் போன்ற நண்பர்கள் உதவியில் என்னால் மறுபடி தலைதூக்க முடியும் என்றுதான் தோன்றியது.

சம்பத் சொன்ன கம்பெனியில் எனக்கு வேலை கொடுப்பதாக, ஆறு மாதம் கழித்து வரச் சொன்னார்கள். வீட்டில் இருந்த பித்தளைப் பாத்திரங்களையெல்லாம் சிக்பேட்டையில் கொண்டுபோய்க் கொடுத்து விற்று விட்டு, எங்கேயோ குழந்தைக்கு பனியன் ஸேல் போட்டிருக் கிறார்கள் என்று போகும்போது 'சுக் சாகரில்' சம்பத்தைப் பார்த்தேன்.

சலிம் அலியுடனும் மற்றொருவருடனும் பேசிக் கொண்டிருந்தான். மேசை மேல் உயரமான டூ இன் ஒன். ஐஸ்கிரீமுடன், ''பாலு'' என்று என்னை அவன்தான் கூப்பிட்டான். அவனருகில் சலிம் அலி, ''என்ன, பணம் கிடைத்ததா?'' என்றான்.

''இல்லை'' என்றேன்.

''நான் தினமும் அல்லாவைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். உன் பணம் கிடைக்கட்டும் என்று. அந்தப் பணம் நிச்சயம் ஒரு நாள் கிடைத்து விடும்.''

''விஜி வேலை கொடுத்தானா?'' என்றான் சம்பத்.

''ஆறு மாசம் கழித்து வரச் சொல்லியிருக்கார்...''

''நிச்சயம் கொடுத்து விடுவான். நிச்சயம்...''

நான் அவனருகில் இருந்த மூன்றாமவரைப் பார்த்தேன்.

''ஆளு யார் தெரியறதா பாலு?''

''அதான் யோசிக்கிறேன்.''

''அன்னிக்கு நீ பணம் தொலைச்ச பாரு. அன்னிக்கு ஆட்டோவில வந்த பாரு. அதே ஆளு!''

சட்டென்று முகம் ஞாபகம் வந்தது.

''பணம் கிடைச்சுச்சா சாரு...?''

''இல்லைப்பா...''

''கிடைச்சுரும்... கிடைச்சுரும்.''

''நான் வரட்டுமா சம்பத்!''

''உன் கேஸைப் பத்திதான் பேசிண்டிருந்தோம்'' என்றான். என்னைப் பார்த்துப் புன்னகைத்தான்.

என் அருகில் தனியாக வந்தான். ''பாலு, பணம் வேணுமா?'' என்றான்.

''வேண்டாம்!''

''வெச்சுக்கப்பா'' என்று உள்ளங்கையில் அஞ்சு ரூபாயை அழுத்தினான்.

சம்பத் போன்ற நண்பர்கள் இருப்பதால்தான் என்னால் இந்தக் கஷ்டமான நாட்களைச் சமாளிக்க முடிகிறது.

★

# பென்சில்

*சிறிய சிறுகதை (**Short Short Story**) என்று ஒரு வகை உண்டு. ஒரு பக்கக் கதைகள் உதாரண மெனினும் அவற்றை எழுதுவது ரொம்ப கஷ்டம். சுவாரஸ்யமான சி. சி. கதைக்கு ஒரு நல்ல உதாரணம் இது: (கதைக்கரு என்னுடையதல்ல)*

''எதுக்கய்யா கண்ணைக் கட்டறீங்க?'' என்றான் துரை.

''எதுக்கா? அங்க வா சொல்றம்.''

கவலையில்லையென்றாலும் துரை அதை எதிர் பார்த்தான். வீரய்யனின் மறைவிடத்துக்குக் கண்ணைக் கட்டாமல் அழைத்துச் செல்ல அவர்களுக்கு என்ன பைத்தியமா? வீரய்யனைக் கொல்ல மூன்று கோஷ்டியினர் விரும்பிக் காத்திருந்தார்கள். மாநில போலீஸ், மத்திய போலீஸ், வீரய்யனின் கடத்தல் எதிரி கணேசலிங்கம் குழுவினர்.

அனைவரும் துரையைத்தான் நாடினார்கள். 'எப்படி யாவது வீரய்யனைத் தீர்த்துக் கட்டிட்டா உனக்கு நிகர லாபம் ஒரு கோடி ரூபாய் துரை. நீ இந்த வாடகைக் கொலை செய்யற தொழிலையே வுட்டுரலாம்.'

''வீரய்யனை முதல்ல எப்படி அடையறதுன்னு சொல்லுங்க.''

''அதுக்காகத்தான் பிரமாத ப்ளான் போட்டிருக்கோம் துரை. உனக்கு எங்க எல்லாரையும் பத்தின ரகசியங்கள், கர்நாடக போலீஸ், தமிழ்நாடு போலீஸ் ப்ளான் முழுக்கத் தெரிஞ்சிருக்கிறதாவும், நீ ஒரு ஸி.ஐ.டி. உளவாளின்னும் வதந்தி பரப்பியிருக்கோம், சக்லேச்பூர்ல வீரய்யனுடைய ஆளுங்க உன்னை நிச்சயம் கடத்தி வீரய்யன் கிட்ட அவனுடைய மறைவிடத்துக்குக் கூட்டிப் போவாங்க. போய் உன்னை நாலு தட்டு தட்டுவாங்க. தாங்கிக்க. வீரய்யனைப் பிடிக்கிறதுக்கு போலீஸ் ப்ளான் என்னன்னு கேப்பாங்க. நம்பும்படியா ஒரு ப்ளான் சொல்றோம். அதைச் சொல்லிடு.''

''அதாவது அவங்கிட்ட வசமா மாட்டணும்.''

''அதான் ஐடியா. அப்புறம் வீரய்யனைக் கொல்றது உன் வேலை. எப்படிக் கொல்வ?''

''அதை நான் பாத்துக்கறேன். முப்பது வருஷமா இதேதான் செய்துகிட்டிருக்கேன். அது என்ன முதல்வர்? அருணாசலா? காட்ல வெச்சு கொன்னனே பேர் கூட மறந்துருச்சய்யா. எத்தனை பேரு?''

''உன் தீர பிரதாபங்கள் எல்லாம் தெரிஞ்சுதான் உன்னை அனுப்பறம் துரை.''

எதிர்பார்த்தது நடந்தது. வீரய்யனுடைய ஆட்கள் துரையின் அறையில் இரவில் புகுந்து முரட்டுத்தனமாகக் கையைக் காலைக் கட்டி, கண்ணையும் கட்டிக் கன்றுக் குட்டியைப் போல் ஏற்றினார்கள்.

அது லாரியா ஜீப்பா, பாதை மலைப்பாதையா சரிவா, இறக்கமா ஏற்றமா எதுவும் கவனிக்கவில்லை. வீரய்யனிடம் அழைத்துச் சென்றால் போதும். மற்றதை அவன் பார்த்துக் கொள்வான். துரை கண்ணயர்ந்தான்.



அவனைக் கண் கட்டி அழைத்துச் சென்ற வண்டி சுற்றிச் சுற்றி வந்து ஓர் இடத்தில் நின்றது.

''கட்டை அவுத்துட்டீங்கன்னா?''

பளீர் என்று அறை விழுந்தது. ''எங்க தலைவரை நீ பார்க்கக் கூடாது. இந்த இடத்தையும் பார்க்கக் கூடாது. ஏதாவது முயற்சி பண்ணே மூளை கூழாயிடும்.''

''வேண்டாம். எனக்கு மூளை வேணும்.''

தரதரவென்று இழுத்துச் செல்லப்பட்டான்.

கண்பட்டையை நீக்க முயற்சி எதுவும் செய்யவில்லை. சின்ன தப்பு செய்தாலும் சுட்டுவிடும் டைனமைட் சூழ்நிலை அது. 'ஜாக்கிரதை.' அவர்கள் அனைவரும் துப்பாக்கி விசைகளைத் தயார் செய்யும் சின்னச் சின்ன சப்தங்கள் எச்சரித்தன.

''இவருதானா துரை?'' - அவனை ஒரு வியர்வை மணம் அணுகியது. நிச்சயம் வீரய்யனின் குரல்தான். ''ஆமாம், வீரு.''

''சொல்லு துரை. உனக்கு என்ன தெரியும்?''

''சொல்ல மாட்டேன்,'' என்றான். நம்பிக்கை வர முதலில் மறுக்கவேண்டும்.

''கொஞ்சம் அய்யாவுக்கு முகத்தில ரத்தலங்காரம் பண்ணுங்கடா.'' யாரோ ஒருவனுடைய புறங்கை தாடையில் வெடிக்க உதட்டோரத்தில் கசிவதை நக்கிக் கொண்டான்.

''எப்படி இருக்கு?''

''வலிக்குது. புளிக்குது.''

''சொல்லு?''

மெல்ல மெல்லத்தான் சொன்னான். தமிழ்நாடு போலீஸ் ஸி.ஆர்.பி.எஃப். ஒரு கம்பெனியும் கர்நாடகாவும் சேர்ந்து கோகரண் பக்கம் சூழ்வதாகவும் சொல்லிக் கொடுத்த

அத்தனை விவரங்களையும் கசிய வைத்தான். கமாண்டர் பேர் சொன்னான். ஆட்களின் எண்ணிக்கை, அவர் களிடமிருந்த ஆயுத விவரங்கள் எல்லாம்.

''சபாஷ்! விஷயம் தெரிஞ்சவன்தான். எனக்கு உழைக்கிறியா?''

''இந்த மாதிரித் தகவல் அடிக்கடி கொண்டாறியா? நல்லாக் கவனிச்சுக்கறேன்.''

''எத்தனை தருவீங்க?''

''அவங்க எத்தனை தராங்களோ, அதைவிட இரண்டு மடங்கு.''

''எனக்கென்ன. சரிதான்.''

''காட்டிக் கொடுத்தே என்ன ஆகும் தெரியுமில்லை.''

''தெரியுது. ஓர் அடியே சொர்க்கத்துக்குக் கிட்டக் கொண்டு போயிருச்சே. மண்டைக்குள்ள மணியெல்லாம் கேட்டுருச்சு.''

வீரய்யன் சிரித்தான்.

''கட்டை அவுக்காம இவனை வீட்டில கொண்டு வுட்டுருங்கடா,'' என்றான் வீரய்யன்.

துரை தான் வந்த காரியத்தைச் செய்து விட்டான். தன் காலால் காலை அரிப்பதுபோல சொறிந்து கொள்வதுபோல 'ஸாக்ஸ்'க்குள் இருந்த மெல்லிய பென்சிலை விடுவித்துவிட்டான். அதைச் சப்தமில்லாமல் தரையில் இடரிவிட்டான்.

சாதாரண பென்சில் அல்ல அது.

இன்னும் இருபது நிமிடத்தில் டைம் ப்யூஸ் வைத்து வெடித்து இந்த இடத்தையே சுக்குநூறாக்கக் கூடிய ஆர்.டி.எக்ஸ் வெடிப் பென்சில் அது. அவன் அதை வைத்துவிட்டதை யாரும் கவனிக்கவில்லை.



துரையை மீண்டும் அவர்கள் சுற்றிச் சுற்றி அழைத்து வந்து எங்கே கவர்ந்தார்களோ அதே அவன் அறையில் கொண்டுவிட்டார்கள். ''திறக்கலாம் கண்கட்டை,'' என்ற சப்தம் கேட்டுத் திறந்தான்.

அவர்கள் யாரும் இல்லை.

கடிகாரத்தைப் பார்த்தான். போய்வர ஒரு மணியாகியிருக்குமா? இன்னும் சில நிமிஷந்தான் பாக்கி இருக்கும் அங்கே வெடிக்க. வீரய்யனும் அவனுடன் இருந்த அத்தனை பேரும் டமார்! என்ன அருமையான யோசனை. காலின் இடுக்கில் ஓர் அரை பென்சில். அதை யாரும் கவனிக்காமல்... பார்த்தால் சாதாரண பென்சில் போலத்தான் இருக்கும்.

இதோ மேசைக்கருகில் இருக்கிறதே இதைப்போல்தான். இது எப்படி இங்கே?

துரை திடுக்கிட்டான்.

இந்தப் பென்சில் எங்கே வந்தது. இது... இது... இதுமாதிரித்தானே நான் ஒன்று அங்கே வைத்தேன். ஒருவேளை இதேதானோ? சேச்சே எப்படி சாத்தியம்?

அவனுள் புயல் வேகத்தில் எண்ணங்கள் வீச துரை அந்தப் பென்சிலை எடுத்து ஆராய்ந்தபோது டமார் என்று வெடித்துத் துரையின் ரத்த மிச்சங்கள் சுவரில் சிதறின.

**தூ**ரத்தில் அந்த வெடிச் சப்தம் கேட்டபோது வீரய்யன் திரும்பிச் சென்று கொண்டிருந்தான். ''நல்ல ஐடியாடா முத்து. சுத்திச் சுத்திக் கண்ணாமூச்சி காட்டிட்டுத் துரை வீட்லயே மீட்டிங்க வெச்சுக்கிட்டது,'' என்றான்.

★

# அண்ணாசாலை 2094

கடிதத்தைப் பிரித்துப் படித்த டேவிட் மிக மகிழ்ந்தான்.

மகிழ்ச்சியை உடனே மனைவியிடம் பகிர்ந்து கொள்ளவும் விரும்பினான்.

பாக்கெட் தொலைத் தொடர்பு சாதனத்தை எடுத்துச் சில பொத்தான்களை அழுத்த-

சின்னத் திரையில் தேதி மினுக்கியது.

03.01.2094.

பிறகு அவனுடைய குடியிருப்புப் பகுதி தெரிந்தது.

அதற்குப்பின், 1,2,3,...47வது மாடி.

வீடு எண் 383.

வீட்டின் வாசலில் பூட்டு.

''மன்னிக்கவும். உங்களுடைய வீடு பூட்டப் பட்டிருக்கிறது. சற்றுக் கழித்து நானே அழைக்கிறேனே! காலம் தண்ணீர் போன்றது. அதுவரை உங்கள் வேலையைக் கவனியுங்கள்.''

வேலை?



அதைத்தான் இந்தக் குட்டி கம்ப்யூட்டர் பிசாசுகள் செய்து விடுகின்றனவே.

வார இதழைப் பிரித்தான்.

மெக்ஸிகோ சலவைக்காரி ஜோக்கை, திருச்சி எட்டிலிருந்து ஒன்பதாம் தமிழழகன் கேட்க-

அதற்கு இன்னும் சி.நா.கா. என அரசு பதில் தந்திருந்தார்.

இருக்கையை விட்டு எழுந்து ஜன்னல் வழியே கீழே நோக்கினான்.

நெட்டிலிங்க மரங்கள் குடைக்காளான்கள் சைஸில் தெரிந்தன.

பீப்... பீப்... பீப்.

தொலைத் தொடர்பு சாதனம் சிணுங்கி உயிர்த்தது.

திரையில் ஞானம். அவன் மனைவி தெரிந்தாள்.

மேனியில் வெண்ணெய் வளப்பம்.

''தொடர்பு கொண்டீர்களாமே. எது விஷயமாக?''

''நல்ல செய்திதான். அது சரி. நீ எங்கே போயிருந்தாய்?''

''மறந்து விட்டீர்களா? இன்று ரேஷன் கிழமை!''

''மை குட்னஸ். நீ ரேஷன் கடைக்குப் போயிருந்தாய் அல்லவா? எவ்வளவு கிடைத்தது?''

''வழக்கமான ஐந்து லிட்டர்தான். உங்களுடைய அப்பா, அம்மாவின் பெயர்களைச் சேர்த்திருந்தால் இன்னும் இரண்டு லிட்டர் தண்ணீர் அதிகமாகக் கிடைத்திருக்கும்!''

''இறந்து போனவர்களுடைய பெயர்களை ரேஷன் அட்டையில் சேர்ப்பது பாவமில்லையா?''

''பாவ, புண்ணியத்தைப் பார்த்தால் மாதத்துக்கு இரண்டு தடவைதான் குளிக்க முடியும். என் வாயைக் கிளறாமல் நீ சொல்ல வந்ததைச் சொல்!''

''அண்ணாசாலைக்குச் செல்ல நமக்கு அனுமதி கிடைத்திருக்கிறது!''

''வா...வ்! நம்முடைய நீண்ட நாளைய கனவு. என்றைக்கு?''

''14.01.2094 அன்று!''

''அன்று தமிழர் திருநாள் அல்லவா?''

''ஆம். அதனால்தான் கொஞ்சம் அதிகமானவர்களுக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. பை... மாலை பேசுவோம்!''

**ஸ்**பரிசம் பட்டதும் கதவு திறந்து கொண்டது.

ஓடி வந்த ஞானம் அவனைக் கட்டிக் கொண்டாள்.

காலையில் அவன் சொன்ன சந்தோஷச் செய்திக்காக ஒரு முத்தம் தந்தாள்.

''டேவிட்! நான் நிரம்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நீ ஏன் இப்படி வாடிப் போயிருக்கிறாய்?''

''மாடிகளில் இறங்கி வந்தேன். குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தாயேன்!''

''விளையாடுகிறாயா? அடுத்த வாரம் வரை நம்முடைய அத்தியாவசியத் தேவைகளுக்கே தண்ணீர் போதுமா என நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். பால் கொணர்கிறேன். நல்ல பிள்ளையாகச் சாப்பிடு!''

''சற்று நேரம் கழித்துச் சாப்பிடுகிறேன். இதற்குமுன் நீ அண்ணாசாலைக்குப் போயிருக்கிறாயா?''

''சின்ன வயதில், அப்பாவின் கையைப் பற்றிக் கொண்டு அங்கே சென்றது புகை மூட்டம் போலத் தெரிகிறது. தெளிவாக நினைவில்லை. நீ?''

''கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது ஹாஸ்டல் சுவரேறிக் குதித்து நண்பர்களுடன் திருட்டுத் தனமாக ஒரு முறை போனதோடு சரி!''



''பதினான்காம் தேதி காலையில் புறப்பட்டால் போதுமல்லவா?''

''எதற்கும் முதல் நாள் இரவே புறப்பட்டு விடலாம்!''

''போகலாமா?'' என்றாள் ஞானம்.

கீழே வந்தார்கள்.

கார் நகர்ந்தது.

தாம்பரம் நுழைவாயிலில் கான்ஸ்டபிள் காரை நிறுத்தினார்.

''நீங்கள் எங்கே போகிறீர்கள்?''

''அண்ணாசாலைக்கு!''

''மவுண்ட் ரோட்டுக்குச் செல்ல தங்களிடம் அனுமதிச் சீட்டு உள்ளதா!''

சீட்டைக் காட்டினான்.

''எனக்கு ஒரு சந்தேகம். மவுண்ட்ரோடு, அண்ணாசாலை இரண்டுமே ஒன்றுதானே!''

''மவுண்ட் ரோடு என்ற பெயரை அண்ணாசலை என மாற்றி சுமார் 120 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. எனினும் மிகப் பெரும்பாலானோர் மவுண்ட் ரோடு என்றே சொல்கின்றனர்!''

''சரி டேவிட்! இப்படி ஊர்ந்தபடி போனால் நாம் எப்பொழுது அங்கே போய்ச் சேருவது? ம்... இதற்குத்தான் ஒரு ஹெலிகார் வாங்கு என்று சொல்கிறேன். நீ கேட்பதாகத் தெரியவில்லை.''

சிரித்தான் டேவிட்.

''எதற்கு, ஏன் இந்தச் சிரிப்பு?''

''மேலே பார். புரியும்.''

போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டு மேலே நிறைய ஹெலிகார்கள் நின்ற இடத்திலேயே சுழன்று கொண்டிருந்தன.

நடந்தார்கள்.

''கூட்டம் அதிகமாக இல்லையே டேவிட்!''

''தினமும் அதிகபட்சம் ஐந்தாயிரம் பேர்களுக்குத் தான் அனுமதி. அதுவும் இல்லாமல் நாம் வந்திருப்பது அதிகாலை வேளை!''

அண்ணா மேம்பாலத்தில் ஏறி இறங்கினார்கள்.

இன்னும் சற்றுத் தொலைவுதான்.

அந்தப் பகுதியில் கூட்டம் அடர்த்தியாக இருந்தது. மிஷின்தனமாக 'கைடி'ன் குரல் ஒலித்தது. ''அண்ணாசாலையிலேயே மிகப் பழைய கட்டிடம் இது. நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் கட்டியது.

''அம்மாடியோவ் இவ்ளோ சின்னக் கட்டிடத்தை எப்படிக் கட்டியிருப்பாங்க!''

டேவிட்டும், ஞானமும் வியப்புடன் வேடிக்கை பார்த்தனர் - எல்.ஐ.சி. கட்டிடத்தை!

★

# பீட்டர்

நான், சிவா, பீட்டர் மூவரும் வருஷ ஆரம்பத்திலேயே நண்பர்கள் ஆனோம். காரணம் மூவருக்கும் தனி ரூம் கொடுக்கும் வரை தற்காலிகமாக பாரக்ஸ் போன்றிருந்த அந்தப் பெரிய அறையைக் கொடுத்தார்கள். பிற்பாடு சிங்கிள் ரூம் மூவருக்கும் கிடைத்தபோது சினேகிதம் வலுப்பட்டு வேண்டாம் இந்த அறையிலேயே தொடர்ந்து இருக்கிறோம் என்று சொல்லிவிட்டோம். சிவசாமிதான் மூவரில் மிகவும் கெட்டிக்காரன். ரொம்ப சுத்தமும் ஒழுங்கும் கொண்டவன். அவன் சன்னலோரக் கட்டிலையும் மேசையையும் ஒரு அசெப்டிக் துல்லியத்தில் வைத்திருப்பான். வேட்டிகள் நீட்டாக மடிக்கப்பட்டு கொடியில் தொங்க, செருப்பு, பூட்ஸ், பாலிஷ் எல்லாம் நியமித்த இடங்களில் இருக்கும். பற்பசை சீராக பிதுக்கப்பட்டிருக்கும். பிளேடு உறையில் இதுவரை எத்தனை சவரங்கள் ஆகியிருக்கிறது என்று டிக்மார்க் போட்டிருக்கும். மணி மணியாக கையெழுத்து. நோட்ஸ் எல்லாம் ஒழுங்காக எழுதியிருப்பான். ஒரு கிளாஸ் விட மாட்டான். எப்போதும் முதல் ராங்க். இரண்டாவது, மூன்றாவது என்று வந்து விட்டால் கடுப்பாகிவிடுவான்.

சிவா எதுக்குப்போயி இந்தப் பாடுபடறே வாழ்க்கைல 'ராங்க்கா' முக்கியம் என்று பீட்டர் அவனை சமாதானம் செய்து 'ப்ளே பாய்' இதழ் ஒன்றைக் கொடுத்து 'படி ஜன்ம சாபல்யாமாகும்' என்பான். நான் நடுவாந்தரம். தேவைப்பட்ட அளவு படித்து தேவைப்பட்ட அளவு மார்க் வாங்கி தடுக்காமல் பாஸ் செய்து விடுவேன். பீட்டர் எல்லாவற்றிலும் நேரெதிர். ரூமுக்குள் வந்த உடனேயே சிவாவின் பாக்கெட்டைத் துளாவி எதாவது சில்லறை, நோட்டு இருந்தால் சுவாதீனமாக எடுத்துக் கொண்டு சிகரெட் பற்ற வைத்து ஆஷ்ட்ரேயை சிவாவின் படுக்கை மேல் வைத்துக் கொண்டு குடிப்பான். எப்போதும் என் படுக்கையிலோ, சிவாவின் படுக்கையிலோதான் படுப்பான். அவன் படுக்கை பூரா பழைய துணி, நியூஸ் பேப்பர், எரால்ட் ராபின்ஸ் என்று பலதும் இருக்கும். ஒரு நாள் 'உன் படுக்கையை க்ளீன் பண்ணா பாம்புதாண்டா வரும் பீட்டர்' என்றான் சிவா.

''அதை எதுக்கு க்ளீன் பண்ணனும். கடவுள் நம்மை படைச்சது எதுக்குத் தெரியுமா சிவா? குளிக்கறதுக்கு இல்லை. களிக்கிறதுக்கு.... மலையாளக்களி.''

''வேண்டாம் சொல்லாதே.''

''பீட்டர்! குளிடா வேர்வை நாத்தம் தாங்கலை''- நான்.

''என்ன வெளையாடறே... போன வாரம்தானே குளிச்சேன். ரொம்ப குளிச்சா ஜள்ப் புடிச்சுக்கும் ஐயரே'' என்று தன் கித்தாரை எடுத்து வைத்துக் கொண்டு அதன் கம்பிகளை இறக்கி டொய்ங் டொய்ங் என்று பிட்ச் பைப்பை வைத்து ட்யூன் பண்ணி ராத்திரி பதினொரு மணிக்கு 'வி ஆல் லீவ் இன் எ யெல்லோ சப்மரின்' என்று அற்புதமாகப் பாடுவான்.



பற்பல திசைகளிலிருந்தும் ''ஷாடாப்!'' என்று அதட்டல்கள் கேட்கும்.

ஷேவ் பண்ண மாட்டான். குளிக்க மாட்டான். எங்கள் எல்லோர் சட்டையையும் போட்டுக் கொண்டு சினிமா, மெஸ் போவான். என் செருப்பு, என் செருப்பு; உன் செருப்பு. என் செருப்பு என்பதுதான் அவன் மோட்டோ. அதேபோல் எதையும் எடுத்துக் கொள்வான். இவ்வளவு இருந்தும் என்னாலும் சிவசாமியாலும் பீட்டரை வெறுக்க முடியவில்லை. காரணம் அவன் மற்ற திறமைகள். எதையும் ஒரு சிரிப்பில் சமாளித்துவிடும் தன்மை. சிரிப்பென்றால் 'கடகட'வென்ற சிரிப்பு. கண்களும் ஒத்துழைத்து நமக்கும் தொற்றிக் கொள்ளும் சிரிப்பு. கோபமே கிடையாது. அவனைக் கொன்று இரண்டு துண்டமாக்கி சாரிடா என்றால் போதும், சிரித்து விடுவான். இத்தனை அழுக்கின் இடையிலும் அவன் பச்சைக் கண்ணின் வசீகரமும் சிரிப்பும் அவனை வெறுக்க முடியாமல் செய்தன.

பீட்டர் டென்னிஸ், கிரிக்கெட் எல்லாவற்றிலும் விற்பன்னன். நல்ல பாட்ஸ்மன், விக்கெட் கீப்பர். ஒரு முறை பச்சையப்பாஸ் உடன் இன்டர் காலேஜியேட் ஆடப் போய் பீட்டர் மட்டும் கடைசிவரை நாட் அவுட்டாக இருந்தான். நான் வழக்கம்போல் ஒன்பது டவுனில் போனேன். பதினெட்டு ரன்கள் பாக்கியிருந்தது. தோற்றுவிட்டது என்று பலர் வீட்டுக்குப் போக ஆயத்தமானார்கள். முதல் இரண்டு பந்தை எப்படியோ தடுமாறி விளையாடி விட்டு டிப் பண்ணி ஓடி விட்டேன். பீட்டர் பாக்கியிருக்கும் நான்கு பந்துகளில் 4,4,4,6 என்று பதினெட்டு ரன் அடித்து விட்டான். காட்டடி. பச்சையப்பாஸ்காரர்கள் அப்படியே பிரமித்துப் போய் தலை மேல் கைவைத்து கீழே உட்கார்ந்து விட்டார்கள். நாங்கள் ஃபைனல்சில் போய்ச் சேர்ந்து மோசமாக தோற்றதற்கும் காரணம் பீட்டர்தான். இறுதியாட்டத்துக்குள் ஸ்போர்ட்ஸ்

செக்ரட்ரியுடன் சண்டைப் போட்டுக் கொண்டு ராயபுரம் தண்ணியடிக்கப் போய்விட்டான். பாதி ஆட்டத்தில் வைதேகி என்கிற பெண்ணுடன் மோட்டார் சைக்கிளில் வந்து வேடிக்கைப் பார்த்தான், கழுத்தில் ப்ளானலை குறுக்குவாட்டாகக் கட்டிக் கொண்டு–

இந்த வைதேகி என்கிற செமை மைலாப்பூர் ஐயராத்துப் பெண்ணை பீட்டர் எப்படிச் சந்தித்தான். எப்படிக் காதலித்தான் போன்ற விவரங்கள் எல்லாம் இல்லை. ஒரு கட்டு நீல பேப்பரில் அவள் எழுதிய காதல் கடிதங்களை எல்லாம் எங்களுக்குப் படிக்கத் தருவான். 'பீட்டர் நீ இல்லாமல் எனக்கு வாழ்க்கையே இல்லை. உன் தலைமுடி நெற்றியில் துவளும்போது அந்தத் தலைமுடியாக நான் இருக்ககூடாதா! இப்போதே என் பெயரை கிறிஸ்டினா என்று மாற்றிக் கொண்டிருக்கிறேன்' என்றெல்லாம் எழுதியிருக்கும்.

''கிறுக்குடா அது. ஆனா நாங்க இன்னும் கற்பை இழக்கலை. வீ ஆர் ஸ்டில் ஃபெரண்ட்ஸ்'' என்றான் ஆஸ்டல் தினத்தின்போது. பீட்டர், மாதவ நாராயணன், வேதா போன்றவர்கள் ராயபுரத்திலிருந்து கமலா என்கிற ஒரு பானம் வாங்கி வந்து டென்னிஸ் கோர்ட்டில் போய் உட்கார்ந்து தண்ணியடிக்கும்போது, பீட்டர் வைதேகியை அழைத்து வந்திருந்தான். சிவாவின் பொறுப்பில் விட்டு விட்டுப் போனான். அன்று வைதேகி எங்கள் ரூமுக்கு வந்து பீட்டர் வந்தானா என்று சிவாவைக் கேட்டது. சிவா காதுகளில் எல்லாம் சிவந்து வைதேகி இந்தப் பீட்டரை நம்பி எப்படி தனியாக வரப் போகும். உங்க அப்பா, அம்மா, அண்ணா, தங்கச்சி யாரும் இல்லையா? என்ற போது அந்தப் பெண் 'போடா சோமாறி' என்று அவனை அதட்டினாள்.

பீட்டர் வந்ததும் சிவா அதைச் சொன்னபோது ''அவ அப்படிப் பேசியிருக்கக் கூடாது சிவா, தப்புதான் கண்டிச்சு வெக்கிறேன்'' என்றான்.



எதிலும் பீட்டரை எதிர்பார்க்கவே முடியாது. ஒரு நாள் ரொம்ப சோகமாக இருந்தான். 'என்னடா பீட்டர்?' என்றபோது ''வைதேகி செத்துட்டாடா'' என்றான்.

''அய்யோ எதனாலே?''

''அவளுக்கு அவங்க அப்பா, அம்மா வேற மாப்பிள்ளை பார்த்திருக்காங்க. இவ பீட்டரைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு ஒத்தைக்கால்ல நிக்கறா. நா படிப்பு முடிச்சு பத்தாயிர ரூபா சம்பளத்தில் வேலை கெடைக்கிறவரை கல்யாணம் கிடையாதுன்னுட்டேன். பாப்பார ஆட்ல என்போல கிறிஷ்டின்ஸ்க்கு கொடுப்பாங்களா? அவங்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க. டிக்ட்வெண்டி சாப்ட்டுட்டா. இப்பதான் ஆஸ்பத்திரில போய் பார்த்துட்டு வர்றேன்.''

பீட்டர் இதை வருத்தமில்லாமல் சொன்னது எங்களுக்கு வயிற்றைக் கலக்கியது. சிவா அழுதுவிட்டான். ''நீ எதுக்கு அழுவறே சிவா? நானே கலங்காம இருக்கேன்'' என்று ஐயர் பங்க் போய் கோல்டு ப்ளேக் சிகரெட் வாங்கச் சென்றபோது ''சிவா, பீட்டர் இருக்கானா'' என்ற குரல் கேட்டு வைதேகி மஞ்சள் தடவிய கல்யாணக் கடுதாசியுடன் நிற்கிறாள்!

சிவாவுக்கு அந்த அதிர்ச்சியில் இருந்து விடுபட ஒரு மாதமாகிவிட்டது. ''பீட்டர் எதைத்தான் ஜோக் பண்ணணும்னு விவஸ்தை இல்லையாடா உனக்கு? எதுவுமே உனக்குப் புனிதமில்லையா'' என்றான்.

''ஒரே ஒரு விசயம் மட்டும் எனக்கு புனிதம்'' என்றான்.

''என்னது?''

''கோபப்படாம இருக்கறது. அது மட்டும்தான் எங்க மாமா சொல்லிக் கொடுத்திருக்காரு. ஏர்போர்ஸ்ல ஒரு பைலட் அவர். ஏர் க்ராஷ்ல செத்துட்டாரு.

''போன தடவை ஆர்மி காப்டன்னே?''

''அப்டியா சொன்னேன். அது எங்க பெரியப்பா.''

பீட்டரை எதிர்பார்க்கவே முடியாது. சிவாசாமியும் நானும் பலமுறை அவனைத் திருத்த முற்பட்டு கைவிட்டு விட்டோம்.

''பீட்டர் படிடா. படிக்கத்தான் உங்கப்பா கஷ்டப்பட்டு அனுப்பிச்சிருக்காருடா.''

''சிவா, எல்லாருமே பாஸ் பண்ணிட்டா எப்படி? ஃபெயில் ஆறதுக்கு ஒரு ஆளாவது வேண்டாமா? படிக்கிறதுக்கு ராங்க் வாங்கறதுக்கு நீ இருக்கே. பிட் அடிக்கிறதுக்கு நான் இருக்கேன்.''

பிட் அடிப்பது என்பதை ஒரு நுண்கலையாக வளர்த்தவன். இன்ஜினியரிங் காலேஜில் இரண்டு வகை பரீட்சைகள் உண்டு. ஒன்று கேள்வித்தாள், விடைதாள் வகை. மற்றொன்று, 'வைவா'' என்று நேரடியாக ப்ரொபசரை அவர் ரூமில் போய் சந்தித்து அவர் கேள்விகளுக்கு வாய்மொழியாக பதில் சொல்வது. இரண்டிற்கும் சம மார்க்குகள். வழக்கமாக, எழுதும் பரீட்சையில்தான் காப்பி அடிப்பார்கள். பீட்டர் வைவாவிலும் காப்பியடித்த ஒரே மாணவன் என்கிற பெருமை பெற்றான்!

வைவாவுக்கு நான், சிவா, பீட்டர் மூன்று பேரும் பாட்சாக உள்ளே போனோம். வரிசையாக ப்ரொபசரின் டேபிளில் மூன்று சேர் போட்டிருந்ததில் உட்கார, அவர் ஒவ்வொருவராக கேள்வி கேட்டுக் கொண்டே வந்தார். பீட்டர் ப்ரொபசர் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் சரியாக பதில் சொல்லி ''குட் வெரிகுட்'' என்று அவர் பாராட்டித் தலையசைக்கும் பாக்கியமும் பெற்றான். சிவாதான் கால்பிட்ஸ் ஆசிலேட்டரைப் பற்றி ப்ரொபசருடன் ஒரு வாக்குவாதத்தில் மாட்டிக்கொண்டு அவர் மார்க்கு



குறித்துவிட்டார். நான் எப்போதும் போல் நடுவாந்தரமாக விடையளித்தேன்.

மார்க்குகள் வந்தபோது பீட்டர்தான் முதல் மார்க். எண்பத்து எட்டு. எனக்கு அறுபத்தொன்பது. சிவா ஃபெயில் என்று சிவப்பில் எழுதி ரிப்பீட் என்று குறிப்பிட்டிருந்தது.

''ஏண்டா சிவா, ப்ரொபசர்கிட்ட போய் ஆர்க்யு பண்றே'' என்றான் பீட்டர்.

''இல்லைடா. நான் சொன்னதுதான் சரியான விடை. அப்பால வந்து டெக்ஸ்ட்ல பார்த்துட்டேன்.''

''பீட்டர், நீ எப்படிரா அத்தனை மார்க் வாங்கினே?''

''சிம்பிள்டா ரங்குஸ்கி! ( என் செல்லப் பெயர்) டெர்மன் புத்தகத்தை மடில வெச்சுக்கிட்டேன். நீங்க ரெண்டு பேரும் விடை கொடுக்கறப்ப சரக் சரக்குனு புத்தகத்தைப் புரட்டி ஆன்சர் பாத்துக்கிட்டேன். துடையை மடக்கி மறைச்சுட்டு.

''ப்ரொபசர் பார்க்கலை?''

''அதாண்டா ட்ரிக்கு. ப்ரொபசர் கண்ணாடிய கள்ட்டிட்டா பகல்ல பசுமாடு தெரியாது. சில விடைகளை நேரா புத்தகத்துல இருந்தே படிச்சேன். ப்ரொபசருக்கு தூரப் பார்வை கொஞ்சம் மந்தம். அதனால் நாற்காலியை...'''

''அநியாயண்டா'' என்றான் சிவா. '' நான் மாஞ்சு மாஞ்சு படிச்சு பெயிலு போட்டு- உட்கார்ந்து கொள்ள வேண்டியது நீ.

''சிவா வாழ்க்கைல சில பேர் பல்லக்கில போவாங்க. சில பேர் பல்லக்கு தூக்குவாங்க. அதான் நியதி.''

சிவசாமி வைவாவில் ஃபெயில் ஆகிவிட்டது எங்களுக்கு பெரிய அதிர்ச்சி. அவன் சரியாகத்தான் பதில் சொல்லியிருக்க வேண்டும். சிவசாமியை பீட்டர் ரொம்ப கலாட்டா செய்தான். ''சிவா எதுக்கு படிக்கிறே. உலகத்தில

படிப்பு மட்டும் போதாது சிவா, சாமர்த்தியம் வேணும். என் மெதட்படி படிக்கவே வேண்டாம். பிட்டுங்கறது எதுக்கு இருக்கு.''

''உருப்பட மாட்டேடா நீ வாழ்க்கைல.''

''வாழ்க்கைல என்ன நடக்குதுன்னு அப்ப பார்க்கலாம்.''

இந்த ''பிட்''டிலும் பீட்டரின் பல திறமைகள் சரித்திர பிரசித்தம். எழுதும் பரீட்சைக்கு மட்டும் புல்கை சட்டை போட்டுக் கொண்டு வருவான். அதன் ஸ்லீவை உருவினால் செல்லபேன் டேப் போட்டு 'அப்லைட் எலக்ட்ரானிக்'சின் அத்தனை அத்தியாயங்களும் எறும்பு எழுத்துக்களில் எழுதி ஒட்டப்பட்டிருக்கும். பீட்டரின் பையில் அதற்குரிய அட்டவணை இருக்கும்.

அதில் ஹார்ட்லி ஆசிலேட்டர் - இடது முழங்கை, ரெசனண்ட் சர்க்யுட் - வலது சாக்ஸ்; என்று குறிப்புகள் இருக்கும். சிவசாமி அந்த செமஸ்டர் பரீட்சையை ரிப்பீட் செய்யுமாறு நோட்டீஸ் போர்டில் வந்ததும் அல்லாமல் முதல் ராங்க் டிஸ்டிங்ஷனில் பீட்டரின் பேரும் இருந்தது.

ஆத்திரமும் துக்கமும் தாங்காமல் சிவா, டைரக்டரிடம் போய் விஷயத்தைச் சொல்லிவிட்டான்.

''என்னது வைவால கூட காப்பி அடிச்சானா? எப்படிப்பா சாத்தியம்?''

சிவசாமி பீட்டரின் முறையை விளக்க,

மறுதினம் நான், பீட்டர், சிவா மூன்று பேரும் கட்த்ரோட் ஆடிக் கொண்டு இருக்கும்போது பீட்டரை டைரக்டர் கூட்பிடுவதாக கணேசன் வந்து சொன்னான். சிவசாமிக்கு வயிற்றை பிசைந்திருக்க வேண்டும். மூத்திரம் குடித்த மாடுமாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருந்தான்.

''டைரக்டர் எனக்கு தங்க மெடல் கொடுக்க கூப்பிடறார்'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.



சிவசாமி என்னை நேராகப் பார்ப்பதை தவிர்த்தான்.

''சொல்லிட்டியாடா'' என்றேன்.

''ஆமாண்டா அநியாயம் இல்லையா ரங்கா?''

''அவன் காப்பி அடிக்கிறானா இல்லையான்னு கண்டு பிடிக்க வேண்டியது ப்ரொபசர் வேலை இல்லையோ? நீ ஏன் அதைப் போய்ச் சொல்லணும். உனக்கு ஏன் மார்க் வரலைன்னு கேட்கலாமேத் தவிர அவனுக்கு ஏன் நிறைய மார்க்குன்னா கேட்க முடியும். சிவா நீ பண்ணது தப்பு. அஞ்சாம் படை வேலை. பீட்டர் உன்னை மன்னிக்கவே மாட்டான். பீட்டர் அரைமணியில் திரும்ப வரும்போது சிரித்துக்கொண்டே வந்தான். ''சிவா! என்னடா இப்படி வத்தி வெச்சுட்டே. என் சீக்ரெட்டை சொல்லிட்டே?''

''நான் சொல்லவே இல்லையே?''

''பொய் வேற சொல்ற பாரு. டைரக்டரே சொல்லிட்டான். நீதான் காட்டி கொடுத்ததா. காப்பியடிக்கிறது என்னவோ மகத்தான குற்றம் மாதிரி ராஜேந்திர பாபு மாதிரி ஏதேதோ சொன்னான்.''

''கடைசில என்ன ஆச்சு சொல்லு.''

''டிபார் பண்ணிட்டாங்க. இன்னும் மூணு வருஷம் காலேஜ் பக்கமே தலைவெச்சு படுக்கக் கூடாதுன்னுட்டாரு. மூணு வருஷம் என் வாழ்க்கைல போச்சு. எங்கப்பா வருத்தப்படுவாரு.''

''அய்யோ'' என்று சிவாவைப் பார்த்தேன். மிக கடுமையான தண்டனை.

சிவாவின் முகம் வெளிறிப் போயிருந்தது. ''என்ன சிவா நா உன் ஃப்ரெண்டு இல்லையா. நீ சரியா பரீட்சை பண்லைன்னா என்னை ஏன் காட்டிக் கொடுக்கறே. அது நியாயமா? பரவால்லைடா . நம் தோஸ்த் எல்லாம் துஷ்மன் ஆகணும்னு என் விதி'' என்று கித்தாரை வைத்துக் கொண்டு

''லூசி இன் தி ஸ்கை வித் தி டயமண்ட்ஸ்'' பாட ஆரம்பித்தான்.

மறுதினம், கித்தார், படுக்கை, பெட்டி, அவன் வளர்த்த வெள்ளெளி எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அய்யர் பங்க் கடைக்கு கொடுக்க வேண்டிய சிகரெட் பாக்கிக்கு தன் வாட்ச்சை கழற்றிக் கொடுத்துவிட்டு பீட்டர் காலேஜை விட்டு புறப்பட்டபோது அவனை சபர்பன் நிலையத்தில் வழியனுப்ப ஹாஸ்டலே ஒன்று திரண்டிருந்தது. சிவா மட்டும் புழுங்கிக் கொண்டிருந்தான்.

சிவா அப்புறம் சொன்னான்: ''பாவம்டா சொல்லியிருக்க வேண்டாமோ? என்னைத் திட்டக்கூட இல்லைடா, என்னா மன்சன்டா. கோவம்ங்கறதே கெடையாதா. அப்படிப்பட்ட ஜென்டில்மன்டா அவன். ஐ ஃபீல் வெரி கில்ட்டி ரங்கா'' என்றான்.

புறப்படும் ரயிலிலிருந்து ''ரங்குஸ்கி!!'' என்று உச்சக் குரல் கேட்டு பீட்டர் தோள்பட்டையைப் பிடித்துக் கொண்டு ரயில் வாசலில் நின்று கொண்டு எங்கள் ரூமைப் பார்த்து 'குட் பை சிவா' என்றான்.

அதன்பின் பீட்டரை நான் பார்க்கவே இல்லை. கோர்ஸை முடித்து விட்டுப் போனதும் பீட்டர் நான்கு வருஷம் கழித்துதான் வந்து ஒவ்வொரு சப்ஜெக்டாக பாஸ் பண்ணியதாக அறிந்தேன்.

அவன் அப்புறம் என்ன ஆனான் பம்பாய் போனானா; வெளிநாடு போனானா; சினிமாவில் சேர்ந்து விட்டானா என்று பல வதந்திகள் இருந்தன. சிவா பெங்களூரில் பெரிய பப்ளிக் செக்டர் கம்பெனியில் என்ஜினியராக சேர்ந்து இப்போது உயர்ந்த பதவியில் பெரிய வேலையில் இருக்கிறான் என்று தெரிந்தேன்.

ஒருமுறை பெங்களூருக்கு வேலை நிமித்தமாக போயிருந்த போது சிவாவை சந்திக்கலாம் என யோசித்தேன்.



ஏர்போர்ட்டில் கரோஸலில் என் பெட்டி வரக் காத்திருந்த போது, ''ஏய் ரங்குஸ்கி'' என்று பின்னால் ஒரு பெரிய குரல் கேட்டு, யார் இது என்னை ரங்குஸ்கி என்று கூப்பிட்டவன் பீட்டர் ஒருத்தன் தானே என்று திரும்பிப் பார்த்தால், பீட்டர் கையில் பெரிய ரோஜா மாலையுடன் நின்று கொண்டிருந்தான்.

இருபத்தைந்து வருஷங்களில் முகம் மாறவே இல்லை. தலைமயிரின் அடர்த்தி சற்று கம்மியாகி நரை தெரிந்தது. ஆனால் புன்னகையும் பச்சைக்கண்ணும் அதேதான். ''பீட்டர் நீ பெங்களூர்லயா இருக்கே?''

''ஆமா இப்பத்தான் வடக்கே இருந்து மாற்றி வந்தேன். ஒரு ஜப்பானிய கொலாபரேட்டர் வரான். அவனை வரவேற்க வந்தேன். ஃப்ளைட் லேட். நீ எப்படி இருக்கே?''

''பாரேன்'' என்றேன். ''ஆறு வேலை. ஒரு பைபாஸ். ஒரு விவாகரத்து. உன்னைப் பற்றிச் சொல்லு. அன்னிக்கி உன்னை டீபார் பண்ணாங்களே, அதுக்கப்புறம் கதை விட்டுப் போச்சு'' என்றேன்.

''மெல்ல தடுக்கி தடுக்கி பாஸ் பண்ணி டிகிரி வாங்கினேன். மூன்று வருஷம் கோர்ஸை எட்டு வருஷத்தில் முடிச்சேன். பிட் அடிக்க முடியலை. பரீட்சை எழுதறப்ப எல்லாம் பக்கத்திலேயே ப்ரொபசர் அடை காத்தார். எப்படியோ முடிச்சேன். அப்றம் இந்தக் கம்பெனி இண்டர்வ்யுவில் என் பேச்சைப் பார்த்து மயங்கி தெரியாத்தனமா வேலை கொடுத்துட்டாங்க.''

''ப்ரொபேசனராத்தான் சேர்ந்தேன். தெரியாத்தனமா வேலை கொடுத்தவங்க, தெரியாத்தனமாவே ப்ரமோசனும் கொடுத்துக்கிட்டே வர்றாங்க. இப்ப கூட சப்ஜெக்ட் நாம் படிச்சப்போ எப்படியோ அப்படித்தான். சுத்தம். ஒரு அட்சரம் தெரியாது. ஆனா யார் வேலை தெரிஞ்சவன், யார் நல்லா வேலை செய்வான்னு நல்லாவே தெரியும். அது

என்னவோடா என் மூஞ்சியை பார்த்ததும் அவங்க துடியாவே செய்துர்றாங்க என்னவோ முகராசி!''

''இப்ப என்ன வேலைல இருக்கே!''

''நான்தான் கம்பெனி டைரக்டர்! நம்புவியா?''

''என்ன கம்பெனி சொன்னே?''

''ஐ. சி. எல். ஐ.''

''நம்ம சிவசாமி கூட ஐ.சி.எல்.ஐ.லதான இருக்கான்னு யாரோ சொன்னாங்களே.''

''சிவாதானே? ஆமா.''

''என்னவா இருக்கான்?''

''மேனேஜரா இருக்கான். எனக்கு ரெண்டு லெவல் கீழே இருக்கான். எனக்கு ஸ்டாஃப் ஆபீசரா வெச்சிருக்கேன். இன்னொரு மாலை கொண்டு வர அனுப்பிச்சிருக்கேன். ஜப்பான்காரன் மனைவியோட வரானாம்.''

''இப்ப கூட ரங்குஸ்கி, எனக்கு சப்ஜெக்ட் தெரியாது. ஆனா, இந்த லெவல்ல சப்ஜெக்ட் தெரிஞ்சாகணும்னு கட்டாயமில்லை.''

''பின்னே என்ன தெரியணும் பீட்டர்'' என்றேன் புரியாமல். சிவா, அத்தனை பரீட்சையிலும் முதல் ராங்க் வாங்கின சிவா, பீட்டருக்கு கீழே சேவகம் பண்ணுகிறானா. எனக்கு சமன்பாடுகள் புரியவில்லை.

''கோபப்படாம இருக்கணும். அது போதும் லைஃப்ல'' என்று கடகடவென்று சிரித்தான். முப்பது வருஷம் கழித்து அதே சிரிப்பு. கண்களும் ஒத்துழைத்து மற்றவருக்கும் தொற்றிக் கொள்ளும் சிரிப்பு. தூரத்தில் சிவா மாலை கொண்டுவந்து பீட்டருக்கு மரியாதையான தூரத்தில் நின்றான்.

**-புதிய பார்வை, நவம்பர் 1, 1994.**

# கைது

**ஏ.ஸி.பி.** என்னை அவசரமாகக் கூப்பிட்டிருந்தார். மாசிலாமணியைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு கமிஷனர் ஆபீசுக்குச் சென்ற போது கோபிநாத் கடுப்பில் இருந்தார். என் சல்யூட்டை வாங்கிக் கொண்டு, ''வாய்யா! என்னாய்யா ஆய்கிட்டு இருக்கு உங்க போலீஸ் டிப்பார்ட்மெண்ட்டு?''

''உங்க போலீஸ் டிபார்ட்மெண்டன்னா?'' என்றேன் ஆச்சரியமாக.

''டிப்பார்ட்மெண்ட்டை சேந்தவன்னே சொல்லிக்க வெக்கமா இருக்குது.''

நான் அவரை 'விவரமா சொல்லுங்க ஸார்,' எனக் கேட்க முடியாது. மேலதிகாரி. அவர் மீசையை நீவிக் கொண்டே ஃபோன் பேசி இரண்டு மூன்று ஃபைல் பார்த்து முடியும் வரை காத்திருந்தேன்.

''உன் ஃப்ரெண்டு குணசீலன் தெரியுமில்லை? உன் ஃப்ரெண்டுதானே அவன்?''

''ஆமா ஸார்.''

''குணசீலனும் நான்கு கான்ஸ்டபிள்களும் சேர்ந்து ஒரு கீழ்சாதிப் பெண்ணை ரேப் பண்ணியிருக்காங்க. பாளாப்

போற பொண்ணு ஸ்டேசன்லயே உயிரை வுட்டுருச்சு. கலாட்டா நடக்குது. ரைட்டர் ரூமை சூறையாடிட்டாங்களாம். ஜீப்பை கொளுத்திட்டாங்களாம். மாலைக்குள்ள கைது பண்ணலை, தலை உருளும். வெயிட் பண்ணு. வாரண்டு ஏற்பாடு பண்ணிக்கிட்டு இருக்காங்க. வந்ததும் அவனைப் போய்ப் பார்த்து அரஸ்ட் பண்ணிக்கிட்டு வரணும். உன் ப்ரெண்டு தானே? நல்லபடியாச் சொல்லிப் போடு. ரெசிஸ்ட் பண்ணாம இருக்கச் சொல்லு. கையும் களவுமா மாட்டியாச்சு. அவனை பேரண்ட் ஸ்டேசன் பக்கம் போக விடாதே. கொளுத்திருவாங்க. அத்தனை கோபத்தில் இருக்காங்க. அவனுக்கு இப்ப பத்திரமான எடம் போலீஸ் கஸ்டடிதான்.''

''குணசீலனா?''

''ஆமா, என்ன பொருத்தமான பேரு பாரு, ஏன்யா இப்படி, புத்திபோவுது உங்க பேச்மேட்டுங்களுக்கு? போலீஸ் ட்ரெய்னிங் காலேஜ்ல என்ன எளவை சொல்லித் தங்காங்க?'' எப்படி பதில் சொலவேன்? குணசீலனா என்கிற அந்த அதிர்ச்சி நீங்கா நிலையில் வாய் பேசாமல் நிற்க, அவர் தொடர்ந்தார். சீலனும், நானும் ஒன்றாய் ஒரு வார இடைவெளியில் போலீசில் சேர்ந்தவர்கள். ஒரே ஊர், ஒரே காலேஜ், ஒரே பயிற்சி, போஸ்டிங். அங்கிருந்து பிரிந்து நான் ஃபாரன்சிக் பக்கம் போய்விட, சீலன் அத்தனை சென்னை போலீஸ் நிலையங்களையும் பார்த்து விட்டு முரட்டு ஆசாமி என்கிற புகாரின் பேரில் செங்கல்பட்டுக்கு மாற்றலாகி, மாற்றலை ஏமாற்றுவதற்காக நகர வெளிப்புறத்திலுள்ள ஒரு சிறு நிலையத்தில் பொறுப்பேற்று, ''அது என்ன பேரு மகப்பேறா, என்னா போலீஸ் டேசன்யா அது .''

''மடிப்பேறுங்க. வண்டலூர் போற வழியிலங்க.''



''அங்கதான் சம்பவம் நடந்திருக்கு. சௌகரியமான இடம். புருஷனைக் காணோம்னு புகார் கொடுக்க வந்திருக்காங்க. இருட்னப்புறம் தனியா பொம்பளையை ஸ்டேஷன்ல நிறுத்தறதே சட்ட விரோதம். நாலுபேரும் சேர்ந்து லாக்கப் ரூம்ல படுக்கவெச்சு கிளிச்சிருக்காங்க. உன் ஃப்ரண்டுதான், 'துவக்க உரை'. தாங்க முடியாத எமர்ரேஜ் ஆய்ட்டுது. தாலுகா ஆசுபத்திரியில வஜைனல் ஸ்வாபெல்லாம் எடுத்து ரிப்போர்ட் எளுதிட்டான். டாக்டர் கடுப்பாயிட்டான். காலைல ஃபோன் செய்தான். ரிக்கார்டை மாத்தப் பாத்திருக்காங்க. ராத்திரியே கிராமத்துக்கு பாடியை அனுப்பிச்சு, உடம்பு சரியில்லை, வழிலயே இறந்துட்டாள்னு அனுப்பிட்டாங்க. இடையில் புருஷன்காரன் வந்துட்டான். டாக்டரும் கிராமத்தில வந்து தகவல் சொல்லிட்டாரு. கிராமமே சூழ்ந்து கிட்டாணுக. கைல பச்சைப் பிள்ளையைத் தூக்கிக் கிட்டு சிட்டிக்கு அலையறான் புருஷன்காரன்.''

''உன் நண்பன் ஓடி வந்துட்டான். அசோக் நகர்ல சொந்த வீட்லதான் தலைமறைவா பதுங்கி இருக்கான்னு தகவல். போய்க் கூட்டி வந்துரு. அவன் மேலதிகாரி எஸ். பி. இருக்காரு சுந்தரவேலுன்னு. அவர் கிட்ட ஒரு வார்த்தை நான் சொல்லிக்கிறேன். நீ போய்க் கூட்டி வா விசாரிக்கலாம்.''

''சரி ஸார்,'' என்றேன். என் குரல் கம்மியிருந்தது.

''எனக்கும் வருத்தமாத்தான் இருக்குது. குணசீலன் மாதிரி ஒரு போலீஸ் அதிகாரி உம் மாதிரி நூறு பேர் கட்டிக் காத்ததை ஒரே நாள்ள கலைச்சுர்றாங்க. எப்படிப் பட்ட ஆள்ய்யா இந்த குணசீலன்.''

''தெரிஞ்ச வரைக்கும் நல்லவன்தான். கொஞ்சம் முரட்டு சுபாவம் உள்ளவன். அடிப்பான். தேர்ட் டிக்ரி எல்லாம் உண்டு. ஆனா இந்த லெவலுக்குப் போவான்னு நான் எதிர்பாக்கலை ஸார்.''

''பொண்டாட்டி, கைப்பிள்ளை எல்லாம் இருக்குதாமே?''

''இருக்கு ஸார்.''

''மனைவியைத் தெரியுமா?''

''கல்யாணத்தின் போது பார்த்தது.''

அரஸ்ட் வாரண்ட் வந்தது. ஜீப்பில் ஏறிக்கொண்டு புறப்பட்டேன். மனசில் அலை அலையாக எண்ணங்கள் ஓடின. நானும் சீலனும் பிக்னிக் போனது. மதகடியில் நீரில் குதித்து அந்த கட்டுமஸ்தான தேகத்தைக் கண்டு வியந்தது. அவன் புன்னகை. மேற் செல்லும் மீசை. எப்போதும் கண்களில் இருந்த பிளேடு கூர்மை. அவன் கனம். ஹாக்கி நன்றாக ஆடுவான். கோல் கீப்பர். அவனைத் தாண்டி ஏதும் போகாது. போலீஸ் ட்ரெயினிங் காலேஜில் செகண்ட் பெஸ்ட்டாக வந்து வெள்ளிப் பதக்கம் பெற்றவன். எப்படி, எந்தக் கட்டத்தில் விகாரப் படுத்தப்பட்டு மாறிப் போனான். எங்கே மாறுகிறார்கள்? பயிற்சியெல்லாம் சரியாகத்தானே இருந்தது. ஒரு போலீஸ் அதிகாரியின் கடமைகள் என்னவென்று சரியாகத் தானே சொல்லித் தந்தார்கள். அதனுடன் தேசபக்தி, கடமை உணர்ச்சி, சமூகப் பொறுப்பு எல்லாம் சேர்த்து உருவேற்றி ஆரோக்கியமான உணவு, எண்ணங்கள். என்னவெல்லாம் கற்றுக் கொடுத்து டி. ஜி. வந்து மார்பில் மெடல் குத்தின போது சீலன் கண்களில் எத்தனை பெருமை ஒளிர்ந்தது. அவன் போய் அபலைப் பெண்ணைக் கற்பழித்தானா? எங்கே ஏற்பட்டது இந்தச் சிதைவு? எதாவது காரணம் இருக்கத்தான் வேண்டும். எங்கள் பயிற்சியில் எல்லாம் தவறே இல்லை. அவற்றை நடைமுறை உலகத்துக்குப் பயன்படுத்தும் போது விகாரங்கள் வந்து விடுகின்றனவா?

அசோக் நகரை நோக்கி ஜீப் செல்ல, எப்படி இந்த மாறுதல் வந்திருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன்.



ஆசையா? அதிகாரம் இருக்கிறது என்கிற முரட்டுத் தனமா? எது? இல்லை, அபலைகளை, அனாதைகளை, ஏழைகளை யாரையாவது பார்த்தால் கையாலாகாமையால் சமூகத்தின் மேல் வரும் வெறுப்பும் கோபமும் சில வேளை அவர்கள் மேலேயே மூர்க்கத்தனமாக வெடிக்கும் என்று சைக்காலஜி பாடங்களில் படித்தேனே அது போலவா?

கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் சிக்னலில் நின்ற போது–

சத்யமோகன் ஃபோட்டோப் படங்களைக் காண்பித்தார். ரேப்பான பெண்ணைப் பார்த்தால் தலையில் புழுதியும் தடித்த வெறும் கழுத்துமான பெரிய திறந்த வாயில் நிறைந்த பற்களுமாக, எப்படி இது நிகழ்ந்திருக்கும். புரியவே இல்லை.

அசோகரின் ஸ்தம்பம் அபத்தமாக சாலை நடுவே எதையும் நிரூபிக்காமல் நின்று கொண்டிருக்க, அதை வலம் வந்து ஈ.எஸ்.ஐ. ஆசுபத்திரியைத் தாண்டினனும் முழுமையாக மூன்று ப்ளாக்குகள் கடந்து தார் போட சிறுகற்கள் கொட்டியிருந்த அரைத் தெருவில் இருந்த வீடு, ஒரு கற்பழிப்புடன் எந்த விதத்திலும் இணைக்க முடியாதபடி மிக அமைதியாக இருந்தது. ஜீப்பை நிறுத்திவிட்டு கான்ஸ்டபிள்களை வர வேண்டாம் என்று மெல்ல அனுகினேன். வாசல் கதவு பாதித் திறந்திருந்தது. உள்ளே டி.வி. கேட்டது.

கதவின் மணியை அழுத்த, கொஞ்ச நேரம் கழித்து ஒரு பெண் கையில் குழந்தையுடன் வாசலுக்கு வந்தாள்.

என் சீருடையைப் பார்த்ததும் கதவை முழுவதும் திறந்தாள்.

''வணக்கம். சீலன் இருக்காரா?''

''இருக்காரு. நீங்க?''

''என் பேரு பழனி. சீலனோட அதே பாட்ச். நான் உங்க கல்யாணத்துக்கு வந்திருக்கேன். ஞாபகமிருக்குதா?''

அவள் கண்கள் என்னை அடையாளம் தேடின. ''உள்ளே வாங்க உக்காருங்க,'' என்று கீழே இரைந்திருந்த விளையாட்டுச் சாமான்களை நகர்த்தினாள்.

''சீலன் இருக்காரில்லை?''

''இருக்காரு. குளிச்சிக்கிட்டு இருக்காரு. உக்காருங்க.''

''பரவால்லை.''

''உக்காருங்க ப்ளீஸ். உக்கார வைக்கலைன்னா கோவிச்சுப்பாரு. என்ன சாப்பிடறீங்க?'' என்றாள்.

அவளுக்கு என் தங்கை சுகுணாவின் வயது இருக்கும். கொஞ்சம் அவள் போலத்தான் இருந்தாள். குழந்தை கீழே விட்டதும் அழ ஆரம்பித்தது. அதை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டாள். மீண்டும் கர்ப்பமாக இருப்பதை வயிறு காட்டியது.

''எதையோ தண்ணி குடிச்சதில ஜுரம்ங்க. அதான் நச்சு நச்சுன்னு அழுவுது.''

நான், ''பாப்பா இங்க பாரு! பேரு என்ன?'' என்று கேட்டேன்.

''கவிதா!'' என்றாள்.

''பல் வந்திருச்சா?''

''நிரடுது'' என்றாள், அதன் வாயில் விரலை விட்டு. அது கக்கென்று இருமி விட்டுக் கண்ணீர் விட்டது.

குணசீலனின் மனைவியைப் பார்த்தேன். இளம் தாயின் அனைத்து அங்க லட்சணங்களும் அலுப்புகளும் உடலில் தெரிந்தன. கல்யாணமாகி இரண்டு வருஷம்தான் ஆகியிருக்க வேண்டும். உடம்பில் ஓவர்டைம் வாங்கிய அலுப்பு இருந்தது. மார்பு சற்றே துவண்டு போய், முதுகு லேசாகக் கூன் போட்டு, தலை மயிர் சரியாக வாரப்படாமல்



இவள் கல்யாணத்தில் பார்த்தபோது எத்தனை அழகாகப் பளிச்சென்று இருந்தாள் என்பது ஞாபகம் வந்தது. என்னிடம் ஃபோட்டோ கூட இருக்கிறது.

''என்ன விஷயமா வந்திங்க. ஏதாவது சாப்பிடறீங்களா?''

'கைது செய்ய' என்று சொல்ல முடியுமா?

''நீங்க இந்த வீட்டுக்கு எப்ப வந்திங்க?''

''வந்து மூணு மாசமாச்சு. வேலைக்காரி கிடைக்கலை''.

''சொந்த வீடா?''

''ஆமாம்''

''துணி துவைச்சுப் போட்டு, இவருக்கு யூனிபார்ம் இஸ்திரி போட்டு, ரெண்டு நாளா லீவில் இருக்காரா அதனால் சமாளிக்க முடியுது. போலீஸ் டிப்பார்ட்மெண்டில் எல்லாருக்கும் லீவா? ரெண்டு நாளா போகவே இல்லையே? இங்கிருந்துதான் மோட்டார் சைக்கிள் எடுத்துட்டு மடிப்பேறு போய் வருவாரு.''

காலை பேப்பரே பார்ப்பதில்லையா! உன் கணவன் பேர் கொட்டை எழுத்தில் வந்திருக்கிறதே! ''பேப்பர் பார்த்திங்களா?'' என்று கேட்டேன். ''எனக்கு டயம் எங்கங்க? இந்தப் பொண்ணுக்குத் தான் ஃபுல் டைம் அட்டென்ஷன் தேவைப்படுதே. ஜுரம் வேற, இதையும் பார்த்துக் கிட்டு, வீட்டு வேலையும் பார்த்துக்கிட்டு, துணியும் தோச்சுகிட்டு சமையலும் செய்யணும். உங்களுக்குக் கல்யாணம் ஆயிருச்சா?''

''இல்லைங்க''

''இவரு வயசுதானே உங்களுக்கும்.''

''ஆமாம்''

''ஏன் கல்யாணம் பண்ணிக்கலை?''

நான் மௌனமாக இருக்க–

''நல்ல காரியம் செய்தீங்க. எம்மாதிரி இன்னொருத்தி வயிற்றை சாச்சுகிட்டு வரப் போறவங்களுக்கெல்லாம் அவரு குளிக்கிறாரு, பல் தேய்க்கிறாருன்னு பதில் சொல்லிக்கிட்டு இருப்பா!''

நான் அவள் முகத்தை பார்த்தேன். வெறுப்போ கோபமோ இல்லை. களைப்புதான். ஒரு முழு யுகத்தின் களைப்பு''

''செய்யணும்.''

''அப்பா, அம்மா யாரையாவது கூப்பிட்டு வெச்சுக்கலாமே?''

அவங்க ரெண்டு பேரும் போய்ட்டாங்க.''

''சீலன் சைடுல?''

''அவங்க துபாய்ல ஒருத்தரும் குளித்தலையில ஒருத்தரும் இருக்காங்க. மருதூர்ல நெலம் இருக்குதில்லை. துபாய்ல இவர் பிரதர் இருக்காரு, வயசானவங்களையும் சேர்த்துப் பராமரிக்கணும். ஒண்டியா சமாளிக்க வேண்டியிருக்கு.'' குழந்தை அவள் மடியை நனைக்க அதை முழங்காலில் லேசாக அடிக்க, அது உதட்டைப் பிதுக்கிக் கொண்டு அழ ஆரம்பித்தது.

''வேண்டாம் கண்ணு அப்பா வருவாரு. அப்பா வந்து ஆட்டோல போகலாம். கார்ல போகலாம். பெரிய காரு. அங்கிள் கூட்டிட்டுப் போவாரு.''

சன்னலுக்கு வெளியே தெரிந்த ஜீப்பைக் காட்டி, அது என்ன என்ற போது குழந்தை சட்டென்று அழுகையை நிறுத்தி விட்டு அவளை யோசனையுடன் பார்த்தது. ''என்ன காரு?''

''அம்பா''



''அம்பாசிடர்ல வரது சுரேஷ் மாமா. இந்த மாமா எதில வந்திருக்காங்க.''

''ஜீ''

''அத்தனை காரையும் அடையாளம் கண்டு புடிக்குது. இதை எப்படியாவது மெடிக்கல் படிக்க வெக்கணும்னு சொல்றாரு.''

''நீங்க கூட எம்.எஸ்ஸி. பண்ணியிருக்கீங்க போலிருக்கே.''

''ஆமாம் பாட்டனி.''

''வேலைக்குப் போகலாமே.''

''இத வெச்சுக்கிட்டா?'' என்று என்னை நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் சோகம் தெரிந்தது. ''நான்தான் படிச்சும் ஏதும் பயன் இல்லாம இந்த மாதிரி பீத்துணி தோச்சுகிட்டு இருக்கேன்.''

அவள் சட்டென்று கட்டுப்படுத்த முடியாமல் அழுதாள். ''உங்க ப்ரெண்டு கிட்ட சொல்லுங்க. என்னை ஒரு மனுஷியா நடத்தச் சொல்லுங்க. அடிமாடா இல்லை. மனுஷியா.''

'எனக்கு வெலவெலத்துப் போனது. ''எப்படி இவள் கணவனைக் கைது செய்து போவதைச் சொல்லப் போகிறேன்.!'

''நாசியா வேற காலை எழுந்த உடனே பெரட்டுது. டாக்டரானா சோகை. ரத்தம் போதாது. ரத்தம் போதாதுங்கறாங்க.''

எனக்கு கவலையாக இருந்தது. எப்படிச் சொல்லப் போகிறேன். நண்பனின் மனைவியே மன்னிக்கவும். நான் உனக்கு ஆறுதல் சொல்ல முடியவில்லை. மாறாக உன் புருஷனை சிறைக்கு அழைத்துச் செல்லப் போகிறேன். நீ என்ன செய்வாய், எப்படிச் சமாளிப்பாய், யார் உனக்கு

ஆதரவு இதையெல்லாம் நான் கேட்கத்தான் வேண்டுமா? என்ன ஓர் உத்தியோகம் இது! யார் மேல் நான் இரக்கப்படுவது? அனுமதியின்றி கற்பழிக்கப்பட்ட இறந்து போன பெண்ணின் மேலா? அனுமதியுடன் கற்பழிக்கப் பட்ட உயிருள்ள மனைவி மேலா?

நான் சொல்லிவிட்டேன்.

''பாருங்க மிஸஸ் குணசீலன். இந்தச் செய்தியை உங்ககிட்ட சொல்லியே ஆகணும். உங்க கணவரை நான் கைதுபண்ணிக் கூட்டிட்டுப் போக வந்திருக்கேன்.''

''எதுக்கு? என்ன காரணமா?'' என்று அவள் நெற்றியைச் சுருக்கிக் கொண்டாள்.

''அவர் மேல ஸ்டேஷன்ல ஒரு குற்றச்சாட்டு. நிரூபிக்கப்படலை. நல்ல லாயராப் பார்த்து விடுதலை பெற்றுடலாம்.''

''என்ன குற்றச்சாட்டு''

நான் தயங்கினேன்.

''சொல்லுங்க ப்ளீஸ்''

''ஒரு பெண்ணை பலாத்காரம் பண்ணிட்டதாக் குற்றச்சாட்டு. இவரும் நாலு கான்ஸ்டபிள்களும்.''

''இவ அப்பாவா?'' என்று குழந்தையைக் காட்டினாள்.

வ்வ் என்று வசீகரமாகச் சிரித்தது குழந்தை.

''ஆமாம். அது உண்மையா இல்லையான்னு நிரூபிக்க வக்கீலைப் பார்க்க ஏற்பாடு செய்யறேன். குற்றச்சாட்டுதான். டிபார்மெண்ட்டில சஸ்பெண்டு பண்ணிருக்காங்க.''

எனக்கு ஒரு யோசனை சட்டென்று தோன்றியது. ''மிஸஸ் குணசீலன், நீங்க இருக்கற ஸ்திதியில என்னால ஒண்ணு செய்ய முடியும். உங்க நிலைமையில உங்க கணவரை இந்தச் சந்தர்ப்பத்தில அரெஸ்ட் பண்ணிகிட்டுப்



போறது எனக்கு கொடிய செயலாப்படுது. ஓர் உதவி செய்யறேன். நான் இப்ப வந்ததையே மறந்துருங்க. சாயங்காலம் வரேன். உங்களுக்கு உங்க கணவர்கிட்டப் பேசி முடிவு பண்ணி மாற்று ஏற்பாடுகளைச் செய்ய அவகாசம் தரேன். அதுக்கு முன்னாடி ஆண்டிசிப்பேட்டரி பெயிலோ வேற ஏற்பாடோ துபாய்க்குப் போக ஏற்பாடோ அவரால் செய்ய முடியுமான்னு பாருங்க. நான் என்னைப் பொறுத்தவரையில் இந்தச் சலுகை குணசீலன் என் நண்பன்கிறதுக்காக இல்லை. உங்க பரிதாபமான நிலையில் மனிதாபிமானத்தோட உங்களுக்கு உதவறதுக்காகத்தான்...''

''ரேப் பண்ணாரா?''

''அப்படித்தான் குற்றச்சாட்டு.''

''கட்டின பெண்டாட்டி நான் இருக்க...ப்ப'' என்று அவள் கதற, அழுகை கட்டுக்கடங்காமல் போக அந்தக் குழந்தை அவள் முகத்தைத் திருப்பி வேடிக்கை பார்த்தது. தான் அழாமல் அம்மா அழுவது அதற்கு வியப்பாக இருந்தது.

''ஸாரி, வெரி ஸாரி. நான் இதை உங்ககிட்ட சொல்லியிருக்கக் கூடாதோ? இருந்தாலும் உங்களுக்கு உதவி செய்யணும்ங்கற எண்ணத்திலதான்...''

அவள் குழந்தையை அள்ளிக் கொண்டு இடுப்பில் வைத்துக் கொண்டு நிறைய அழுதபின், கன்னத்தில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''உதவி எதும் வேண்டாம். அழைச்சுட்டு போங்க.'' என்று உள்ளே சென்றாள்.

**-குமுதம் 14-7-94.**

# அட்டாக்

அந்த சுறுசுறுப்பான மார்க்கெட் ஆனந்த நகரின் மத்தியில் இருந்தாலும் இருட்டினதும் அங்கே நடக்கவே மக்கள் பயப்பட்டார்கள். காரணம் அங்கே சமீபத்தில் நடந்த சில கோரமான சம்பவங்கள்.

அதில் எனக்கு என்ன சம்பந்தம் என்று சொல்லி விடுகிறேன். நான் ஓர் இன்ஜினீயர். படித்தது மெக்கானிக்கல். இருந்தும் மூன்றாவது வருஷத்திலிருந்து எலக்ட்ரானிக் சமாசாரங்களில் ஈடுபாடு ஏற்பட்டு ட்ரான்சிஸ்டர், டேப்ரிக்கார்டர், விஸிஆர் போன்றவற்றைப் பிரித்துப் பார்த்து ரிப்பேர் செய்ய பழகிக் கொண்டேன்.

அது என்னவோ ஒரு 'நேக்' சிலபேருக்கு சித்திரம் வரைய வருகிறது. சிலருக்கு டென்னிஸ், சிலருக்கு விசிலடிக்க அல்லது நீஞ்ச. எனக்கு ரிப்பேர். கொஞ்சம் கொஞ்சமாக அந்த பெரும்பாலும் ஜப்பானியக் கருவிகளின் உள் விசாரங்கள் புரிந்து போய் இன்ஜினீயர் பரீட்சையை ஒப்பேற்றிவிட்டு (மார்க் சுமார்தான்) இவனே அவனே என்று வேலைக்கு அலையாமல் ஆனந்த் நகரில் ஓர் இடத்தைப் பகடி கொடுத்து வாடகைக்கு எடுத்து அங்கே 'ஜெனித் சர்வீஸ் சென்டர்' துவங்கி விட்டேன்.



கொஞ்சம் கொஞ்சாமாக என் புகழ் அண்டை அசலில் பரவி இவன் எந்த ருமானிய, செக்கோஸ்லோவாக்கியா செட்டாக இருந்தாலும் ரிப்பேர் செய்யக்கூடியவன் என்று பேர் பெற்று கடை பூரா பேட்டையின் வோல்டேஜ் பற்றாக்குறைக்கு இரையான அத்தனை செட்டுகளையும் நிரப்பி விட்டார்கள். பெரும்பாலும் ப்யூஸ் போயிருக்கும். பவர் ட்ரான்சிஸ்டர் ரெகுலேட்டரில் ஒரு ஜீனர் போகும். அந்தச் சூட்சுமங்களை எல்லாம் ஒரு யுத்த கதியில் கற்றுக் கொண்டு வட்டாரத்திலேயே மார்கோனிக்கு அடுத்தபடியாக கோவிந்தராஜன்தான் என்று பேர் பெற்று விட்டேன்.

மாதம் பத்தாயிரத்துக்குக் குறைவில்லாமல் சம்பாத்தியத் திறன் பெற்று பக்கத்தில் இருந்த கறிகாய்க் கடையை வளைத்துப் போட பேச்சுவார்த்தை துவங்கி விடியோகான் ஏஜென்ஸி எடுத்து நல்ல செழிப்பாக இருக்கும் சமயத்தில் இரண்டு விஷயங்கள் என்னைத் தாக்கின.

ஒன்று காதல், மற்றது வன்முறை.

முதலில் காதலைப்பற்றியே சொல்லிவிடுகிறேன்.

பூர்ணிமா என்கிற பெண் ஒருமுறை தன்னுடைய டூ-இன்-ஒன்னை ரிப்பேர் செய்ய வந்த போது நச்சு நச்சென்று பேசினாள். முதலில் அது ஏதோ அரட்டை என்று இருவரும் எண்ணிக் கொண்டிருந்தோம். பிற்பாடு அது காதல் என்று என்று எப்படித் தெரிந்தது என்றால் ஒருநாள் பூர்ணிமாவைப் பார்க்காவிட்டால் எனக்கு ஞமஞம என்று வயிற்றுக்குள் என்னவோ செய்தது.

பூர்ணிமாவுக்கும் அஃதே என்று தெரிந்ததும் விஸிஆர், டூ-இன்-ஒன் போன்றவற்றிற்கு அப்பால் எங்கள் சினேகிதம் தொடர நான் அவள் வீட்டு டில்ட்டிங் கிரைண்டர், கிணற்று பம்புக்கு பேரிங் என்று என்ன என்னவோ என் தொழிலுக்கப்பாற்பட்ட ரிப்பேர்களை யெல்லாம் எடுத்துக்

கொள்ள, அவள் வீட்டில் ரிப்பேர் செய்ய எதும் பாக்கியிராத வேளையில் பாய் ஜார்ஜ், யூ டு பீட்டில்ஸ் பாடல்கள், வைரமுத்து லிரிக்ஸ், ஜுராஸிக் பார்க், ஷாருக் கான் என்று எங்கள் உரையாடற் புலம் விரிந்து, நான் பூர்ணிமாவின் கை பற்ற, பெற்றோரை சந்திக்க தக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கும் போது அந்தச் சம்பவம் வந்து எல்லாவற்றிலும் மண்ணைப் போட்டது.

என் கடைக்கு அருகே ஒரு பிள்ளையார் கோவில் உண்டு. யாருக்கோ பிள்ளை பேறு கிடைக்காது வேண்டிக் கொண்டதில் இரட்டைப் பிள்ளை பெற்றதால் பிரக்யாதி பெற்று கூட்டம் அம்மிய பி. கோ. அதனால் பல தரப்பட்ட மனிதர்களும் அதைச் சுற்றி வாசம் செய்தார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் என் கடை விலாசம் சொல்ல சௌகரியமான பிள்ளையார். ஏழைப் பிச்சைக்காரர்கள் குடும்பங்கள் அங்கே தனிப்பட்டு ஒரு காலனியாகவே இயங்கினாலும், அதனால் ஏற்பட்ட உபத்திரவத்தை நான் சகித்துக் கொண்டதற்குக் காரணம் இட முக்கியத்துவம்.

அந்த ஏழைப் பெண்களில் ஒருத்திதான் போன வியாழன் அடிப்பட்டு குற்றுயிராக கிடந்தாள். இது முதல் கேஸ். காலை கோவிலைத் திறக்க வந்த போது சாமிநாத குருக்கள்தான் பார்த்து ஹார்ட் அட்டாக்கே வந்து விட்டது. நல்லமுத்து என்கிற சைக்கிள் ஸ்டாண்டுக்காரரின் பெண் அவள். கட்டுமஸ்தான மேனி. பெயர் பேச்சியம்மா. கோவில் படிகளில் மேற்குப் பிரகாரத்தில் மயக்கமாக கிடந்தாள். மார்பு திறந்திருந்ததை ரசிக்க முடியாது. காதோர ரத்தம்.

அந்த வட்டாரமே வந்து வேடிக்கை பார்க்க போலீஸ், மந்திரி ஊர்வலம் முடிந்து பத்தரைக்கு வந்தார்கள். பேச்சியை இ.எஸ்.ஐ. ஆசுபத்திரிக்கு நாங்கள் கொண்டு



போக ஏற்பாடு செய்தோம். மண்டையில் அடிபட்டிருந்தாள். தலைக்குப் பின்னால் அவளைத் தூக்கும்போது தலைமயிர் கருங்கல் தரையுடன் ஒட்டிக் கொண்டிருந்த காட்சியை மறக்க முடியாது.

இதை பூர்ணிமாவிடம் சொன்னபோது அவள் ரசிக்கவில்லை. இரண்டு நாள் கடைப்பக்கமே வரவில்லை.

''ஏன் பூர்ணிமா?'' என்றேன்.

''பயமாக இருக்கிறது. கோவிலைத் தாண்டி வரும் போது பயமாக இருக்கிறது.''

நான் சிரித்தேன். ''என்ன பயம்?''

''கண்டுபிடித்து விட்டார்களா?''

''இல்லை. கேஸ் பதிவு செய்திருக்கிறார்கள். அந்தப் பெண் ஒரு மாதிரியாம். இளைஞர்களை எல்லாம் டீஸ் பண்ணுமாம். செத்துப் போகாமல் தப்பித்ததே அதிசயம்.''

'' அய்யோ!'' என்றாள்.

''அந்தப் பெண்ணின் முகம் கண்ணை விட்டு அகல வில்லை.''

''நீயும் வேடிக்கை பார்த்தாயா?''

''பார்த்து விட்டேன். அதான் சங்கடம். இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். மயக்கம் இன்னும் தெளிய வில்லை. தெளிந்ததும் விவரம் தெரியும்.''

அப்போதுதான் பூர்ணிமா அந்தப் பல்லவியை ஆரம்பித்தாள். ''கோவி, இந்த இடத்திலிருந்து கடையை எடுத்துரலாமே?''

''வாட் ஃபார்!'' என்றேன் அதிர்ந்து.

''ஏரியா நல்லால்லே. அசோக் நகர் போய்டலாமே?''

''இல்லை பூர்ணிமா. இங்க எனக்கு முன்னூறு கஸ்டமர் இருக்காங்க. அவங்களாலேதான் வண்டியே ஓடுது. அவங்களை விட்டுட்டு எப்படி வர முடியும்?''

''பெண்களை இப்படித் தாக்கற இடத்தில போய் கடை இருந்தா அப்பா நம் கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டாரு.''

''என்ன புதுசா சொல்றே. கமான் பூர்ணிமா. இது ஒரு தனிப்பட்ட சம்பவம். இப்பவே பலபேர் அதை மறந்தாச்சு. பாரு பிள்ளையார் கோவில்ல எத்தனை கூட்டம் பாரு. நீ அனாவசியமா கவலைப்படாதே. பயப்படாதே.''

''அப்படிங்கறியா!'' என்றாள்.

''அப்படிங்கறேன்.'' (நாங்கள் அடிக்கடி பரிமாறிக் கொள்ளும் உரையாடல் இது.)

''அப்ப எங்கப்பாகிட்ட சமாதானம் சொல்றியா?''

''கவலையே படாதே. நான் இன்னும் இப்பதான் கடையை விரிவுபடுத்தி பூர்ணிமா எண்டர்ப்ரைசஸ்னு பேரை மாத்தி எத்தனை ப்ளான் வெச்சிருக்கேன்.''

அத்தனையின் பேரிலும் மண்ணும் தண்ணீரும் சேர்ந்து விழுந்தது போல் அடுத்த தாக்குதல் நடந்தது. மாத முதலில் வியாழக்கிழமை.

மற்றொரு பெண் அதே பிள்ளையார் கோவில் அருகில் படியருகில் அடிபட்டுக் குற்றுயிரும் குலை உயிருமாகத் தாக்கப்பட்டுக் கிடந்தாள்.

இம்முறை இந்தப் பெண் நம் பேட்டையைச் சேர்ந்தவள் கூட இல்லை. வியாழக்கிழமை தோறும் எதோ வேண்டுதலுக்காக வருகிறவளாம். பிரகாரத்தைச் சுற்றி வரும்போது மேற்குப் பக்கத்தில் மண்டையில் அடிபட்டு மயக்கமாக விழுந்திருந்தாள். ஆளரவம் கேட்க, தாக்கினவன் ஓடிப் போயிருக்கிறான். அதைவிட தீவிரமாக இல்லையெனினும் வட்டாரத்தையே கலக்கி விட்டது அந்தத் தாக்குதல்.



போலீசு வந்து பெண்ணை விசாரித்ததில் பெயர் மகேஸ்வரி என்றும், அவள் கணவன் ஐ.ஸி.எப். பெரம்பூரில் வேலை செய்வதாகவும் அவள் போலீஸ்க்குச் சொன்ன சாட்சியத்தை விலாவாரியாகத் தந்தியில் போட்டிருந்தார்கள்.

''என்னை பின்னால் வந்து தாக்கினான். அவன் முகத்தைப் பார்க்க முடியவில்லை. ஒரே ஒரு வாக்கியம்தான் பேசினான். **'எல்லாரும் எல்லாரும் சாகணும். ஒவ்வொருத்தரா ஒவ்வொருத்தரா,'** என்றான். அதன்பின் எனக்கு மயக்கம் வந்து விட்டது. மயங்கி விழுந்து விட்டேன்'' என்றாள்.

பூர்ணிமா எனக்கு ஃபோன் செய்து வரவழைத்தாள். ''கோவி, நான் கடைக்கு இனிமே வர மாட்டேன்.''

''ஏன் பூர்ணிமா?''

''அந்த ஆசாமி அகப்படறவரைக்கும் எனக்கு அந்தப் பக்கமே வர பயம்.''

''ஏன் இவ்வளவு கோழையா இருக்கே?''

''என்ன வதந்தி தெரியுமா? ஏரியாவில உள்ள எல்லா இளம் பெண்களையும் அவன் கொல்லப் போறதா சபதம் வெச்சிருக்கானாம். அவனை யாரோ ஒரு பெண் ஏமாத்திட்டாளாம்.''

''அப்படின்னு யாரு சொன்னது?''

''அப்படித்தான் பேசிக்கிறாங்க.''

''டோண்ட் பி. ஸில்லி. போலீஸ் கண்டு பிடிச்சுருவாங்க பூர்ணிமா.''

''எங்க அப்பாகிட்ட பேசிட்டேன் கோவி. அவர் கடையை விட்டுடணும்னார். மெக்கானிகல் இன்ஜினீயரிங் பாஸ் பண்ணவன் எதுக்கு ரேடியோ ரிப்பேர் பண்ணனும்?''

''நான் ரேடியோ ரிப்பேர் எடுக்கிறதில்லை. டி.வி., வி.ஸி. ஆர்.''

''ஏன் ஸ்திரமா வேலை பார்க்கக் கூடாது. ஐ.ஸி.எப்.ல அப்ரெண்டிஸா சேர்க்க ஏற்பாடு செய்யறேங்கறாரு. அதுக்கு சம்மதமானாத்தான் கல்யாணம்ங்கறாரு.''

''கமான் பூர்ணி. இதைப் பத்தி நாம நிறைய பேசியாச்சு. எனக்கு ஒருத்தன் கிட்ட கைகட்டி வேலை செய்ய இஷ்டமில்லாமத்தான் இப்படி இன்டிபெண்டன்ட்டா மனசுக்குப் பிடிக்கிறதை செய்யறேன். அப்பாகிட்ட சொன்னியா? மாசம் பத்தாயிரம் சம்பாதிக்கறேன்னு சொன்னியா?''

''சொன்னேன். பத்தாயிரம் இப்ப குறைஞ்சுருமாம். அந்த ஏரியாவுக்கு இனி யாருமே வரவே மாட்டாங்களாம். பயம், பீதி பரவினதால பிள்ளையார் கோவில்லயே கூட்டம் குறைஞ்சு போச்சு. பிடிவாதம் பிடிக்காதீங்க. ப்ளீஸ் விட்டுருங்க!''

''என்னடாது, இது வம்பா போச்சு?'' என்று ஃபோனை வைத்தேன்.

பூர்ணிமா சொன்னதில் உண்மை இருப்பதாகத்தான் பட்டது. நடேசன் கடைக்கு வந்திருந்தான். ''என் செட் டயனோரா பாத்திங்களா கோவி!''

''இன்னும் எடுத்துக்கலை நடேசன். வர சனிக்கிழமை கொடுத்துர்றனே!''

''வேண்டாங்க. செட்டை ரிப்பேரே இல்லாமக் கொடுத்துருங்க. நம் ஏரியாவிலேயே பாத்துக்கறேன்.''

''ஏன் நடேசன்?''

''இந்த ஏரியாவுக்கு வந்து போறது கஷ்டமா இருக்குது.''

''வன்முறை செயல்கள் நடக்குதுன்னு பயமா? அதான் காரணமா?''



''அதுவும் காரணம்தான். ரெண்டு பஸ் பிடிச்சு வரது கஷ்டமா இருக்கு.''

''இதுவரை வந்தீங்களே!''

''இதுவரைக்கும் வந்தேன். இப்ப வரலை.''

எனக்கு ஆத்திரமாக வந்தது. அடுத்த வாரத்தில் புது கஸ்டமர்கள் யாரும் வரவில்லை. ரிப்பேர் கொடுத்தவர்கள் நடேசன்போல் அரைகுறையிலேயே செட்டுகளை எடுத்துக் கொள்ளத் தயாராக வந்தார்கள்.

சம்பவங்களின் தாக்கத்தால் ஏரியாவிலேயே நடமாட்டம் குறைந்து வந்தது. சாயங்காலம் ஏழானால் கோவில் ஈ அடித்தது. பிச்சைகாரர்கள்கூட ஸ்தலம் மாறிவிட்டார்கள். எனக்கு ஒரு மாதிரி கடுப்பாக இருந்தது. போலீஸ்காரர்கள் என்ன செய்கிறார்கள் என்று போலீஸ் நிலையத்தில் சென்று அங்கே இருந்த இன்ஸ்பெக்டரிடம் விசாரித்தேன்.

''ரெண்டு கேஸ் ஆயிருச்சே. நீங்க என்ன செய்துகிட்டு இருக்கீங்க?''

''எப்.ஐ.ஆர். பதிவாகி கேஸ் பதிவாகியிருக்கிறதே, விசாரிச்சுகிட்டு இருக்கோம்.''

''ரெண்டு தாக்குதலையும் செய்தது ஒரே ஆள்னாவது சொல்ல முடியுமா?''

''ஒரே ஆளா இருக்கலாம். ரெண்டாளா இருக்கலாம். மூனு பேரா இருக்கலாம். முதல்ல அடிபட்டதே பொண்... அதுக்கு ஏதும் ஞாபகம் இல்லை. கோமால இருக்குது.''

''அப்படியே போனா என்ன ஆறது. எங்க வட்டாரத்து வியாபாரமெல்லாம் படுத்துப் போச்சுங்க.''

''உங்க சங்கத்தில் ஒரு ஜாயிண்ட் அப்பீல் எழுதிக் கொடுங்க. பீட் கான்ஸ்டபிள் போடறோம். போலீசுன்னா மெல்லத்தான் செயல்படும். கண்டு பிடிச்சுருவோம்.

கவலைப்படாதீங்க. நீங்கதான் ஜெனித் ரிப்பேரா? எங்கிட்ட ஒரு ஜப்பான் செட்டு இருக்குது நேஷனல். அதுக்கு காயில் போயிருக்குது!''

ரிப்பேர் பண்ணினா குற்றவாளியைப் பிடிச்சுருவீங் களா?''

''என்னங்க நீங்க. தமாஷ் பண்ணிகிட்டு,'' என்றார்.

அப்போதுதான் தீர்மானித்தேன், திருடனை நானே கண்டு பிடிப்பது என்று.

இப்படித் தீர்மானித்த பின்னர் முதல் தாக்கதலுக்கு உள்ளான பேச்சி என்கிற பெண்ணை இ.எஸ்.ஐ ஆசுபத்திரியில் போய்ப் பார்த்தேன். அவளது நினைவு திரும்பியிருந்தாலும் அவள் தகப்பன் நல்லமுத்து படுக்கை அருகே ஸ்டூல் போட்டு உட்கார்ந்திருந்தான். ''பத்திரிக்கைக் காரர்களா?'' என்றான்.

''இல்லையப்பா. ஜெனித் சர்வீஸ் சென்டர், டி.வி. ரிப்பேர்க் கடை வெச்சிருக்கேன்.''

''ஓ, அவுங்க்ளா!''

பேச்சி என்னை தூரப் பார்வை பார்த்தாள். மண்டையில் ப்ளாஸ்திரி போட்டிருந்தது.

''ஒரு காது சுத்தமா கேக்காம போயிருச்சி.''

கிட்ட போய், ''பேச்சி நல்லாருக்கியா?''

அவள் தலை அசைத்தாள்.

''உன்னை தாக்கினவன் முகம் ஞாபகம் இருக்கா?''

''இல்லை,'' என்று தலையசைத்தாள்.

''அவன் ஏதாவது சொன்னானா?''

புரியாமல் பார்த்தாள்.

'''எல்லோரும் சாகணும், ஒவ்வொருத்தரா சாகணும்' இப்படி ஏதாவது பேசினானா?''



பேச்சி தகப்பன் முகத்தைப் பார்க்க-

''இத பாருங்க. அவன் என்ன சொன்னானோ சொல்லலையோ! எம்மவ இனிமே எதுவும் அடையாளம் காட்ட மாட்டா, பேச மாட்டா... பத்திரிக்கைகாரர்களும், போலீஸ்காரர்களும் சேர்ந்து குளப்பினது போதும்.''

''இல்லை நல்லமுத்து. ரெண்டாவது முறை அதே இடத்துல அட்டாக் ஆயிருக்கு. அதே ஆசாமிதானான்னு தெரிஞ்சுக்க.''

''தெரிஞ்சுகிட்டா என் மகளுக்குக் காது கேக்குமா, மூக்கு வழியா அப்பப்ப ரத்தம் வடியறது நிக்குமா?''

''அதுக்கில்லை. நல்லமுத்து...''

''நீங்க தயவு செய்து போறீங்களா?'' என்றார் அதட்டலாக.

பேச்சி என்னைப் பார்த்த பார்வை 'மன்னிச்சுக்கங்க' என்றது.

அடுத்த மாத முதல் வியாழனில் வாரத்தில் மூன்றாவது தாக்குதல் நிகழ்ந்தது. இந்த முறை மிகத் தீவிரமாக தாக்கல். இந்த முறையும் பெண்தான். தன்னுடைய கினெட்டிக் ஓண்டாவை நிறுத்தி வைத்து விட்டு பரீட்சையில் நிறைய மார்க் வாங்கவேண்டும் என்று பிள்ளையாரை வேண்டிக் கொள்ள வந்த காலேஜ் யுவதி. வட்டாரத்துக்குப் புதுசு போலும். இவளும் பைக்கில் ஏறி ஸ்டார்ட் பண்ணும்போது ''என் பின்னால ஏதோ சப்தம் கேட்க, ஒருத்தன், 'நீங்க எல்லாரும் சாகணும்'னு கூவிக்கிட்டே வந்தான். எனக்கு பயமாப் போய் பைக்கை போட்டுட்டு அப்படியே கூச்சலிட்டு ஓடினேன். அவன் தாக்கினது என் மண்டையைத்தான். நல்லவேளை தோள்பட்டையில பட்டு அடி.''

எலும்பு முறிந்து பெரிசாக பாண்டேஜ் போட்டுக் கட்டியிருந்தாள். முகத்தில் தழும்பு, அவள் தோற்றத்தை பாதித்திருந்தது. எல்லாம் போச்சு என்று கண்ணீர் விட்டாள். உயிரோடு இருக்கிறாளே என்று யாராவது சமாதானப்படுத்தியிருக்கலாம்.

'மீண்டும் பெண் தாக்கி!' என்று கொட்டை எழுத்தில் பேப்பர்களில் போஸ்டர்கள் தொங்க, வட்டாரத்தில் பெண்கள் நடமாட்டமே குறைந்து போய் ஒரு சில தெரு நாய்களும், மத்தியான வேளை மாம்பழ வண்டி வியாபாரிகளும்தான் தெரிய, சாமிநாத குருக்கள் ஏழரைக்கே கோவிலை இழுத்துப் பூட்டிக் கொண்டு போகத் துவங்கினார்.

பூர்ணிமா டெலிபோனில் பேசக்கூட பயப்பட்டாள். அவளை பீச்சில் சந்தித்தபோது மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது.

''கோவி, எனக்குக் கல்யாணத்துக்கு இண்டுல அட்வர்டைஸ்மெண்ட் கொடுக்கப் போறாங்க.''

''நானும் அப்ளை பண்றேன், பூர்ணி.''

''விளையாடாதே. நீ கடையை விடற வரைக்கும் உனக்கு சான்ஸே இல்லை கோவி!''

''அப்படிங்கறியா!''

''அப்படிங்கறேன்.''

''பூர்ணிமா நீ என்னை மனமாரக் காதலிக்கிறேதானே!''

''சந்தேகமே இல்லை. நெஞ்சைத் தொட்டுப் பாரு. உன் பக்கத்துல உக்காந்தாலே ஹார்ட் ஓவர் டைம் வாங்குது,'' என்று என் கையை எடுத்து மார்பில் பதித்துக் காட்டினாள்.

''எனக்கும்தான்.''

''பூர்ணிமா, எனக்கு உதவி செய்வாயா!''

''என்ன உதவி?''



''நான் பெண்களைத் தாக்கற அந்த ஆளை கண்டு பிடிக்கத் தீர்மானிச்சுட்டேன். போலீஸ் கண்டுபிடிக்க மாட்டாங்க. என்னால முடியும்னு தோணுது.''

''எப்படி சொல்றே?''

''மூணு தாக்குதல் நடந்திருக்கு. மூணு தாக்குதலையும் நான் என் டி.வி. சர்க்யூட்ல சர்க்யூட் டயாக்ரம் இல்லாம ட்ரபிள் ஷூட் பண்ற மாதிரி அனலைஸ் பண்ணேனே, இங்க சிக்னல் இருக்கு, இங்கதான் இல்லை. இங்கதான் ஃபால்ட். அந்த மாதிரி அதுலயும் ஒரு பாட்டர்ன் அகப்படும்!''

''அப்டீன்னா?''

''இந்த ஆசாமியோட மூணு சம்பவத்லயும் ஒற்றுமைகள் என்னன்னா, எல்லாமே பிள்ளையார் கோவில்ல மேற்குப்புறத்து பிரகாரத்தில! எல்லாமே பெண்கள்! அதை விட முக்கியம் எல்லாமே மாசத்தின் முதல் வியாழக்கிழமைல.''

''அப்படியா? எல்லாம் சரி. அதிலருந்து என்ன கண்டு பிடிக்கப் போறே!''

''வர மாத முதல் வியாழக்கிழமை அவன் மறுபடி வருவான்.''

''எத்தனையோ பேர் வருவாங்க. அவன்தான்னு எப்படி கண்டு பிடிக்கறது?''

''அதான் சிக்கல் பூர்ணிமா. கோவிலுக்கு இப்ப பெண்கள் யாருமே வரதில்லை. அதனால...''

''அதனால?''

''வர வியாழக்கிழமை நீ அந்தப் பக்கம் வந்து உலாவணும்.''

அவள் அதிர்ந்து போய், ''உனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கா? நானும் அவங்களைப் போல் அடிபட்டுச் சாகணுமா?''

''இல்லை பூர்ணிமா. நான் வந்து அங்க பக்கத்திலேயே இருப்பேன். உன் மேல் ஓர் அடி கூட படாது. தாக்க வரதுக்குள்ளவே பிடிச்சுருவேன்.''

''நத்திங் டூயிங்'' என்றாள். ''நோ! முடியவே முடியாது,'' என்று எழுந்து என் கண்ணில் மண்ணை இரைத்து விட்டுப் போனாள்.

அவள் போனதும்தான் நான் யோசித்துப் பார்த்ததில் 'என்ன பைத்தியக்கார திட்டம் இது! நான் தக்கசமயத்தில் வர முடியாமற் போய் அவள் அடிபட்டு விட்டால்! என்ன ஒரு ரிஸ்க் எடுக்க இருந்தேன்!' என்று என் தலையில் தட்டிக் கொண்டேன்.

அடுத்த தினங்கள் சோக தினங்கள், பட்டப் பகலில் ஒரு வாக்மன் திருட்டுப் போயிற்று. சாக்கிரதை இல்லாமல பூர்ணிமாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததால் நிகழ்ந்தது. பூர்ணிமாவின் மேட்ரிமோனியல் மணமகன் தேவை விளம்பரம் ஹிந்துவில் வந்திருந்தது. 'நன்றாகப் படித்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஐந்தடி ஆறு அங்குலம் சிவப்பான பெண்ணுக்கு சர்க்கார் அல்லது பேங்க் உத்தியோகத்தில் உள்ள சென்னை மாப்பிள்ளை தேவை' யாம். வி.சி.ஆர், டி.வி. ரிப்பேர்காரர்கள் கேட்கவில்லை.

ரிப்பேர் வேலையும் மெல்ல மெல்லக் குறைவாகிவிட லாட்டரி ஏஜென்ஸி எடுக்கலாமா, டெலிபோனுக்கு வாசனை போடலாமா என்றெல்லாம் மாற்று உத்தியோகங்களை யோசித்துக் கொண்டிருந்தேன்.

பூர்ணிமாவுக்குப் போன் செய்தபோது அவள் இல்லை என்று அப்பா பொய் சொன்னார். சந்திக்க முடியாமல போய்விட்டது. எனக்கு நாட்கள் மறந்து போயின. ஷேவ் பண்ணுவது போன்ற நாகரிக சமாசாரங்களையெல்லாம் மறந்து ஜென் பௌத்தம் படிக்க ஆரம்பித்தேன்.



இதனிடையில் பிள்ளையார் கோவில் பக்கம் போய் ஏதாவது துப்பு அல்லது க்ளூ கிடைக்கிறதா, யோசனை தோன்றுகிறதா என்று குருட்டு யோசனையுடன் சென்றேன். அதன் பிரசித்தி பெற்ற மேற்குப் பிரகாரம் வெறிச்சிட்டு இருந்தது. குருக்கள் அவசரமாகக் கதவைப் பூட்டிக் கொண்டிருந்தார். பட்பட்டென்று குழல் விளக்குகளை அணைத்துக் கொண்டிருக்க பிரகாரத்தில் இருள் பரவ, ''என்ன குருக்களே ஏதாவது இம்ப்ரூவ்மெண்ட் உண்டா?''

''அதை ஏன் கேக்கறீங்க கோவிந்தராஜ்? கணபதி நம்மை ரொம்ப சோதிக்கிறார். மாசி மாதம் போகட்டும்னு கனாவில வந்து சொன்னார். பங்குனி வந்தா இந்த ஸ்தலத்துக்கு விமோசனம்.''

''பாராவுக்கு ஆள் போட்டு பார்த்தேன். சும்மா பண விரயம். பக்தாள் வர மாட்டேங்கறா. அதும் பொம்மனாட்டிகள் வரவே மாட்டேங்கறா. பொம்மனாட்டி கள் இல்லைன்னா கோவில் ஏது? என்ன சோதனையோ கணேசா கணேசா,'' என்று கைலாசம் வரை கேட்கும் போல பெரிசாக அங்கலாய்த்தார். அவர் பூட்டிச் செல்ல நான் அந்தப் பிரசித்தி பெற்ற மேற்குப் பிரகாரத்தை அண்டி அதில் நடந்தேன். வெறிச்சென்றுதான் இருந்தது. இன்றைக்கு என்ன கிழமை யோசித்தேன். நேற்று சித்ரஹார் வந்ததே?

இன்றைக்கு வியாழன்தான். தேதி ஐந்து. பெண்தாக்கி வரலாம். ஒருவேளை அவன் வருவானோ என்று சுற்றிலும் பார்த்தேன். சட்டென எனக்கு சகலமும் வெல வெலத்துப் போச்சு. தூரத்தில் ஓர் உருவம் தெரிந்தது. அது என்னை நோக்கி அவசரமாக வர, நான் என்னடாது இந்த முறை ஆண்களைத் தாக்க வருகிறானா? பின் வாங்கி விரைவாக நடக்க முயன்ற போது ''கோவி... கோவி...'' என்று குரல் கேட்க - எப்படி என் பெயர் தெரியும்? என்று வியந்த போது உருவம் கிட்டே வர-

பூர்ணிமா!

''பூர்ணிமா நீ எங்க இந்த பக்கம்?''

''கோவி, நான் வீட்டை விட்டு ஓடி வந்துர்றேனே; உன்னை எங்கல்லாம் தேடறது? போப்பா! பிள்ளையார் கோவில் பக்கம் தப்பித் தவறி...''

''என்ன ஆச்சு பூர்ணிமா?''

''அப்பா ஒரு மாப்பிள்ளையை ஏற்பாடு பண்ணிட்டார். ஹிந்து விளம்பரத்துக்கு ஏற்ப எல்.ஐ.சி.யில இருக்காராம். பேசறது முழுக்க எல்.ஐ.சி. தவிர வேற எதுவுமே கிடையாது. இப்ப அசிஸ்டண்ட் மானேஜராம். இன்னும் ஒரு வருஷத்தில் சீனியர் அசிஸ்டெண்ட் மானேஜர். ரிட்டயர் ஆறப்ப ஜெனரல் மானேஜர். கோவி, எப்படியாவது எங்க அப்பாகிட்ட வந்து சமாதானமாச் சொல்லி வேலை செய்ய ஒப்புத்துக்கறேன்னு சொல்லிவிடு. இந்தத் தியாகம் கூட பண்ண மாட்டியா எனக்காக கோவி... கோவிந்தா.''

அவள் இருளில் என்னிடம் வந்து என் மார்பில் விழ நான் பூர்ணிம்மா என்று அவளை பலமுறை சமாதானப் படுத்த தடவிக் கொடுக்கிற போது மற்றொரு விஷயத்தை முழுவதும் மறந்து விட்டேன். இன்று முதல் வியாழக் கிழமை.

''கோவி பயமா இருக்கு. வா கடைக்குப் போகலாம்,'' என்றாள்.

சரி என்று கிளம்புமுன், ''கோவி அங்க பாரு!'' என்றாள்.

அவள் காட்டிய திசையில் சந்திலிருந்து ஓர் உருவம் சட்டெனப் புறப்பட்டு என் பூர்ணிமாவின் மேல் தாக்க, ''ஆப்ட்டியா, ஆப்ட்டியா! நீங்க எல்லோரும் சாவணும்.''

அவளைக் கீழே கவிழ்த்து அவள்மேல் விழுந்த அந்த அடியை வாங்கிக் கொண்டேன். அது வலுவான இரும்பு



ஆயுதம்போல இருந்தது. மண்டை வெடித்திருக்கும். புஜத்தால் தடுக்கியதால் தப்பித்தேன். இருந்தும் ஒரு வலித் துண்டம் தோளில் வெடித்தது. இடறிக் கீழே விழுந்தேன். விழும்போது முழங்காலால் அவன் விரைக் கொட்டையில நன்றாக உதைத்தபோது நிச்சயம் ரண்டும் தொண்டை வரை போயிருக்க வேண்டும். அம்மா என்று பிடித்துக் கொண்டு அப்படியே கீழே விழுந்தான்.

நான் அவன் மார்மேல் கால் வைத்து அழுத்த எனக்கு தோள் வலித்ததால், அதிகம் வலது கையால் திரும்பி அடிக்க முடியாமல் இரைக்க இரைக்க - பூர்ணிமா பக்கத்தில் பந்தல் போட்டிருந்த ஒரு கம்பை எடுத்துக் கொண்டு வந்து அவன் தலைமேல் மொட்டென்று வைத்தாள். அவள் போட்ட அலறலில் அக்கம்பக்கத்துக்காரர்கள் சேர்ந்து கொள்ள குருக்கள் சாவி குலுங்க ஓடி வந்தார்.

ராத்திரி எட்டரைக்கு இன்ஸ்பெக்டரைப் போய்ப் பார்த்தேன். அவனை கைது பண்ணி போலீஸ் லாக்கப்பில் வைத்திருந்தார்.

''ஒத்துக்கிட்டான். முன்னாடி தாக்கினதும் இவந்தானாம்?''

''ஏன் தாக்கினானாம்?''

''என்னவோ சொல்றான். பொம்பளைங்கள்னாலே வெறுப்பாம்.''

இருபது இருபத்தொன்று வயதிருக்கும். உயரமாக ஒல்லியாக இருந்தான். உதடுகள் கறுத்து, கையில் பல இடங்களில் ஊசி குத்தியிருந்தது டிரக் பழக்கத்தை காட்டின.

நான் மெல்ல அவனை அணுகினேன். ''என்னப்பா உம் பேர் என்ன?''

அவன் என்னை வெறுப்பாகப் பார்த்து துப்பினான்.

''மூத்திரம்,'' என்றான்.

''மூத்ரம் வரதாம்,'' என்றேன்.

''பேரே மூத்திரமாம். நட் கேஸ்னு நெனைக்கிறேன்.''

''என்னை மூத்திரத்தில மிதக்க விட்டல, அதான் என் பேரு!''

ஆனால அவன் பைத்தியமில்லை. அவன் கோர்வையாகத்தான் பேசினான். ''என்னப்பா, ஏம்பா போறவர பொம்பளைங்களை எல்லாம் தாக்கறதுல என்ன அர்த்தம்? எதுக்காகத் தாக்கினே?''

''உங்கம்மாளை நான்...'' என்றான் கெட்ட வார்த்தையாக.

''பாருப்பா, உம் பேர் சரியாகத் தெரியலை. இருந்தாலும் சொல்றேன். வாழ்க்கைல எத்தனை கஷ்டமிருந்தாலும் இந்த மாதிரி சமூக விதிகளை எதிர்த்து, இருக்கிற பெண்களை எல்லாம் தாக்கறதனால அழிக்க முடியாது. ஒன்னைப் பெத்ததே ஒரு பெண்தானேடா,'' என்றேன்.

அவன் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். ''என்னைப் பெத்தவ ராச்சசி. அம்மா இல்லை ராச்சசி. குளந்தைல கட்டிலுக்குக் கீள படுக்க வெச்சுட்டு விபசாரம் பண்ணாய்யா,'' என்றான்.

எனக்கு நெஞ்சை அடைத்தது.

''அதனால உலகத்தில் உள்ள எல்லா பெண்களையும் அழிக்கணும்னா என்ன நியாயம்?''

''எனக்கு என்னா கத்துத் தந்தா தெரியுமா? ஆள் பிடிக்க, கஸ்டமர் கூட்டியாற! ஏதாவது தொழில் கத்துத் தந்தாளா?''

''நான் கத்துத் தரேம்பா, உனக்கு ஒரு தொழில்!''

''என்ன தொழில்?''

''டி.வி. ரிப்பேர்,'' என்றேன்.



பிள்ளையாருக்கு ஒரு சுவாமிகள் வந்து சம்ப்ரோக்ஷணம் பண்ண, பயம் விட்டு கூட்டம் வந்து விட்டது. நான் விடியோகான் ஏஜென்ஸி எடுத்திருக்கிறேன். மல்ட்டி பர்பஸ் கிச்சன் மிஷினும் எடுத்திருக்கிறேன்.

பூர்ணிமாவின் 'ஹிந்து'க்கு கொடுத்த விளம்பரம் வேஸ்ட் ஆகி விட்டது.

அதோ என் ஷோ ரூம் ரிஸப்பஷனில் உட்கார்ந்திருக்கிறாள். கூட்டம் அதிகமாகி ஏ. ஸி. பண்ண வேண்டியதாகி விட்டது. மாடியில் லாபில் அந்த பையன் துடியாக எல்லா செட்டுகளையும் ரிப்பேர் செய்கிறான்.

அவன் நிஜப் பெயர் சத்யா.

*-குமுதம், ஜூலை, 1994.*

# ஓலைப்பட்டாசு

அந்த தீபாவளி என் வாழ்க்கையில மறக்க முடியாதது. அதைப் பற்றிச் சொல்வதற்குள் தேவைப்பட்ட அளவுக்கு மட்டும் சுயபுராணம்.

என் பெயர் எதற்கு? நான். அவ்வளவுதான். மற்றவர் பெயர் முக்கியம். அதுவும் சந்தானம் ஐயங்கார், பெருந் தேவி, சின்னா இவர்களின் பெயர்கள், இந்தக் கதைக்கு என்னிலிருந்து அவர்களை அந்நியப்படுத்துவதற்கு முக்கியம்.

பார்த்தீர்களா... ஆரம்பித்த விஷயத்தை விட்டு அலைகிறேனே. காரணம்– என் வயசு இன்றைக்கு எழுபது. பார்த்த மரணங்கள் ஆறு. இரண்டு மனைவிகள். ஒரு தேசிய விருது. ஒரு நாள் ஜெயில். ஒரு ப்ராஸ்டேட் ஆபரேஷன். காராஜில் நெருக்கமாக மூன்று கார்கள். உறவினரின் துரோகங்கள். தென் ஆப்பிரிக்கா டர்பானில் இரண்டு வருஷம். இவ்வாறு அதிகம் சேதப்படாமல் எழுபதை அடைந்துவிட்ட ஒருவன். இறந்து போனால் 'ஹிந்து'வில் எட்டாம் பக்கத்தில் நான்கு வரிகளில எழுபது வருஷமும் அடங்கிப் போகும்.



சொல்ல வந்தது அந்த ஒரு தீபாவளி பற்றி. சீரங்கத்தில் என் பன்னிரண்டாவது வயதில் என் பாட்டியின் கண்காணிப்பில் வாழ்ந்தேன். அதனால் கொஞ்சம் பணத் தட்டுப்பாடு. அந்த தீபாவளிக்கு பட்டாசு வாங்க மொத்தம் ஐந்து ரூபாய்தான் தந்தாள். இப்போது என் வீட்டில் ஐந்து ரூபாய்த் தாளைத் தரையில் விழுந்தால் வேலைக்காரர்கள் கூடப் பொறுக்க மாட்டார்கள். அப்போது குறைவான பொருளாதாரத்தில், ஐந்து ரூபாயில் அதிகப்படியாக சந்தோஷம் கிடைக்க... கொள்ளிடக் கரையருகில் ஓலைப்பட்டாசு சல்லிசாக விற்பார்கள். பனையோலையில் சின்னதாக வெடிமருந்தை வைத்து முடிச்சுப் போட்டு மிகச் சின்னதாக திரியுடன் பனையோலை வாலுடன் பிரமாதமாக வெடிக்கும். ஆனால், ரொம்ப உஷாராக இருக்க வேண்டும். பற்ற வைப்பதற்குள்ளே வெடித்துக் கையை உதற வேண்டி வரும். மேலும், ஒரு வாரம் வெயிலில் காயப் போட்டே ஆகவேண்டும். பாட்டி கொடுக்கும் காசில் ஓலைப்பட்டாசு பாதிப் பணத்துக்கு வாங்கிக் கொண்டு மிச்சத்தில் கொல்லன் பட்டறைக்குப் போய் ஒரு வேட்டுக் குழாயும் கந்தகப் பொடியும் வாங்கிக் கொண்டோம். இது ஒரு மாதிரி 'மினி' வேட்டுக்குழாய். நீண்ட கம்பியின் இறுதியில் ஒரு குழலும் போல்ட்டும் இருக்கும். குழலில் மஞ்சளான கந்தகத்தைக் கெட்டித்து அதனுள் போல்ட்டைச் சொருகி சுவரில் மடேர் என்று ஒரு அறை அறைந்தால் கேட்கும் வெடிச்சத்தம் நம் காதில் விண்ண்ணண் என்று அலறும் வெடியை விட திண்ணையில் 'சுதேசமித்திரன்' படித்துக் கொண்டிருக்கும் தாத்தாக்களின் பின் பக்கம் மெள்ள நழுவி ஒரு 'டமால்' அடித்து விட்டு கோரதமுட்டியை நோக்கி ஓடுவதில் உள்ள உற்சாகம்தான் மிகச் சுத்தமானது.

அந்த தீபாவளி ஓலைப்பட்டாசு காயப்போட மாடிக்குச் சென்ற போது பக்கத்து வீட்டு 'எடுத்துக்கட்டி'யின் மேல் செருப்பு வைத்திருந்தது. அதில் ஏறினேன். பின்னால்

யாரோ கஷ்டப்பட்டு முனகுவது போல் சத்தம் கேட்டது. உதவி தேவையோ என்று நான் சுவர் எகிறிக் குதித்து அந்தப் பக்கம் போய்ப் பார்த்தபோது சந்தானமையங்கார் தலையில் முண்டாசு கட்டிக் கொண்டு சின்னாவைப் பல இடங்களில் தடவிக் கொடுத்து சிகிச்சை மாதிரி என்னவோ செய்து கொண்டிருந்தார். சந்தானமையங்கார் அடுத்த வீட்டுக்காரர். எங்களையெல்லாம் ஓட ஓட விரட்டுபவர். கிரிக்கெட் பால் உள்ளே போனால் திருப்பித் தர மட்டார். 'வல்லார ஒழி' என்றெல்லாம் திட்டுவார். அவர் வீட்டு சுந்தா எங்களுடன் விளையாட வர மாட்டான், அவர்கள் எந்த விதத்திலோ பணக்காரர்களாம். கொலுவுக்கு சில்க் ஜமக்காளங்கள் போட்டு பெட்ரோமாக்ஸ் வைப்பார்கள். சின்னா அவர் வீட்டுச் சமையல்காரி. ரவிக்கை முந்தானையில் அவள் சேகரித்திருந்த கொய்யாக் காய்கள் சிதறிக் கிடந்தன. தரையெல்லாம் வியர்வையால் ஈரமாக இருந்தது. சந்தானமையங்காரின் செருப்புத்தான் 'எடுத்துக்கட்டி'யின் மேல் வைத்திருந்தது. ''என்ன மாமா பண்றீங்க'' என்று கேட்ட போது, அவர் திடுக்கிட்டு ''இவளுக்கு உடம்புச் சரியாக இல்லை மூச்சு வாங்கறதுன்னா... அதனால தசமூலாரிஷ்டம் கொடுத்து சரி பண்றேன். போடா போடா... நீ எங்க இங்க வந்து தொலைச்சே...ஓடிப் போ'' என்றார்.

''பட்டாசு காயப்போட வந்தேன். மாமியைக் கூப்பிடட்டுமா'' என்றேன்.

''மாமி பெட்டவாத்தலை போயிருக்கா. சுவரேறிக் குதிச்செல்லாம் வரக்கூடாது. போலீஸ்காரன் புடிச்சுப்பான்'' என்றார்.

இதையெல்லாம் கேட்காதது போல் சின்னா ஒரு மாதிரி மயக்கத்தில் கண்மூடிக்கொண்டு சற்றே நெற்றியைச் சுருக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.



நான் வீரராகவனிடம் சொன்னேன். வீரராகவன் எங்கள் கிரிக்கெட் காப்டன். ''பாவம்டா அவ. மேல்மூச்சு வாங்கிண்டிருந்தது. சந்தான மாமா தடவிக் கொடுத்தார். இல்லைன்னா ரொம்பக் கஷ்டப்பட்டிருப்பா'' என்றேன்.

அவன் அதைக் கேட்டுக் கைகொட்டிக் கண்ணீர் வரச் சிரித்தான். ''நீ கொக்கோகப் படம் எதும் பார்த்ததே இல்லையா? மார்கழி மாதம் உற்சவத்தில விக்குமே?''

''இல்லை...''

அவன் ''வா'' என்று உள்ளே சென்று பரண்மேல் ரஹஸ்யத்ரயம், திவ்யபிரபந்தசாரம் போன்ற புத்தகங்களின் நடுவே செருகியிருந்த பழுப்பான புத்தகத்தை எடுத்துப் பிரித்துக் காட்டினான்.

''ஆமாண்டா... இப்படித்தாண்டா சந்தான மாமாவும் சின்னாவும் இருந்தா...''

அவன் ஒரு வக்கீல் போல பல கேள்விகள் கேட்டு 'இது தெரிந்ததா?'', 'அது புரிந்ததா' என்றெல்லாம் கேட்டு அவ்வப்போது குபீர் குபீரென்று சிரித்து ''அடிச்சடா லக்கி பிரைஸ்'' என்று சொன்னது எனக்கு விளங்கவில்லை. அவ்வப்போது என் நண்பர்கள் என்னை மரியாதையுடன் பார்த்தார்கள். மீண்டும் மீண்டும் அந்தக் காட்சியை விவரிக்கச் சொல்லியே வதைத்தார்கள்.

''எனக்கு எல்லாம் புரியறது. ஆனா, எதுக்குடா தலைல முண்டாசு?'' என்றான் பாச்சு.

''அதாண்டா ட்ரிக்கு. அதைக் கட்டிண்டா அடையாளம் தெரியாதாம். வேற யாரோனு நினைச்சுண்டுருவோமாம்'' என்று வீரு விளக்க, புரிந்தும் புரியாமலும் இருந்ததை அவன் என்னை ஒரு மாதிரி பார்த்து, ''நீ ஒண்ணு பண்ணு. அவர்கிட்ட போய் 'மாமா! மொட்டை மாடில ஓலைப்பட்டாசு காயப்போட போயிருந்தபோது உங்களை-யும் சின்னாவையும் பார்த்துட்டேனே. மாமி பெட்ட-

வாத்தலைலிருந்து வந்தாச்சா'ன்னு... அவாள்லாம் சீட்டாடிண்டிருப்பா... அங்க போய்க் கேட்டுப் பாரு...''

''ஐயோ... போடா... தோலை உரிச்சுருவார்...''

''அதான் இல்லை. பாரேன் நடக்கிறதை. எதுக்கும் ஓடத் தயாராவே இரு. ஓரமா நின்னுண்டு கேட்டுட்டு வந்துரு. நடக்கிறதைப் பாரேன்.''

அவர்கள் மிகவும் கட்டாயப்படுத்த, நான் மெள்ள தைரியம் பெற்று பக்கத்து வீட்டு திண்ணைக்கு நழுவி ஓரத்தில் உட்கார்ந்தேன். வெள்ளிச் செம்பில் காபியும் பத்தமடைப் பாயுமாக 'ஆஸ்' ஆடிக் கொண்டிருந்தார்கள். புகையிலையைத் துப்பிவிட்டு வாய் கொப்பளிக்க வரும்போது என்னைப் பார்த்து சந்தானமையங்கார் திடுக்கிட்டு, ''என்னடா?'' என்றார்.

''மாமா, மாடில ஓலைப்பட்டாசு, பெருந்தேவி மாமி வந்தாச்சா பெட்டவாத்தலைலருந்து?'' இவ்வாறு ஆரம்பித்தவுடன் ''வாடா'' என்று என்னை அப்படியே அலாக்காகத் தூக்கி உள்ளே செலுத்தி என் வாயில் கல்கண்டு, அரிசி பப்ரமுட்டு, லேக்கா உருண்டை என்று இனிப்பான வஸ்துக்களைத் திணித்துவிட்டு ''என்ன பார்த்தே சொல்லு...''

''நீங்க சின்னாவுக்குச் சிகிச்சை எதும் பண்ணலை'' என்றேன்.

''பின்ன என்னவாம் அது?''

''வீரு சொல்றான் கொக்கோகமாம் அது...''

''மாமிகிட்டச் சொல்லாதே. சொல்லாம இருந்தா... உனக்கு என்ன வேணும் சொல்லு... சொல்லுடா கண்ணு...''

நான் யோசித்து ''எனக்கு சிங்க மார்க்கு பட்டாசு ஒரு சரம், ஒத்தைவெடி ஒரு டஜன், ரெட்டைவெடி ஒரு டஜன், கேப்பு துப்பாக்கி, குதிரைவால், தரைச்சக்கரம்,



ஊசிப்பட்டாசு, ராக்கெட், ஏரோப்ளேன், விஷ்ணு சக்கரம், லட்சுமி வெடி அப்புறம் வந்து பத்த வெக்க மட்டிப்பால் வத்தி'' என்று என் சக்திக்கேற்ப ஒரு பட்டியல் சொல்லிப் பார்த்தேன்.

அவர் எழுந்து அலமாரிக்குச் சென்று ஒரு காகிதத்தில் எழுதி, ''இதைக் கொண்டுபோய் டி.பி.ஜி. கடையில் கொடு. உனக்கு வேணுங்கறதை வாங்கிக்கோ. ஆனா, மாடில என்ன பார்த்தே?''

''ஓலைப்பட்டாசு காயப் போடறப்ப உங்களையும் சின்னாவையும்.''

''ஏய்... யாரும் கேட்டா அங்க ஏதும் பார்க்கலைன்னு சொல்லணும். அப்பதான் பட்டாசு.''

''சரி மாமா'' என்றேன்.

''சரி மாமா'' என்று என் தலையில் நெத்தினார்.

இந்தத் தீபாவளிக்கு நானும் வீரராகவனும் ஆசை தீர பட்டாசு வெடித்ததும் அல்லாமல் நிறைய கார்த்திகைக்கும் பாக்கி வைத்தோம். பாட்டி ''ஏதுரா இத்தனை பட்டாசு?'' என்றதற்கு, ''நாங்கள்லாமே சேர்ந்து சந்தா கட்டி வாங்கினோம் பாட்டி'' என்று புளுகினேன்.

அடுத்த தினங்களில் நான் எப்போது சந்தானமையங்காரைப் பார்த்தாலும் ''இங்க வாடா'' என்று உள்ளே பரிவுடன் அழைத்து, ''சக்கரைப் பொங்கல் சாப்டறியா? வறுத்த வாதாம் பருப்பு வேணுமா? அரவணை வேணுமா?'' என்று தின்னக் கொடுத்துக் கொண்டே யிருந்தார்.

சில நாட்களில் தைரியம் பெற்று, ''மாமா, தெற்கு வாசல்ல புதுசா ஒரு பம்பரம் வந்திருக்கு. கோல் எடுத்தா கைல அப்டியே பூனைக்குட்டி மாதிரி தூங்கறது மாமா'' என்றால்,

''உடனே போய் ரெண்டு பம்பரம் வாங்கிக்கோ... தலையாரில குத்து பட்டா மாத்துப் பம்பரம் வேணுமோ இல்லையோ'' என்பார். அப்றம் மேலும் தைரியம் பெற்று நிஜ கிரிக்கெட் பந்து, ஸ்டம்ப் எல்லாம் கேட்டுக்கூடக் கொடுத்துவிட்டார்.

பெருந்தேவி மாமி ''என்ன இப்படி இந்தப் பிள்ளைக்குச் செல்லம் கொடுக்கறீங்க?'' என்று கேட்டதற்கு, ''பையன் நன்னா படிக்கிறான். அதுக்கு ஒத்தாசை பண்ணலாம்னு'' என்றார் என்னைப் பார்த்துக் கண்சிமிட்டி.

இவ்வாறு இனிதாகக் கழிந்து கொண்டிருந்த தினங்கள் அதிகம் நீடிக்கவில்லை. வீரு ''ஒரு பார்க்கர் பேனா கேட்டுப் பார்'' என்று சொல்ல, சந்தானமையங்கார் வீட்டுக்குள் சுதந்தரமாக நான் நுழைய, மரவேலைப்பாடுகள் நிறைந்த கறுப்பு மேசைக் கண்ணாடியில் தெரிய, விறுவிறுப்பாகத் தன்னை விசிறிக்கொண்டு சந்தானமையங்கார் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருக்க, பக்கத்தில் அவர் மனைவி பெருந்தேவி கோபத்துடன் அழுது கொண்டிருக்க, அருகே ஓரத்தில் சின்னா வாயை முந்தானையால் பொத்திக் கொண்டு அவளும் அழுது கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் மாமி ''வாடா... இந்தப் பிராமணன் செய்த அநியாயத்தைப் பார்த்தாயோ... மொட்டை மாடில சின்னாவைக் கூட்டி வெச்சுண்டு...''

''ஏய், நீ போடா...''

''ஏண்டி, அந்தப் பிராமணன்தான் துப்புக் கெட்டுப் போய் கையைப் புடிச்சான்னா உன் புத்தி எங்கடி போச்சு? இடுப்பொடிஞ்ச சக்களத்தி, நீ நல்லபாம்புக் குட்டி, சக்கை திங்க வந்தவளே'' அதன்பின், ''உனக்குக் குளிர் காச்சல் வர... உனக்குப் பாடை கட்ட'' என்று பலமாகத் திட்டியதில் சின்னா, ''கிணற்றில் விழப் போகிறேன்'' என்று புறப்பட, எனக்கு அழுகை வந்து விட.. ''பாருங்கோ...



இந்தப் பிள்ளைகூட வருத்தப்படறது. உங்களுக்கு வெக்கமா இல்லை... ஓசிச் சிறுக்கி.''

நான் அழுதது அதற்காக இல்லை. சந்தான மையங்காரிடம் என் 'ப்ளாக்மெயில்' இப்படித் திடீரென்று மதிப்பிழந்து போய் விட்டதே என்றுதான்!

அடுத்த தீபாவளிக்குப் பழையபடி ஐந்து ரூபாய்க்கு ஓலைப்பட்டாசு, வேட்டுக் குழாய்தான்.

அந்தத் தீபாவளியை மறக்க முடியாதுதான். அந்த வயசிலேயே எனக்குக் கொஞ்சம் அவசரப்பட்டுக் கிடைத்த சில ஞானங்களால் அறியாச் சிறுவன்-அறிந்த சிறுவனாகி விட்டேன். அது என் பிற்கால வாழ்க்கையை எவ்வளவு தூரம் மாற்றி விட்டது! என் பிழைப்பே இந்த மாதிரி மற்றவர் பற்றித் தகவல், அவதூறு சேகரித்து விலை பேசுவதாகி, அதைப் பயன்படுத்திக் கொண்டு பணம் சேர்ப்பதாகி விட்டது. எத்தனையோ பேரை எத்தனையோ நளின மூர்க்கங்களில் பயமுறுத்தி நிறையவே காசு சேர்த்து விட்டேன். இப்போது தீபாவளிக்கு என் இரண்டு மனைவியருக்கும் எட்டாயிரம் ரூபாயில் புடவை எடுக்கிறேன். என் பிள்ளைகள் தொடர்ந்து அறுபது நிமிஷம் வெடிக்கும் ஆயிர ரூபாய் சரமெல்லாம் வெடிக்கிறார்கள்.

நான் பண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டு என் நாய்களுடன் பேசுகிறேன். ''சீஸர், ரீட்டா... அந்தத் தீபாவளியன்று சந்தானமையங்காரை நான் மாடியில் பார்த்திராவிட்டால் நான் எங்காவது பி.காம். படித்துவிட்டு ரயில்வே கிளார்க்காக நிம்மதியாக இருந்திருப்பேனே!''

ஆம்! என் முதல் பொய், முதல் பெண் தரிசனம், முதல் பணம் பிடுங்கும் வழி எல்லாமே அந்தத் தீபாவளியில்தான் துவங்கித் திருத்த முடியாமல் விகாரப்படுத்தப்பட்டேன்.

காரணம் - ஓலைப்பட்டாசு!

★

# கடவுள் இயந்திரம்

ஆபிசில் அவ்வளவு உற்சாக தினமல்ல. ரூபன் விட்டுப் போய்விட்டான். திலீபனுக்கு எய்ட்ஸ். நேத்ரி இன்னும் வரவே இல்லை. பத்து மணிக்கு நித்யனைப் பெரியவர் கூப்பிட்டனுப்பினார். உள்ளே நுழைந்ததும் புஸ்தி மீசையும் கழுத்துவரை மூடியிருந்த ஸ்கார்ப்பும் பட்டாபட்டி டீஷர்ட்டுமாகப் புன்னகைத்து எதிர் சீட்டில் அமர்ந்திருந்த சிறிய மனிதரைக் காட்டினார். ஒட்ட வெட்டப்பட்ட கிராப்புடன் கச்சிதமாக இருந்தார். பக்கத்துச் சீட்டில் தன் சைஸுக்கு ஒவ்வாத பெட்டி வைத்திருந்தார்.

''பையா, மீட் ப்ரொபசர் ராகவானந்தம். இவர் ஒரு அற்புதம் கண்டுபிடித்திருக்கிறார். நம்ம கம்பெனி மூலம் அதை விளம்பரப்படுத்த வேண்டும். இது, நித்யன். இந்த கம்பெனியின் உயிர் நாடி!''

''என்ன ப்ராடக்ட்?'' என்றான் நித்யன்.

பேராசிரியர் அவனை அற்பமாகப் பார்த்ததை ரசிக்காமல், ''கடவுள் பெட்டி. விளம்பரமே இப்படி வெச்சுரலாமே ப்ரொபசர்,'' பெட்டிக்குள் கடவுள் உங்கள் முட்டிக்குள் கடவுளு' ''முழங்கால் முட்டி ஞாபகம் வரும். ப்ராடெக்ட் என்ன செய்யும் சொல்லுங்க,'' என்றான் நித்யன்.



''சொல்லுங்க, ப்ரொபசர். நீங்கதான் கம்பெனி முதலாளியா?''

''இல்லை நான் கண்டுபிடித்த விஞ்ஞானி,'' என்று இரண்டு ஆஸ்ப்ரின் மாத்திரைகளைக் கிழித்து வாயில் போட்டுக் கொண்டார்.

''கடவுள் பெட்டின்னா? கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்க.''

''சிம்பிள். கடவுள் எங்கும் இருக்கிறார். இந்த பெட்டிக்குள்ள. அவரை கொஞ்சம் சிரப் மாதிரி கான்செண்ட்ரேட் மாதிரி அவரை கிரகிச்சு அடைச்சு வெச்சிருக்கேன்.''

''மை காட்!... எந்தக் கடவுள்?''

''எந்தக் கடவுள் தேவையோ, அந்தக் கடவுளை.''

''யு மஸ்ட் பி ஜோக்கிங் ப்ரொபசர்?''

''ஒரு முறை பாத்துட்டீங்கன்னா நம்புவீங்க. மின்சாரம் இல்லையா? அதைப் பாட்டரியில அல்லது கப்பாசிட்டர்ல சேர்த்து வைக்க முடியும், இல்லையா? மின்சாரம் ஒரு சக்தி. அதுபோல கடவுளும் சக்திதான். எங்கும் இருக்கிறார். அதனால் சப்ளை ப்ராப்ளம் இல்லை. மின்சாரத்தைப் போல. மின்சாரத்தைச் சேர்த்து வைக்க முடியும்னா, கடவுளைச் சேர்த்து வைக்க முடியாதா?''

நித்யனுக்கு நம்பிக்கையில்லை. ஆனால் க்ளையண்ட் கஸ்டமர் சொல்வது அனைத்தும் வேதவாக்கு என்பது கம்பெனி பாலிஸி.

''அப்ப பெட்டிக்குள் கைவிட்டா ஷாக் அடிக்குமோ?'' என்றான், கேலியாக.

''சில சமயத்தில்தான் ஷாக் அடிக்கும். ராமர், கிருஷ்ணன் அதெல்லாம் மைல்ட். காளி கொஞ்சம் உதறும். அல்லா, ஏசுநாதர் இவங்களெல்லாம் ரொம்ப மைல்டு.

புத்தர் புஷ்பம் மாதிரி, ரொம்ப பொறுமை. இந்தக் கிராமத்து மதுரை வீரன், காட்டு விரியன், முத்துக் கருப்பன் இவங்கதான் கொஞ்சம் அடக்க முடியாம போயிரும். அதுவும் மகமாயி...''

''என்ன சொல்றீங்க நீங்க? இந்தப் பெட்டிக்குள்ள எந்தக் கடவுளை வேணா அடைச்சு வெக்கலாமா?''

''அடைச்சு விற்கப் போறாரு,'' என்றார் பெரியவர்.

''அமேஸிங்? பெட்டியைக் கொண்டு வந்திருக்கிங்களா?''

அவர் தன்னருகில் இருந்த பெட்டியை எடுத்தார். ஒரு மாதிரி அரக்கு நிற ஓட்டுப் பெட்டிபோல உயரமாக குறுகலாக இருந்தது. ஆனால் பளபளப்பாக அரக்கு நிற பழைய காலத்து கிராமபோன் போலவும் இருந்தது. அதிலிருந்து மையமாக ஆனால் விருப்பமான வாசனை வந்தது.

''லெட் மீ ஸீ, இதுக்குள்ள கடவுள் இருக்காருங்கறீங்க?'' என்றான் ஆச்சரியத்துடன்.

''ஆமாம். கடைசியா வெச்சது ஜோராஸ்ட்ரிய கடவுள்னு நினைக்கிறேன். கொஞ்சம் சூடா இருப்பார்; பாகன் கடவுள் ஒருவர் இருக்கார். இனிமையா ஃப்ளூட் வாசிக்கிறார். கிருஷ்ணர்கூட பரவாயில்லை. பிருந்தாவன சாரங்கா நன்றாக வாசிக்கிறார். தொட்டுக் கேட்டுக்கிட்டே இருக்கலாம்,'' என்றார்.

நித்யன் முதலாளியைத் தனியாக அழைத்து, ''திஸ் மான் இஸ் எ நட்கேஸ்?'' என்றான்.

''நமக்கென்ன? விளம்பர ஏஜென்ஸி கொடுக்கிறாங்க. ஜெனரல் எலெக்ட்ரானிக்ஸ் பெரிய பார்ட்டி. அதுக்குள்ள கடவுள் இருக்கோ, கடலை இருக்கோ? விளம்பர வாக்கியம் அமைச்சு வசீகரமாக விளம்பரம் செய்யணும், அதானே!



கட்ஸ் இட்! பையா, கஸ்டமரின் மன ஆரோக்கியத்தைப் பற்றி நாம் கவலைப்படக் கூடாது.''

''இருந்தாலும் மக்களை ஏமாத்தறதில்லையா?''

''கடவுள் பெட்டிக்குள்ள இருந்தா என்ன வெளியா இருந்தா என்னப்பா, அந்தாளு சொல்றதில கொஞ்சம் அர்த்தம் இருக்கு. டயம் இருந்தா கேட்டுப் பார். ஸ்க்ரிப்ச்சர்ஸ் அத்தனையும் நெட்டுரு. பைபிள், குரான், தம்மபதா, கீதை. உன்னைப் பொருத்தவரை ஒரு விளம்பர வாக்கியம்; அவ்வளவுதான். தியாலஜி, பிலாசபி இதெல்லாம் வுட்டுரு அம்பேல்.''

''இந்தப் பெட்டி என்ன விலை?'' என்றான் நித்யன்.

''விலை கொஞ்சம் அதிகம்தான்.''

''கடவுள்னா சும்மாவா?''

''கேலி புரியுது. கடவுளுக்கு விலை இல்லை. கடவுள் சக்தியை கிரகிக்கத் தங்கத்தில் இன்லே ஓர்க் பண்ண வேண்டியிருந்தது. தங்கம் மின்சாரத்தை அதிகம் கடத்தும்னு தெரியுமில்லை?''

நித்யன் அவர்பால் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு, ''டாக்டர் பரமானந்தம்...''

''பேரு ராகவானந்தம்.''

''ஸம் ஆனந்தம். நீங்க நிசமாவே இதை நம்பறீங்களா?''

''இதில நம்பிக்கை பிரசினையே இல்லைப்பா. கடவுள் இருக்கார். அவர் சக்தியும் இருக்குது. இன்ஸ்ட்ரக்ஷன மான்யுவலைப் பாருங்க. பைபிள், குரான், கீதை, தம்மபதா, தாவ் எல்லாத்தையும் படிச்சு அதனதன் சாரத்தைக் கொண்டு வந்திருக்கேன். எகிப்திய சூரியக் கடவுள் ரா கூட ஆப்ஷனா கொண்டு வரப் போறேன்.''

''பிள்ளையார், முருகன்?''

''அதெல்லாம் ரொம்ப சுலபம்.''

''ஓகே, ஓகே. இது எப்படி வேலை செய்யுது சொல்லுங்க. கடவுளைப் பத்தி இன்னும் தீர்மானிக்காத என்னைப்போல பாமரனுக்குப் புரியும்படி.''

''சிம்பிள். பெட்டி மேல் ப்ளேட் இருக்கு பாருங்க. இதைத் தொட்டுக்கங்க. தொட்டுக்கிட்டு இந்தக் குமிழ் இருக்கு பாருங்க. இதை மெல்லத் திருகுங்க. உங்களுக்கு என்ன கடவுள் வேணுமோ நினைச்சுக்குங்க. அந்தக் கடவுள் உங்க மேல பரவுவார். அவருடைய சக்திகள் உங்களுக்கு ஏற்படும். இன் அதர் வேர்ட்ஸ், டைம் அவுட் வரைக்கும் நீங்க கடவுளா மாறுவீங்க.''

''அது என்ன டைம் அவுட்.''

''பெட்டிக்குள்ள எலக்ட்ரானிக் டைமர் இருக்கு. சொல்லுங்க, எந்தக் கடவுள் வேணும்?''

''ம். எனக்குப் பிடிச்சது கிருஷ்ணர்தான்.''

''லிஸ்ட் இருக்கு. சரி,'' என்று அதனுள் இருந்த எண் வரிசையில் எட்டாம் நம்பரை வைத்தார்.

நித்யன் பெட்டியைத் தொட்டுக்கொண்டு, மெல்ல அந்தக் குமிழைத் திருகினான். ''ம்ஹூம், எதுவும் இல்லை.''

''கிருஷ்ணர் தெரியலை உங்களுக்கு? சரியாப் பாருங்க. கிருஷ்ணருடைய மாயா சக்தி வர ஆரம்பிச்சிருக்குமே?''

''இல்லை.'' கண் மூடிக் கொண்டான். பார்த்தான். தெரிந்தது எல்லாம், எதிரே இருந்த கே.பி.வெங்கடரமணா கம்பெனி காலண்டர்தான். ப்ரொபசர் குமிழை கடைசிவரை திருகினார். ''இப்ப?''

ம்ஹூம்! கடவுளும் இல்லை. கட் பாடியும் இல்லை.''

''கை எடுங்க,'' என்று ப்ரொபசர் பெட்டியைச் சாக்கிரதையாகத் திறந்து பார்த்தார்.



''ஓ!ஓ! இதுதான் ப்ராப்ளம்,'' என்று அதிலிருந்து சின்னதாக ஒரு பொருளை எடுத்து ''தைரிஸ்டர் புட்டுக்கிச்சு.''

நித்யன் அவரை வியப்புடன் பார்த்தான். இவரை மேதை என்பதா? பைத்தியமா? ஆனால் எந்தவித பாசாங்கும் இன்றி தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டிருந்தார். தன் கைப்பையிலிருந்து ஒரு குட்டியான ஸால்ட்ரிங் அயர்னை எடுத்து, ''நல்ல வேளை ஸ்பேர் இருக்கு,'' என்று பெட்டியைத் திறந்து எதையோ உருக்கிப் பற்ற வைத்தார். ''இப்ப பாருங்க,'' என்றார். இப்போது நித்யன் அதில் கை வைத்தபோது அதன் குமிழ் முழுவதும் திருப்பப் பட்டிருப்பதை ராகவானந்தம் கவனிக்கவில்லை.

நித்யன் முகத்தில் ஒரு விதமான மாறுதல் ஏற்பட்டது.

''தெரியுதா? உடல் பூரா பொங்குமே, பாட்டு? புல்லாங்குழல் கேக்குதா? அவர் சக்தி அனைத்தும் உனக்கு இத்தனை நேரத்துக்கு வந்திருக்கணுமே?''

குமிழைப் பார்த்தார். ''ஊப்ஸ்!! கொஞ்சம் அதிகம் வச்சுட்டேன்,'' என்று குமிழை அவசரமாக அப்பிரதட்சணமாகத் திருப்பினார்.

நித்யன் எழுந்து மெல்ல ஒரே திசையில் பார்த்துக் கொண்டு, நடந்து பெரிய சன்னல் கதவைத் திறந்து அதன் விளிம்பில் ஏறிக்கொண்டு கைகளை இறக்கைபோல விரித்துக் கொண்டு, ''பரித்ராணாய சாதுனாம், வினாசாய சதுஷ்க்ருதாம், தர்ம சம்ஸ்தாபனார்த்தாய, சம்பவாமி யுகே,யுகே,'' என்று ஆறாவது மாடியிலிருந்து குதித்தான்.

அவன் பறப்பானா? பறந்தானா?

**- குமுதம் ஸ்பெஷல், ஜனவரி, *1995***

# ஆக்கிரமிப்பு

டில்லியில் முதல் வேலை! முதல் காதல், முதல் ஸ்கூட்டர் விபத்தில் முழங்கால் சிராய்ப்பு எல்லாமே நிகழ்ந்தது.

குளிர் காலத்தில் அதிக பைசா இல்லாமல் கழுத்து இடைவெளியில் சில்லென்று ஊசிக்காற்று தாக்க நடந்து செல்லும்போது சிலவேளை ஏன் பிறந்தோம் என்று தோன்றும்.

மத்தியானம் மூன்றாகிவிட்டால் நகரமே எரிவதுபோல் புகை மூட்டம் பிடிவாதமாக வானில் தொங்கும். சேலத்துப் பெண்கள் 'ஈவினிங் நியூஸ்' ஒரு கையிலும் செம்பட்டை அழுக்குத் தலை குழந்தை மறுகையிலுமாக போக்குவரத்தில் ஊடாடுவார்கள். சர்க்கரையும் எள்ளும் கலந்து திண்பண்டம் விற்பார்கள். ராட்சத தராசுபோல இரண்டு பக்கமும் தூக்கு வைத்து அழுக்கு முண்டாசுக்காரன் விற்கும் உப்புக் கடலையை வாங்கிக் கொரித்துக் கொண்டு, சாக்ஸின்மேல் ஹவாய் செருப்பு மாட்டிக் கொண்டு கனாட் ப்ளேஸ் தீயணைப்பு நிலையத்திலிருந்து சன்சத் மார்க், ஆல் இண்டியா ரேடியோ வரை நடந்தே செல்லும் பல தினங்களில் ஒரு தினம் சத்யாவை முதலில் சந்தித்தபோது,



'டைம் க்யா ஹை?' என்று கேட்டாள். 'ஸாடே ஸாத்' என்று சொன்னதற்குப் பதிலாகச் சிரித்ததில் காதலின் முதல் எச்சரிக்கையைக் கண்டேன்.

மாதம் எழுபத்தைந்து ரூபாயில் பத்து சதுர அடி தங்க இடமும், ராத்திரி சாப்பாடும். ஸ்டைபண்டு 150 ரூபாய் மிச்சத்தை 'அன்புள்ள அக்காவுக்கு, இத்துடன் வழக்கம்போல ரூ 70க்கு மணி ஆர்டர் அனுப்பியுள்ளேன். பெற்றுக்கொள்ளவும்.' அதற்கு தவறாமல் 'அன்புள்ள தம்பி ரமணிக்கு, நீ அனுப்பிய மணியார்டர் கிடைத்தது. அடுத்த மாதத்திலிருந்து நூறு ரூபாய் அனுப்ப முடியுமா? அத்தானும் நானும் உனக்குச் செய்ததையெல்லாம் எண்ணிப் பார்த்து அடுத்த மாசத்திலிருந்து தவறாமல்...' இத்யாதி.

கம்பளிப் போர்வைக்குக் காசில்லாமல் சவுத் இண்டியா லாட்ஜில் எட்டு வேட்டிகளைச் சேர்த்துப் போர்த்திக் கொண்டு மேண்டலினை நிரடிக்கொண்டு ஸ்டேட்ஸ்மன் க்ராஸ்வேர்டு போட்டுக் கொண்டு ப்ரேக்ஃபாஸ்டுக்கு ஒரே ஒரு வடை மட்டும் சாப்பிட்டுக் கொண்டு ஒருமாதிரியான வாழ்க்கை அது. இரவு சவுத் இண்டியா லாட்ஜில் கணக்கு எழுதுவதற்கு ஒப்புக் கொண்டதை அக்காவுக்கு இன்னும் எழுதவில்லை.

சத்யாவை மீண்டும் சந்தித்தேன். லாட்ஜின் அறைகளுக்கு இடையில் திறந்தவெளியில் காய்ந்த அப்பளம் போல ஒரு டேபிள் டென்னிஸ் மேசை இருக்கும். அதில் லொட்டு லொட்டு என்று எட்டு மணி வரை சிலர் வந்து ஆடுவார்கள். அவர்களை யார் அனுமதித்தது, ஓட்டல் முதலாளிக்கு என்ன உறவு? என்பதெல்லாம் தெரியாது.

ரூமிலிருந்து பார்த்தால் சில நாட்கள் சத்யா தெரிவாள். துப்பட்டாவை மார்பின் குறுக்கே இறுக்கிக் கொண்டு தப்புத் தப்பாக ஆடுவாள்.

ஒருநாள் நான் மேண்டலின் பழகிக் கொண்டிருந்த போது டக் டக் என்று கதவைத் தட்ட, சத்யா 'எனக்கும் மேணடலின் கற்றுத் தருகிறீர்களா?' என்று கேட்டாள்.

'நானே கற்றுக் குட்டி,' என்றதற்கு, பரவாயில்லை' 'சுன் சுன் சுன்' நன்றாக வாசிக்கிறீர்களே!' என்றாள். முகத்தில் சின்ன வயசின் அம்மைத் தழும்புகளைப் பவுடரால் மறைக்க முடியவில்லை. 'கத்தக்' ஆடுவாளாம். சீராம் செண்டரில் பழகுகிறாளாம். 'அங்கேயே மேண்டலின் மாஸ்டர் இல்லையா?' என்றதற்கு, 'சித்தார்' தானாம்.

சத்யாவுக்கு மேண்டலின் கற்றுக் கொடுத்தேனோ இல்லையோ, ஒவ்வொரு முறையும் வந்து விசாரித்து விட்டுப் போவாள். ஸிக்ஸ் ஏ பிளாக்கில் மாமாவுடன் வசிப்பதாகவும் முன் அறை காலியாயிருப்பதாகவும் சொன்னாள். 'வாடகை என்ன?' என்று கேட்டதில் 'நண்பர்களுக்குள் என்ன வாடகை?' என்றாள். எனக்காக ஸ்வெட்டர் பின்னுவதாகவும் சொன்னாள். இதெல்லாம் காதல் இல்லையெனில் பின் என்னவாம்!

இதனிடையே எனக்கு ஓ.சி.எஸ்.ஸில் ஆர்டர் வந்து விட்டது. டில்லியிலேயே க்ளாஸ் டு கெஜட் பதிவு வேலை கிடைத்தது. 330 ரூபாய் சம்பளம் என்று தீர்மானித்ததும், திடீர் என்று டாட்டா, பிர்லா போல உணர்ந்தேன். சத்யாவுக்குப் பல்பொடி கலரில் ஒரு கமீஸ் செட்டும், கான் மார்கெட்டில் பளபள நகையும், ஸ்டிக்கர் பொட்டும் வாங்கிக் கொடுத்தேன். ஓக்லா ஏரிக்கு பிக்னிக் போனோம்.

சத்யாவுக்கு 'கஸின்' ஒருத்தி இருந்தாள். ரொம்ப அழகாக. ஆனால் அவளுக்கு கல்யாணம் ஆகியிருந்தது.

அடுத்த ஞாயிறே அவர்கள் வீட்டு முன்னறைக்குச் சொற்ப உடைமைகளுடனும், மேண்டலினுடனும் குடி பெயர்ந்தேன்.



சத்யாவின் மாமாவும் மாமியும் ரொம்ப நல்லவர்கள். எனக்கென்று பாத்ரூம் நேரத்தை மாற்றிக் கொண்டது மல்லாமல் வென்னீர் போட்டுக் கொடுத்தார்கள். எண்ணெய் மிதக்கும் வெண்டைக்காய் (பிண்டி) கறி அடிக்கடி கொடுத்தனுப்பினார்கள்.

அறை நல்ல அறை. கரோல்பாகில் அந்த மாதிரி அறை எப்படிக் கிடைத்தது என்று நண்பர்களுக்கு ஆச்சரியம். 'நல்ல வேலை கிடைத்து விட்டதல்லவா? உன்னை மாப்பிள்ளையாக வளைத்துப் போட்டு விடப் போகிறார்கள்' என்று எச்சரித்ததற்கேற்ப சத்யாவும் அடிக்கடி காரணமில்லாமல் வந்துபோய் அரை மணி, முக்கால் மணி 'கியால், துருபத்' என்று பேசிவிட்டு போவாள். கையை அடிக்கடி வாங்கி ரேகை பார்ப்பாள். மனதுக்குள் இதயம் ஓவர்டைம் வாங்கும். எத்தனையோ முறை அவளை விழ்த்தியிருந்தாலும் ஓர் அளவுக்கு மேல் தைரியம் வரவில்லை. முதல் பலாத்காரம் அவள்தான் செய்ய வேண்டும் என்பதாகிவிட்டது.

அப்போது ஈ.வாசு வந்து சேர்ந்தான். அவன் திருச்சியில் செயிண்ட் ஜோசப் காலேஜ் கிளாஸ்மேட்டு. டில்லியில் எனக்கப்புறம் வேலை கிடைத்து, அட்ரசை அக்காவிடம் விசாரித்துக் கொண்டு இரண்டு சூட்கேசு, படுக்கை டென்னிஸ் மட்டை, எக்கோ ரேடியோ பெட்டி சகிதம் வந்திறங்கி, 'எப்படி இருக்கே ரமணி?' என்று என் படுக்கையில் உட்கார்ந்து ஷூவைக் கழற்றி விட்டு, மேண்டலினை நோண்ட ஆரம்பித்தான்.

நான் கவலையுடன் 'எங்கே தங்கப் போறே?' என்று விசாரித்ததில் 'இங்கேதான். இல்லேன்னா உங்க அக்கரவும் அத்தானும் என்னைப் பிச்சுருவாங்க.'

'நமஸ்தே பாபி' என்று சத்யாவின் மாமியிடம் அரைகுறை இந்தியில் பேசினான். அவர்களுக்கு அவனைப் பார்த்த உடன் பிடித்துப் போயிற்று. அடர்த்தியான பட்டர்

ஃப்ளை மீசை. நல்ல உடற்கட்டு. என்னைவிட சுத்தமாக நான்கு இன்ச் அதிக உயரம். உரத்த குரல். மொட்டையா, வழுக்கையா என தெரியாத தலைமுடி. பனியனை மீறும் மார் மயிர் அடர்த்தி. எல்லா பாஷையும் கொஞ்சம் பேசுவான்.

'பாபி, தங்களுக்கு ஆட்சேபணை இல்லையானால் எனக்கு கைலாஷ் காலனியில் கம்பெனி வீடு கிடைக்கும் வரை தற்காலிகமாக இந்த அறையில் தங்க கிருபை புரிவீர்களா?' என்று லக்னோ சுல்தானிடம் கேட்பது போல் கேட்க, பாபி உச்சி குளிர்ந்து, 'தாராளமாக. எத்தனை நாள் வேண்டுமானாலும் தங்கிக் கொள்ளலாம்' என்றாள். என்னை யாரும் கேட்கவில்லை.

காலையில் இவனுக்குத்தான் முதல் வென்னீர். இவனுக்குத்தான் முதல் பாத்ரூம். பஞ்ச் குயான் ரோடிலிருந்து ஓர் அலுமினியக் கட்டிலை வாங்கி வந்து அறையில் போட்டுக் கொண்டு, 'ரம்மு, நீ உயரம் அதிகமில்லை. அதனால் இந்தக் கட்டிலில் படுத்துக்க. நான் உன் கட்டில்ல படுத்துக்கறேன்' என்று அறையின் முக்கால் பாகத்தை அடைத்து ஃபேன் அடி, ஹீட்டர் அருகில் கட்டிலைப் போட்டுக் கொண்டு ஜிம் ரீவ்ஸ் பாட்டெல்லாம் போட்டு கேட்டுக் கொண்டு மூன்றே நாளில் என்னை ஓரம் கட்டி விட்டான்.

மேண்டலினை எடுத்து ட்யூன் பண்ணுகிறேன் என்று எட்டு கம்பிகளில் நான்கை அறுத்து விட்டான். 'என்னடா வாசு, இப்படி செய்தாயே!' என்று கேட்டதற்கு, கடகடவென்று சிரித்து, 'நீ வாசிக்கிறது சூடு போட்ட பூனை போல இருக்குதுன்னு சத்யா சொன்னா,' என்றான்.

தூக்கி வாரிப் போட்டது. 'சத்யாவை நீ எப்பப் பார்த்தே?'

'தினம் பார்க்கிறேனே! தினம் லஞ்சு அவ கூடத்தான். அவ ஆபீசும் என் ஆபீசும் பக்கத்தில பக்கத்தில. ஸீராம்



செண்டர்ல நானும் சித்தார் கத்துக்கப் போறேன். ஸ்வீட் கர்ள்,' என்றான்.

எனக்கு வயிற்றில் குத்தினாற்போல உணர்ந்தேன். 'வாசு, நீ எப்ப காலி பண்ணப் போறே? எனக்கு இடம் போதாது. அக்காவும் அத்தானும் வரப் போறாங்க. பத்ரி போகப் போறாங்க. போனால் போகிறதென்று உனக்கு இடம் கொடுத்தேன். பர்மனெண்டாகவே செய்து விடாதே,' என்றேன்.

அதற்கு அவன், 'போறேன் போறேன். க்வார்ட்டர்ஸ் அலாட் ஆகி சுண்ணாம்பு அடிச்சுகிட்டு இருக்கான். சத்யாவைக் கூடக் கொண்டு போய்க் காட்டினேன்,' என்று சார்மினார் எடுத்து பற்ற வைத்துக் கொண்டான்.

'ரூம் பூரா புகை. விண்டர் வேறு. சன்னல் எல்லாம் மூடியிருக்கு பாரு. ஸ்மோக் பண்றதா இருந்தா மொட்டை மாடில போய்ப் பண்ணு வாசு,' என்றேன்.

'குளிர்ல எப்படிடா மொட்டை மாடிக்கு ராத்திரில போக முடியும்?'

'அப்ப சிகரெட் பிடிக்காதே!'

'ஒரு நெருப்புக் குச்சியைப் பற்ற வைச்சுட்டா, எல்லா புகை வாசனையும் போய்ரும். ரமணி, நீயும் சிகரெட் பழகிடேன்?' என்றபோது சத்யா வந்தாள்.

'கம் சத்யா. இந்த ரமணியைப் பாரு. சிகரெட்டை நிறுத்திடு என்றால் ரூம் பூரா புகை போடுகிறான். கெட்டப் பழக்கம்,' என்று கடகடவென்று சிரிக்க-

சத்யா, 'ரமணி, நீங்க சிகரெட் பிடிக்கிறதாகச் சொல்லவே இல்லையே! திஸ் இஸ் டூ மச்!' என்றாள், அவன் சொல்வதை நம்பிக் கொண்டு.

நான் விளக்குவதற்குள், ''சத்யா பேனா எப்படி? நல்லா எழுதுதா?'' என்றான் வாசு.

''நல்ல பேனாதான். இதில் இங்க் எப்படிப் போடுவது?'' என்றாள்.

வாசு மிகையாகவே அவளை டேபிள் லைட்டருகே அழைத்து உட்கார வைத்து பேனாவுக்கு இங்க் போடுவது பற்றி பாட்டிலில் வைத்து உறிஞ்சிக் காட்டினானோ இல்லையோ சந்தேகத்திற்கு இடம் வைக்காமல் அவள் மார்பைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவளும் அதையறியாமல் காட்டிக் கொண்டிருக்க, எனக்கு வயிற்றில் சங்கடம் பண்ணியதற்கு காரணம், பேனா என்னுடைய பேனா, இங்க் என்னுடையது.

இந்த மாதிரி சின்னச் சம்பவங்கள் எல்லாம் மெல்ல மெல்லச் சேர்ந்து கொண்டு வாசுமேல் வெறுப்பு அலையாகத் திரண்டதால் வாசுவுக்கு ஒரு முடிவான எச்சரிக்கை, 'அல்ட்டிமேட்டம்' கொடுத்து விட்டேன். அவனிடம் வெள்ளிக்கிழமைக்குள், நீ ரூமைக் காலி செய்யாவிட்டால் எல்லா சாமான்களையும் எடுத்து வீதியில் போட்டு விடுவேன் என்று சொல்ல நினைத்து அதை மழுப்போ மழுப்பு என்று மழுப்பி, 'வாசு எஸ் எ ஃப்ரெண்ட் யூ மஸ்ட் கீப் யுர் வோர்டு' என்று இங்கிலிஷ் பேசி மாய்ந்தேன்.

சாயங்காலம் வாசு, 'குட் நியூஸ் ரம்மு. நப் வாலா கல்லியில் ஒரு பார்சாத்தி பார்த்து விட்டேன். அமர்க்களமான ரூம்.''

''அப்பாடா ஒழிந்தான்' என்று 'வெரிகுட். எப்பக் காலி பண்ணப் போகிறாய்?'' என்றேன்.

''அதை நீயல்லவா சொல்லணும்.''

''புரியலை.''

''ரூம் உனக்காகத்தான் பார்த்திருக்கிறேன். இதைவிட சின்ன அறை. ஆனால் உனக்குப் போதும். ராமானுஜம் மெஸ் பக்கத்தில். பஸ் ஸ்டாண்டு பக்கத்தில். கேரவன் பத்திரிகை ஆபீசு பாரு...''



''வாசு, நான் எதற்காகக் காலி பண்ணனும்?'' என்றேன் கடும் கோபமாக.

''பின், நான் காலி பண்ணனும் என்கிறாயா?''

''ஆமாம், அதான்.''

''அதற்கு ஒரு வருஷம் ஆகும். அலாட் ஆன வீட்டை கம்பெனியில் வேற ஒருத்தன் அவசரமா எடுத்துக்கிட்டான். எதுக்காக என்னை காலி பண்ணச் சொல்றே?''

''இந்த வீடு என் பேர்லதான் கொடுத்திருக்கு.''

''அப்படி அக்ரிமெண்ட் ஏதும் இல்லை. சத்யாவை நான் கேட்டேன்.''

''இப்ப நீ போகப் போறியா இல்லையா?''

''போக மாட்டேன். என்னடா பண்ணுவே?''

என்ன செய்வேன் என்று எனக்கு உடனே சொல்லத் தெரியவில்லை.

அப்போது சத்யா அங்கே வந்த போது அவளை நான் பளிச்சென்று கேட்காமல், 'சத்யா, இந்த ரூமை முதலில் எடுத்தது நான்தானே?' என்றேன்.

''ஆமாம்.''

''வாசு என்னை வேறு அறை பார்த்துக் கொண்டு போ என்கிறான்.''

''அப்படியா, வெரிகுட்!''

''என்ன வெரிகுட்?''

சத்யா புரியாமல், 'இது உங்கள் நண்பர்களுக்குள்ளே தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரசினை' என்று சொல்லி விட்டாள்.

வந்த ஆத்திரத்தில் வாசுவை அங்கேயே நரசிம்ம அவதாரம் பண்ண வேண்டும் போல வந்தது.

இதெல்லாம் கூட தாங்கிக் கொள்ள முடிந்தது. என் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு போய் ஸ்டெப்னி திருட்டுப் போனதை வாசு சொல்லவே இல்லை. அதையும் தாங்கிக் கொண்டேன். 'புதிய டயர் வாங்கிக் கொடுக்கிறேன்' என்று காலந்தாழ்த்திக் கொண்டே வந்தான்.

போனால் போகிறது என்று இருந்தேன். ஆனால் ஒருமுறை அவன் செய்த காரியம் என்னை அந்தத் தீர்மானத்தை எடுக்க வைத்தது. இதுதான் என் எல்லை. ஒட்டகத்தின் முதுகில் கடைசிச் சுமை.

ஷீலா தியேட்டரில் ஒரு புதுப் படத்துக்கு டிக்கெட் எடுத்திருப்பதாகப் போன் பண்ணிச் சொன்னான். நான் வேகுவேகென்று தியேட்டருக்குப் போனேன். தியேட்டர் புது தில்லி ஸ்டேஷன் அருகில், ஒரு சந்தில் ஒளிந்து கொண்டிருக்கும். கைவண்டிகளும் சைக்கிள் ரிக்ஷாக்களுமாக கசகசவென்று இருக்கும். ஸ்கூட்டரில் பாலன்ஸ் தவறிப் போய் ஒரு விபத்து ஆகி முழங்காலில் சிராய்ப்பு ஏற்பட்டு அதையும் பொருட்படுத்தாமல் நொண்டிக் கொண்டே தியேட்டருக்குப் போனேன்.

வாசு ஆளையே காணவில்லை. நாலு மணி வரை காத்திருந்தேன். வரவில்லை. முழங்கால் சிராய்ப்பு ரொம்ப வலித்ததால் அறையில் போய்ப் படுத்துக் கொள்ளலாம் என்று ரூமுக்குப் போனால் பூட்டியிருந்தது. சன்னல் ஓரத்தில் எப்போதும் சாவி வைத்திருப்பான் என்று சன்னலருகே போய் துழாவிப் பார்த்தால் உள்ளே ஆளரவம் கேட்டது.

எட்டிப் பார்த்தால் சத்யாவைப் படுக்க வைத்து வாசு அழுத்தமாக முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் கரங்கள் மற்ற காரியங்களில் இயங்கிக் கொண்டிருக்க, சாயங்காலம் சாப்பிடலாம் என்று நான் வாங்கி வைத்திருந்த லெய்ச்சி பழங்களை அவளுக்கு உரித்து உரித்து ஊட்டி விட்டுக் கொண்டிருந்தான்



வயிற்றில் ஓர் அமில அலையே பிரவகித்தது. உலகத்திலேயே மிகப் புராதனமான வெறுப்பு உணர்ச்சி இதாகத்தான் இருக்க வேண்டும்.

சற்று நேரம்தான் பார்த்தேன்.

அப்படியே ஓசைப்படாமல் இறங்கிப் போய் ப்ளாக்கின் நடு சதுர பார்க் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டேன். எனக்கும் வாசுவுக்கும் உள்ள உறவை மெல்லச் சிந்தித்தேன். அவன் ஆக்கிரமிப்பை, என் அத்தனை சந்தோஷங்களையும் பறித்துக் கொண்டு பரிகசிக்கும் அவன் சுயநலத்தை எல்லாம் யோசித்துப் பார்த்தபோது சட்டென்று தெளிவு வந்தது.

அறை என் பெயரில் லீஸ் எடுத்தது. சத்யா என் சினேகிதி. கட்டில் என் கட்டில், படுக்கை என் படுக்கை. பேனா, மசி, என் லெய்ச்சி பழம். எவ்வளவுதான் ஓர் ஆசாமி இவ்வாறு ஆக்கிரமிக்கப்படுவான்? சமயம் வந்து விட்டது. உண்மையான எதிர்ப்பைக் காட்ட தருணம் வந்து விட்டது. என் மெய்யான கோபத்தைக் காட்டும் சமயம்.

அதுதான் வழி என்று தீர்மானித்துவிட்டேன். நேரா கஃபார் மார்க்கெட் போய் ஒரு நேபாளி கத்தி வாங்கினேன். குக்ரி வகைக் கத்தி அது. மரவேலைப்பாடு உள்ள பிடியும், வளைந்த உறையும், உருவினால் பளபளக்கும் கத்தி. குத்தினால் ஓர் ஆள் சத்தமின்றிச் செத்துப் போவான். நாற்பத்தெட்டு ரூபாய்க்கு கொடுத்தான். அதிகம்தான். ஆனால் விலையெல்லாம் அப்போது ஒரு பொருட்டாக இல்லை.

நான் திரும்ப அறைக்குச் சென்றபோது சத்யா இல்லை. படுக்கை கசங்கலைக் கூடச் சரிப்படுத்தவில்லை. சிகரெட் குடித்துக் கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும், 'ஏன் ரம்மு, ஏன் தியேட்டருக்கு வரவில்லை. உனக்காகக் காத்துக் காத்து வெறுத்துப் போய் வந்து விட்டேன்' என்றான்.

கூசாமல் பொய் சொல்வதெல்லாம் எனக்குப் பொருட்டாகத் தோன்றவில்லை.

'வாசு, இன்னிக்குத்தான் கடைசி தினம்!'

'எதுக்கு?'

'நம்ம நட்புக்கு.'

'ஏன் ரம்மு, என்னவோ மாதிரி பார்க்கிறியே, எதாவது அஜீர்ணமா?'

நான் கத்தியைஅதன் உறையிலிருந்து உருவினேன்.

'எதுக்கு கத்தி! ஏய், ஜாக்கிரதை! ஏய் ஏய்! ரம்மு, ரம்ஸ்! இதைப் பேசித் தீர்க்கலாம்டா. என்ன ஆச்சுன்னு இப்ப...'

'நம்ம நட்புக்கு ஞாபகார்த்தமா!'

வெளிச்சத்தில் காட்டிய போது கூரிய முனை பளபளத்தது. அதைப் பிடித்துக் கொண்டு வாசுவை மெல்ல அணுகினேன்.

'இந்தா! வாசு நான் தீர்மானிச்சுட்டேன். நய்வாலா கல்வியில் அந்த அட்ரஸ் எங்கே இருக்கு சொல்லு! போய் விசாரிச்சு நான் அங்க போயிர்றேன்! என் ஞாபகார்த்தப் பரிசா இந்தக் கத்தியை வெச்சுக்க!'

பிற்பாடு பல முறை யோசித்திருக்கிறேன். எதற்காக அந்தக் கத்தியை வாங்கி வாசுவுக்குப் பரிசளித்தேன்...

என்றாவது ஒரு நாள் வாசு அந்தக் கத்தியைப் பயன் படுத்தி போலீசிடம் மாட்டிக் கொள்வான் என்ற எண்ணத்திலா?

ஒரு நிமிஷம் வெலவெலத்துப் போனவன், முகத்தில் வியர்வையைத் துடைத்துக் கொண்டான். 'அதானே பார்த்தேன். நம்ம ரம்மு இப்படியெல்லாம் செய்ய மாட்டானே! கத்தியை வாங்கிக் கொண்டான். கைகுலுக்க முற்பட்டான். அதை மறுத்து குளிரில் வெளிப்பட்டு



பார்க்கில் நடந்தேன். பல சிறுவர்கள் ஒரு சிறுவனை நாலாதிசையிலும் அலைக்கழித்துக் கொண்டிருக்க, சிறுவன், அவ்வப்போது தன்னைச் சீண்டித் தொந்தரவு செய்பவர்களைப் பார்த்து இளித்துக் கொண்டிருந்தான். ஆக்கிரமிக்கப்படுவதில் உள்ள சந்தோஷத்தை அறிந்தவன்! என்னைப் போல!

-குமுதம் ஸ்பெஷல், பெப்ரவரி, 1995.

# ஒரு பூச்சியின் உரையாடல்

**சிறிய சிறுகதைகளுக்கு ஓர் உதாரணம் இது. இந்தக் கதையை Science Fiction வகையில் சேர்ப்பார்கள். எழுதியவர் ஜாக் ஷார்க்லி என்பவர்.**

**இச் சிறுகதை முதலில் வந்தது ப்ளேபாய் இதழில்! ப்ளேபாய் இதழில் சில அருமையான கதைகளும் வரும். நான் படங்களைப் பார்ப்பது இல்லை.**

**-சுஜாதா**

''என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று!'' அந்தச் சின்னக் கீச்சுக் குரல் திரும்பத் திரும்பக் கேட்ட போது ஹென்றி திடுக்கிட்டுப் போனான்.

அப்போதுதான் 'ஈ' என்ற திகில் படம் பார்த்து விட்டுத் திரும்பியிருந்தான். அதன் க்ளைமாக்ஸ் காட்சியில் ஒரு மனிதன் பிரம்மாண்டமான ஈ ஆகிறான். அதன் நினைவு வந்து இன்னும் பயந்தான்.

''சேச்சே, அப்படி இருக்காது,'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு சுற்றிலும் பார்த்தான்.



''எங்கே இருக்கே?'' என்று கேட்டான்.

''மூலையில், விட்டத்தில், சீக்கிரம்!'' என்ற அந்தக் குரலில் பயம் இருந்தது.

மேலே ஏதும் தெரியவில்லை. அறையில் ஒரு 15 வாட் பல்ப் மட்டும் இருந்ததால் ஏதும் தெரியவில்லை. நாற்காலி போட்டு அதில் நின்று கொண்டு குரல் வருவதாக இருந்த மேல் விட்டச் சுவர், மூலையைச் சந்திக்கும் இடத்தைக் கூர்ந்து நோக்கினான்.

ஒரு சிறிய குளவி, ஒரு சிலந்தி வலையில் திணறிக் கொண்டிருந்தது. மூலையில் சற்றுத் தூரத்தில் ஒரு சிலந்தி தன் எட்டுக் கண்களும் பளிச்சிடக் காத்திருந்தது.

''நீயா பேசினாய்?'' என்றான் ஆச்சரியத்துடன் குளவியை நோக்கி.

''ஆம்,'' என்றது சின்னக் குரல்.

''என்னை அது விழுங்குமுன் காப்பாற்று.''

ஹென்றி வலையில் விரல் வைக்குமுன், ''காப்பாற்றினால் என்ன தருவாய்?'' என்று கேட்டான்.

''முதலில் என்னைக் காப்பாற்று. அதன்பின் அதற்கான சன்மானத்தைப் பற்றிப் பேசலாம்,'' என்றது கீச்சுக் குரல்.

''ம்ஹூம் மாட்டேன். நீ ஏதாவது இருட்டில் மறைந்து என்னை அம்போ என்று கையெல்லாம் ஒட்டடையோடு விட்டுவிடுவாய்.''

''சரியான முரட்டு ஆளப்பா நீ.''

''இல்லையில்லை. மாறாக நான் சாது. அதுதான் என் பிரசினை. தன்னம்பிக்கை இல்லை. சமூகத்திலோ, அழகிலோ, அந்தஸ்திலோ எதிலும் சிறப்பில்லை. என் வாழ்க்கை முழுவதும் உடல் வலிமையும் புகழும் வளர்ப்பது பற்றிய புத்தகம் படித்தே செலவழித்தாகி

விட்டது, என்னைப் பார். இப்போ என்ன ஒல்லியான ஆசாமி பார்.''

கொஞ்ச நேரம் விட்டு பதில் குரல் வந்தது.

''ஆம், ஒல்லியாகத்தான் இருக்கிறாய்.''

''ஐந்தடி மூன்று அங்குலம் உயரம், நூறு பவுண்டு எடை, முகப்பரு, சோர்ந்த கண்கள்... உதிரும் கேசம். எனக்கு உன்னால் ஏதும் உதவ முடியாது.''

''நிசமாகவே என்னால் முடியும். நான் நீ நினைப்பது போல் இல்லை. என்னால் பேச முடிகிறதே கவனித்தாயா? பூச்சி பேசுமா எங்கேயாவது? நான் யார் தெரியுமா? இந்த வடிவத்துக்குச் சபிக்கப்பட்ட ஒரு ஜீனி.''

''ஜீனி! அராபிய இரவுக் கதைகள் போலவா? மந்திரம் கற்ற, வரம் தரும் ஜீனியா?''

''ஆம்,'' என்றது அந்தச் சிறிய சிராய்ப்புக் குரல்.

''ப்ளீஸ் சீக்கிரம்! அது என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறது. என்னைக் காப்பாற்றினால் உனக்கு ஒரு வரம் அளிப்பேன்.''

''அத்தனை சக்தி இருந்தால் உன்னைச் சாப்பிட வரும் ஜந்துவை நீயே கொன்று விடுவதுதானே?''

''அதுதானே சிக்கல். ஒரு ஜீனி தன் சக்தியைத் தற்காப்புக்குப் பயன்படுத்தக்கூடாது. அது சுயநலத்துடன் சேர்த்தி. எப்போதும் என் எஜமானின் சேவைக்குத்தான் பயன்படுத்த வேண்டும். இப்போது நீதான் எஜமானன்!''

''அப்படி ஏதாவது வாக்குறுதி கொடுத்திருக்கிறாயா?''

''நிச்சயமாக. ஒரு ஜீனி சுயநலத்துக்குத் தன் சக்தியைப் பயன்படுத்த முடிந்தால் தலைக்கனம் அதிகமாகிப் ப்ரபஞ்சத்தையே ஆளலாமே!''

''விதியை மீறினால் என்ன ஆகும்?''



''என் மந்திர சக்தியை இழந்து சாதாரண ஆவியாக உலாவுவேன். நடப்பதைக் கையாலாகாமல் பார்த்துக் கொண்டிருப்பேன்.''

''அப்படியொரு சிக்கலா?'' என்று அனுதாபித்தான் ஹென்றி.

''ஆனால் ஒரு சந்தேகம். கதைகளில் எல்லாம் நீங்கள் மூன்று வரம்தானே தருவீர்கள்? நீ மட்டும் ஏன் ஒரு வரம் என்று சிக்கனம் பண்ணுகிறாய்?''

குளவி தன் இறக்கைகளைப் படபடவென்று அடித்துக் கொள்ளச் சிலந்தி அதை மற்றொரு மூலைக்குச் சென்று கவனித்தது.

''வரம் கொடுத்தால் மக்கள் அதிக ஆசைப்பட்டு அதிபுத்திசாலித்தனமாகக் கேட்கிறார்கள். அதனால்தான் ஒரு வரம் மட்டும் தரலாம் என்று விதி மாற்றப்பட்டிருக்கிறது.''

''உயிர் பிழைக்க மூன்று வரம் தரமாட்டாயா?''

''ம்ஹூம். ஸாரி, ஒரே ஒரு வரம்தான்.''

''என்னத்தைக் கேட்பேன்?'' என்று பெருமூச்சு விட்டான் ஹென்றி.

''காப்பாற்று முதலில். அப்புறம் வரத்தை யோசனை செய்யலாம்.''

''மாட்டேன். ஜீனிக்கள் ஏமாற்றும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.''

''அய்யோ... சரி சரி. சிந்தி, யோசி, ஏதாவது கேட்டுத் தொலை.''

ஹென்றி கடுமையாக யோசித்தான். சுவரின் மேல் மூலையில் அந்த நாடகத்தைக் கவலையோடு பார்த்துக் கொண்டே யோசித்தான். வரம் தருவோன் இறந்து விடப் போகிறான். அதற்குள் நல்ல வரமாக யோசித்து விட வேண்டும்.

''சொத்து! நிறையச் சொத்து கொடு. பணம் இருந்தால் எல்லாம் வரும்.''

''சரி, பணம்! இந்தா வாங்கிக் கொள் வரம்.''

சட்டென்று சூடான ஊதல் காற்று கேட்டது. மஞ்சள் மின்னல் அடித்தது. ஹென்றியின் அறை முழுவதும் டாலர் நோட்டுக்களாக நிரம்பின. ஆங்காங்கே பவழம், முத்து, வைரம், வைடூரியம் என்று தெரிந்தன. பற்பல கற்கள் பதித்த மோதிரங்கள் தெரிந்தன.

''இப்போது திருப்திதானே? காப்பாற்று என்னை.''

ஹென்றி தலையை தடவிக் கொண்டான். தன் ஒல்லியான தேகத்தைப் பார்த்துக் கொண்டான். அதிலேயும் ஒரு சின்னத் தொந்தி. கண்ணுக்கு கண்ணாடி.

''பணமும் அதன் பலமும் இருந்தும் அதனால கிடைக்கும் சுயநல நண்பர்கள் கிடைத்தும் ஏன் இந்த அழகற்ற வடிவத்துடன் நான் வாழ வேண்டும்.''

''ஓகே, ஓகே. இந்தா,'' என்றது ஜீனி, விசும்பலுடன்.

மறுபடி ஊஷ் என்ற காற்று, எலுமிச்சை நிற மின்னல். ஹென்றியைச் சுற்றிலும் இருந்த கரன்சி நோட்டுக்கள் மறைந்து போய் அவன் உடல் அமைப்பில் மாறுதல்கள் ஏற்பட ஆரம்பித்தன. அவன் உயரம் ஆறு அடி நாலு அங்குலம், அகலமான தோள்கள், அழுந்தின வயிறு, தலையைத் தொட்டுப் பார்த்தால் கரிய ரோமக் கூரை. ஹென்றி ஆரோக்கியமாகவும் உணர்ந்தான். வாய்க்குள் இருந்த பொக்கைப் பற்கள் மறைந்து அழகான பற்கள் அமைந்து, முகப் பருக்கள் கரைந்து, தசை நார்கள் இறுகி...

''எப்படி இருக்கிறேன்?'' என்றான் நடுங்கிக் கொண்டே.

''ஹாலிவுட் நடிகன் போல. சீக்கிரம்பா காப்பாத்துப்பா கிட்ட வருதுப்பா.''



''பணம், அழகு இரண்டையும் ஒரு வரமா சேர்த்துக் கேட்க முடியுமா?''

''ம்ஹூம் இம்பாஸிபிள். பணம் அல்லது அழகு ஏதாவது ஒண்ணுதான்.''

''அழகா இருந்து என்ன பயன்? ஏழை அல்லவா நான்?''

''புகழ் இருந்தா எப்படி இருந்தாலும் கவலையில்லை. மக்கள் உன்னை விரும்புவாங்க, என்ன... சரியா? புகழ் கொடுக்கட்டுமா?''

ஹென்றி யோசித்து, ''அப்படித்தான் தோணுது,'' என்றான்.

''அப்ப இந்தா, வாங்கிக்க.''

மறுபடி காற்று, மின்னல். ஹென்றி காற்று நீக்கப் பட்ட பலூன் போல சுருங்கிப் போனான். பழைய வடிவத்தை அடைந்து விட்டான்.

அந்தக் கணமே போன் அடித்தது. அறைக்கதவு திறந்தது. அழகான பெண்கள் சிவந்த கதகதப்பான உதடுகளுடன், ஜொலிக்கும் கண்களுடன், 'ஹென்றி ஹென்றி' என்று அழைத்துக் கொண்டே உள்ளே வர, அவர்களில் ஒருத்தியை அணைத்துக் கொள்ள அவன் முயன்ற போது அவள் புறப்பட, அவன் அவள் பின் செல்ல...

''ஏய் எங்கே போறே? வா,'' என்று கீச்சுக் குரலில் ஜீனி கத்தியது. மறுபடி விர்ர்ர் கேட்டது.

ஹென்றி கீழே விழுந்தான். சட்டென்று அறையில் இருந்த பெண்கள் மறைந்து போக, ''ஸாரி நான் ஓடிப் போக நினைக்கலை, நான் கொஞ்சம் உணர்ச்சி வசப் பட்டுட்டேன்.''

''போதும், போதும். மூணு வரத்தில ஏதாவது ஒரு வரம் தேர்ந்தெடு. டிரையல் பார்த்தது போதும்.'' ஹென்றி சிலந்தி

வலையைப் பார்த்தான். நிலைமை மோசமாகத்தான் இருந்தது. அந்தப் பூச்சி சிலந்தியின் நீண்ட கால்களுக்கு அருகே இருந்தது. பறக்க முயன்று துடித்து விர்ரியது.

''காப்பாற்றினா இதில ஒரு வரம் தருவேதானே?''

''சரி சரி, சரி! சீக்கிரம் சீக்கிரம்.''

ஹென்றி தீர்மானித்து விட்டான்.

சமையல் அறையிலிருந்து ஒரு சுத்தியல் எடுத்துக் கொண்டு திரும்ப வந்தான். '' கொஞ்ச நேரம் அசங்காம இரு. குறி தவறிடும்.''

''சரிப்பா. சீக்கிரம் அவனைக் கொல்லுப்பா,'' என்று ஏறக் குறைய அழுதது ஜீனி.

ஹென்ரி சுத்தியலைப் பலமாக அடித்தான். சிலந்தி சுவரிலேயே பச்சக் என்று கூழாகியது. ஹென்றி சுத்தியலைக் கீழே போட்டான். ''இனிமே உனக்கு விடுதலை,'' என்றான். குளவியைப் பார்த்து.

மௌனம்!

''உனக்கு விடுதலைப்பா, சுதந்திரம்! உன்னைக் கொல்ல வந்த சிலந்தியைக் கொன்னாச்சு!'' என்று குளவியைத் தன் விரலால் நெருடினான். குளவி சுள் என்று கொட்டியது. ஹென்றி ஆச்சர்யத்துடன் தன் விரல் வீக்கத்தைப் பார்த்து, ''உன் உயிரைக் காப்பாத்தினதுக்கு இதுதான் கைம்மாறா?''

மௌனம். ஹென்றி சிந்தித்தான். அவனுக்குச் சட்டென்று ஒரு சந்தேகம் தோன்றியது. டெலிபோனை நோக்கி ஓடினான். அருங்காட்சியகத்தின் 'நேச்சுரல் ஹிஸ்டரி' பகுதியை கூப்பிட்டான்.

''சார், சிலந்திக்கு எதிரிகள் ஏதாவது உண்டா?''

''ஏன் இல்லை? பறவைகள், தேரை 'இங்யுமா'ன் னுட்டு ஒரு ஈ வகை. அப்புறம் வேட்டையாடும் குளவி.''



''குளவியா, போச்சுரா.''

என்ன ஒரு முட்டாள்தனம்! இதுவரை அவனுடன் சின்னக் குரலில் பேசிக் கொண்டிருந்தது குளவியில்லை. அந்தச் சிலந்திதான்.

இரண்டு சின்னப்பூச்சிகள் அத்தனை அருகாமையில் இருக்கும் போது, எப்படி அவற்றின் வாயசைப்பைக் கவனிக்க முடியும்? பேசியது சிலந்தி! வரம் தருவோனைக் கொன்று விட்டேன்! ஜீனியைக் கொன்று விட்டேன்!

ஹென்றி அந்த வீட்டைக் காலி செய்துவிட்டான். காரணம் அதன் விட்ட மூலையில் இருந்த கறை அவனைப் பைத்தியமாக அடித்து விடும் போல இருந்தது.

**-குமுதம் ஸ்பெஷல், மார்ச்சு, *1994*.**

# சேச்சா

**ஆர்.** சேஷாத்ரிநாதன் என்ற பெயர் எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்திலும் பாஸ் போர்ட்டிலும்தான் பயன்படுத்தப் பட்டது. அனைவரும் அவனை சேச்சா என்றுதான் அழைப்போம். சில சமயம் ராமன்ஜு", சில சமயம் எல்.பி.டபிள்யு என்றும் கூப்பிடுவோம். காரணம்-1: கணக்கில் மிக கெட்டிக்காரன். 2: எப்போதாவது எங்களுடன் கிரிக்கெட் ஆட வரும் போது எல்.பி.டபிள்யு கொடுத்தால் ஒப்புக் கொள்ள மாட்டான். என் வாழ்க்கையும் அவன் வாழ்க்கையும் மூன்று முறை குறுக்கிட்டன. சீரங்கத்தில் ஒன்றாகப் படித்தோம். நான் சௌரிராஜ ஐயங்கார் செக்ஷன். அவன் கே.என்.ஆர். செக்ஷன். அப்போதே அவனிடம் ஏழ்மையின் அடையாளங்கள் தெரிந்தன. ஒரே சட்டையை நனைத்து உலர்த்தி அணிவதால் கிட்ட வந்தால் ஒரு வித முடை நாற்றம் வீசும். காலுக்குச் செருப்பில்லாமல் சித்திரை மாதத்து வெயிலில் நிழலோரமாக பதியப் பதிய நடந்து செல்வான். தீபாவளிக்கு நாலைந்து ஓலைப்பட்டாசும் ஒரே கம்பி வாணமும் சுட்டுவிட்டு நாங்கள் வெடிப்பதை கண்ணியமாகப் பார்த்துக் கொண்டு இருப்பான். சேச்சாவின் வீடு கீழச்சித்திரை வீதியில் எங்கள் வீட்டுக்கு எதிர் சாரியில் சாவுகார் வீட்டுக்கும் சிரஸ்தார் ராமுவின் வீட்டுக்கும்



இடையே புத்தகத்தில் அடையாளம் செருகினாற் போல ஒரு கூரை வீடு. அதன் வாசலில் அதிர்ஷடவச முனிசிபல் விளக்கின் வெளிச்சத்தில்தான் பாடம் படிப்பான். சேச்சா பிறந்த நான்காம் மாதம் அவன் தாய் விதவையானவள். அவன் தந்தை ரங்கசாமி ஐயங்கார் பொன்மலை ரயில்வே ஷிப்பேர் தொழிற்சாலையில் அக்கவுண்ட்ஸில் இருந்தவர். படக்கென்று ஒரு நாள் போய்விட்டார். ஃபேமிலி பென்ஷன் ஒன்றுதான் வருமானம். அதில் சிக்கனமாக குடித்தனம் செய்தாலும் பாட்டியிடம் மாசக் கடைசியில் காபிப்பொடி கடன் கேட்க வருவாள். சிவப்பான உடம்பு. விதவைகளுக்கென்று ஏற்பட்ட காவிக்கலர் புடவை. ரவிக்கையில்லாமல் போர்த்திக் கொண்டு நெற்றியில் லேசாக சூர்ணம் அணிந்து கொண்டு பாட்டியுடன் தகாத இளமையில் -தொண்டரடிப் பொடி ஆழ்வார் சன்னதிக்கு பகவத் விஷயம் உபன்யாசம் கேட்கச் செல்வாள். அவள் வாழ்க்கை முழுவதுமே சேச்சாவைச் சுற்றி இயங்கியது. சேச்சா பள்ளியிலிருந்து வர கால்மணி தாமதமானாலும் பதறிப் போய்விடுவாள். கோட்டைக்குப் போனால் வீட்டுக்கு வரும் வரை வாசலையே பார்த்துக் கொண்டிருப்பாள். என்னை எப்போது பார்த்தாலும் 'நன்னா படிக்கிறயா' என்று விசாரிப்பாள். தினம் சிறிய வெண்கலச் செம்பு எடுத்துக் கொண்டு காவேரிக்குப் போய் அதிகாலையில் ஈரப்புடவையுடன் வருவாள். பாட்டியிடம் அஞ்சு பத்து கைமாத்தாக வாங்க வரும் போது ''சேச்சா படிச்சு முன்னுக்கு வந்துட்டா என் கஷ்டம் எல்லாம் தீர்ந்திடும் மாமி.''

''அவனுக்கென்னடி செல்லம், எட்டூருக்கு படிப்பான்.''

''நன்னாத்தான் படிக்கிறான் மாமி. ஆனா எதுத்து எதுத்துப் பேசறான். அரிசி உப்புமா நன்னால்லைன்னு அன்னிக்கு பாருங்கோ தட்டத்தை வீசி எறிஞ்சான். தோசை

வேணுமாம். உளுந்துக்கும் புழுங்கரிசிக்கும் எங்க போவேன்?''

''நான் கேக்கட்டுமா?''

''வேண்டாம் வேண்டாம். திருப்பதி பெருமாளுக்கு முடிஞ்சு வெச்சிருந்ததை எடுத்து தெற்கு வாசல்ல போய் கிருஷ்ணா கபேல வாங்கி சாப்ட்டுக்கோன்னு அனுப்ச்சேன்.''

சேச்சா படிப்பைப் பற்றிய கவலை அந்த தாய்க்கு இல்லை. நான்காம் வகுப்பிலிருந்து பள்ளியிறுதி வரையில் பள்ளியில் உள்ள அத்தனை ஸ்காலர்ஷிப். ஃப்ரீஷிப்புகளையும் அவன் பெற்றான். ஆண்டு விழாவில் படிப்பு சம்பந்தமான அத்தனை கோப்பைகளையும் அத்தனை டிரஸ்டு பரிசுகளையும் ஆர். சேஷாத்ரி, ஆர். சேஷாத்ரி என்று மைக்கில் சொல்லி அலுத்து ஸ்டேஜ் ஓரத்திலேயே அவனை நின்று கொள்ளச் சொல்வார்கள். அடுத்தடுத்து பரிசு வாங்கி வகுப்பில் முதல், பள்ளியில் முதல், கல்லூரியில் முதல், மாகாணத்தில் முதல் என்று வரிசையாக அத்தனை முதல்களையும் கவர்ந்து விட, ''உன் பிள்ளைக்கு என்னடி குறை. கலெக்டர் பரீட்சை எழுதச் சொல்லு. எட்டூருக்கு கலெக்டராவான்'' என்றாள் பாட்டி.

''அதெல்லாம் வேண்டாம் மாமி. அவனை வெளிய எல்லாம் அனுப்பறதா இல்லை. பேசாம கோல்டன் ராக்லயே அவா அப்பா ஆபீஸ்லயே வேலை போட்டு கொடுப்பாளாம். அப்ரண்டிஸ் மனு போட்டிருக்கான். கெடைச்சுட்டா மேல அடையவளைஞ்சான்ல முறைப் பெண்ணு காத்துண்டிருக்கு. நப்பின்னைன்னு நம் குடும்பத்துக்கு அனுசரணையான அடக்கமான பொண்ணு. ஒரு கல்யாணத்தைப் பண்ணிடலாம்னு இருக்கேன் வர சித்திரைக்குள்ள.''



சேச்சா ஃபார்வர்டு கம்யூனிட்டியாக இருந்தாலும் இன்ஜினீயரிங், மெடிக்கல் இரண்டு சீட்டும் கொடுத்தே ஆக வேண்டியிருந்தது அவனுக்கு. என்ன படித்தான், எப்படி எதை தேர்ந்தெடுத்தான் என்று தெரியுமுன் எங்கள் குடும்பத்தில் மாறுதல்கள் ஏற்பட்டு சீரங்கத்தை விட்டு வெளியே வந்து, என் கவலைகள் திசை திரும்பிவிட்டதால் தொடர்பு விட்டுப் போய் பல வருஷங்கள் இடைப்பட்டு, நான் டில்லிக்கு சிவில் ஏவியேஷனில் சேர்ந்து மாற்றலாகி மாற்றலாகி அலகாபாத், கல்கத்தா, பம்பாய் என்று பல ஊர்களில் வேலை பார்த்து சில ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் போஸ்டிங் ஆனபோது ஒரு முறை கண்ட்ரோல் டவரில் போன் வந்திருப்பதாக சொன்னார்கள். போய் கேட்டால், ''ஞாபகமிருக்கிறதா ரங்கா? நாதன் பேசறேன்.''

''எந்த நாதன்?''

''சேஷாத்ரிநாதன்! சேச்சா!''

''சேச்சா, வாட் எ சர்ப்ரைஸ்... இப்ப எங்க இருக்கே? அம்மா எல்லாம் சௌக்கியமா? உன்னை யாருக்கும் 'நாதன்'னு தெரியாதே. ஸாரி. என்ன படிச்சே? இன்ஜீனீயரிங்கா, மெடிக்கலா, ஐ.ஏ. எஸ்ஸா?''

''அதெல்லாம் இல்லைப்பா. ஐம் எ டீச்சர். அம்மாவையும் திருச்சியையும் விட்டுட்டு வர முடியாதுன்னு பி.எஸ்.ஸி. ஆனர்ஸ் சேர்ந்தேன். பிசிக்ஸ் எடுத்துண்டேன். இப்ப அசிஸ்டண்ட் புரபஸர் ஆப் பிசிக்ஸ்'' என்று நகரத்தின் பிரசித்தி பெற்ற இயேசு சபைக் கல்லூரியின் பெயர் சொல்லி குவார்ட்டர்சில் இருப்பதாகவும் அம்மா என்னைப் பார்க்க விரும்புவதாகவும் சொன்னான்.

''கல்யாணமாய்டுத்தா?''

''ஆச்சு, அம்மாவுக்காக'' என்றான்.

அடுத்த ஞாயிறு அவன் வீட்டுக்கு சென்ற போது கோடம்பாக்கத்தில் அந்த கல்லூரி வளாகத்தில் காற்றோட்டமாக குவார்ட்டர்ஸ் கொடுத்திருந்தார்கள். சேச்சாவின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றமிருப்பது சந்தோஷமாக இருந்தது. தெரு விளக்குக்கு பதில் சற்று அதிகப்படியாகவே குழல் விளக்குகள்! கட்டில், காத்ரெஜ் அலமாரி, பதினாலு இஞ்ச் டி.வி., நல்ல வீடு, அழகான மனைவி. செல்லம்மாள் அப்படியே இருந்தாள். மருமகளை பெண் போல அழைத்தாள். நப்பின்னை கர்ப்பமாக இருப்பது தெரிந்தது. கையில் மூன்று வயது குழந்தை- பெயர் ரங்க நாதன்- அவ்வப்போது களுக் களுக் என்று சிரித்துக் கொண்டிருக்க, சேச்சாவின் டேப் ரெக்கார்டரில் மாலியின் குழலிசை ஒலிக்க, ஏதோ ஒரு விதத்தில் நியாயம் நடந்து விட்டதாகத் தோன்றியது. வெண்ணெயும் வெல்லமும் வைத்து அடை சாப்பிட்ட போது ''இந்த மாதிரியெல்லாம் டிபன் சௌகரியங்கள் இருக்குன்னா கல்யாணம் பண்ணிக்கலாம் போலத்தான் இருக்கு மாமி'' என்றேன், நப்பின்னை களங்கமில்லாமல் கன்னம் சிவந்தாள்.

''ஏண்டாப்பா, நீயும் பண்ணிக்க வேண்டியதுதானே?''

''அதுக்கென்ன மாமி, வத்சலாவுக்கு ஆகட்டும் முதல்ல'' என்றேன்.

''இப்ப ம்முனு சொன்னா நப்பின்னை தங்கையே பெருந்தேவின்னு இருக்கா.''

''பேரை மாத்திண்டுட்டா சித்ரான்னு'' என்றாள் நப்பின்னை.

அவ்வப்போது ரங்கநாதன் களுக்க, சேச்சாவுக்கு காலேஜில் மிகப் பெரிய பெயர் என்றும், ஒரு ஃபோர்டு ஃபவுண்டேஷன் கிராண்டில் அவனுக்கு மூன்று வருஷம் டாக்டரேட் படிக்க தாராளமான உபகார சம்பளத்துடன் அமெரிக்கா போக சந்தர்ப்பம் கிடைத்திருப்பதும் தெரிந்தது.



''எப்ப போறே?''

''எப்படி அம்மாவையும் இவளையும் விட்டுட்டுப் போறது?''

செல்லம்மாள்தான் சொன்னாள்: ''நான் பார்த்துக் கறேன். எனக்கு தைரியம் வந்துடுத்து. போய்ட்டு வாடான்னு சொன்னா கேக்க மாட்டேங்கறான். அது பெரிய பிரக்யாதி இல்லையா ரங்கு? இந்த மாதிரி இண்டியாவிலயே ஒருத்தருக்குத்தான் கிடைச்சிருக்காம். போய்ட்டு வாடான்னா...''

''சேச்சா, ஒண்ணு பண்ணேன். அங்கயே முயற்சி செய்தா வேலை கிடைச்சுடும். அம்மாவையும் ஃபேமலியையும் அழைச்சுண்டு போய்டலாமே'' என்றேன்.

''அப்டி ஒரு சாத்தியம் இருக்கா என்ன?''

''உனக்கு இருக்கிற புத்திசாலித்தனத்துக்கும் திறமைக்கும் நிச்சயம் அந்த யுனிவர்சிட்டிலயே வேலை கொடுப்பான் தெரியுமா?''

''அதான் சொல்றேன். நீங்க போய்ட்டு வாங்கோ. நான் அம்மாவோட என் தம்பி நச்சு வந்து இருக்கேன்கிறான். அக்கம் பக்கத்தில எல்லாம் ரொம்ப அனுசரணையா இருக்கா. தனியா இந்த காம்பஸ்ல இருக்கிறதில கஷ்டமே இல்லை. வருஷம் ஒரு தடவை வரலாம். போக வர சார்ஜு கொடுக்கறாளாம்.''

''இருந்ததே இல்லை.''

''எனக்கென்னவோ இந்த ஆஃபரை விடவேணாம்னு தோணறது சேச்சா'' என்றேன்.

சேச்சா அலட்சியமாகப் பேசினான்.

''அமெரிக்கா போனா முதல்ல சூட்டெல்லாம் போட்டுக்கணுமேபா.''

''இவரை ஒரு தடவை கூட நான் சூட்டு போட்டு பாத்ததில்லை'' என்றாள் நப்பின்னை. ''காலேஜுக்கும் வேஷ்டிதான். பாண்ட் கூட போட்டுக்க மாட்டார்!''

''கல்யாணத்தில போட்டுக்கலை?''

''கல்யாணத்திலயும் வேஷ்டிதான்; காலேஜுக்கும் வேஷ்டிதான்! போட்டுக்க மாட்டேங்கறார். சொல்லுங்கோ நீங்க'' என்றாள் நப்பின்னை.

''அடுத்த வருஷத்தில இருந்து க்ளாசுக்கு பஞ்சகச்சம் கட்டிண்டு குடுமியோட போலாம்னு இருக்கேன்.''

''பையன்கள்ளாம் கலாட்டா பண்ணமாட்டாங்களா?''

''இல்லைப்பா. லெச்சர் இண்டரஸ்டிங்கா இருக்கிறதாலே தே டோண்ட் மைண்ட்'' என்றான். கொஞ்சம் கூட பெருமை சேர்க்காமல் சரளமாக இதைச் சொன்னான்.

''அமெரிக்கா போறதுக்கு சூட்டு போட்டுண்டுதான் ஆகணும்னு கட்டாயம் இல்லை மாமி'' என்றேன்.

''இருந்தாலும் சின்னத்திலேர்ந்து எனக்கு ஆசை. இவனை சூட்டு போட்டு பாக்கணும்னு. இவப்பா கல்யாணத்துக்கு தெச்சது. நல்ல அல்பாக்கா சூட்டு. அந்து பூச்சி கடிச்சுடுத்து. சின்னவங்களுக்கு ஆசை இருக்காதா என்ன? என்னவோ இப்பவே சன்னயாசியாட்ட மாதிரி.''

''அதெல்லாம் இல்லை'' என்று சிரித்தான் சேச்சா.

சேச்சா அமெரிக்கா போனானா என்பதை தெரிந்து கொள்ளுமுன் என்னை தற்காலிகமாக ஹைதராபாத் பேகம் பேட்டைக்கு மாற்றிவிட்டதால் நான்கு மாதம் கடந்து திரும்பினதும்தான் அந்தக் கல்லூரிக்கு போன் செய்து



கேட்டதில் அவன் அமெரிக்காவுக்கு போய் விட்டதாகத் தெரிந்தது. அடுத்து சேச்சா நிச்சயம் அங்கே பிரபலமாகி அந்த மேல்நாட்டு சூழ்நிலையில் எதையாவது புதுசாக கண்டு பிடித்தான் என்ற செய்தியை எதிர்பார்த்தேன்.

அடுத்த முறை சேச்சாவின் வாழ்க்கையும் என் வாழ்க்கையும் குறுக்கிட்டது ஒரு வினோதமான சந்தர்ப்பத்தில். மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் ஏர் இந்தியாவின் நேரடி விமானம் லண்டன், நியூயார்க்கிலிருந்து வந்து நின்று கொண்டிருந்தது. அப்போது நான் ஏட்டிஸி ட்யூட்டியில் இருந்தேன். இன்ஸ்பெக்ஷனுக்காக எங்கள் மேலதிகாரி ஒருவர் வருகிறார் என்று அரைவல் லவுஞ்சுக்கு சென்ற போது கேவி என்னைப் பார்த்தான். அவனுடன் சேச்சாவின் மச்சினன் நச்சுவும் ஏராளமான கல்லூரி மாணவர்களும் ப்ளாஸ்டிக் நாற்காலிகளில் காத்திருந்தார்கள். என்னை அவசரமாக கூப்பிட்டு கேவி, ''உனக்கு கஸ்டம்ஸ்ல யாரையாவது தெரியுமா? ஏரோட்ரோம்ல தானே வேலையா இருக்கே?''

''ஆமாம், என்ன வேணும்?''

''ஒரு கன்ஸைன்மெண்டை கிளியர் பண்ணணும்.''

''இதுதான் நச்சு , சேச்சாவோட மச்சினன்.''

''சேச்சா இந்த ஃப்ளைட்ல வரானா?''

''ஆமாம்.'' அவன் கண்கள் கலங்கியிருந்ததை முதலில் கவனித்தேன்.

''என்ன கேவி, எதாவது உடம்பு கிடம்பு சரியில்லையா?''

''இந்த ஃப்ளைட்டில சேச்சாவோட பாடி வருது!''

''அய்யோ! என்ன ஆச்சு?'' என்றேன் பதறிப் போய்.

''அமெரிக்காவில் எங்கயோ இடம் தெரியாம நியூயார்க்ல சுத்தப் போயிருக்கான். கைல டாலர் அதிகம் இல்லையாம். பட்டப் பகல்ல, அதென்ன சொல்வா, 'மகிங்'காம், அவன்கிட்ட டாலர் இல்லைன்னு மண்டைல அடிச்சிருக்கான். அடி பலமா பட்டதில செத்துப் போயிட்டானாம்.''

''மை காட்.''

கார்கோ ஹோல்டிலிருந்து மெல்ல அந்தப் பெட்டி இறங்குவதைப் பார்த்தேன். எதிரே இடிந்து போய் சேச்சாவின் அம்மாவும் நப்பின்னையும் உட்கார்ந்திருக்க, நிறை கர்ப்பமாக இருந்தாள். குழந்தை தாயின் மயிரைப் பிடித்து இழுத்து விளையாடிக் கொண்டிருந்தது. அடிக்கடி தாயின் கண்ணீர் காரணம் புரியாமல் முகத்தை திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தது.

நான் ''செல்லம் மாமி! என்னாச்சு?''

அந்த இடத்து இரைச்சலில் அவள் அழுதது பெரிசாக யாருக்கும் கேட்கவில்லை. யாரோ வெளிநாடு சென்று திரும்பும் தலைவருக்கு மலர் மாலைகள் தொடர்ச்சியாக அணிவிக்கப்பட்டபோது கரகோஷ ஆரவாரம் அவள் அழுகையைப் புதைத்தது.

மெல்ல மெல்ல அந்தப் பெட்டி இறங்க நான் கஸ்டம்சில் ராசரத்தினத்திடமும் ஏர்போர்ட் ஹெல்த் ஆபீசர் சங்கரமூர்த்தியிடமும் சொல்லி பார்மாலிட்டிக்கள் அனைத்தையும் சுருக்கி ஏர் இண்டியா மானேஜரிடமும் சொல்லி விரைவிலேயே பெட்டியை விடுவித்து அவர்களுக்கு என்னால் ஆன உதவி செய்து தந்தபோது அந்தப் பெரிய பெட்டி நம் ஊர் ஆம்புலன்சுக்குள் நுழையாமல் வெளியே நீட்டிக் கொண்டிருக்க, பேருக்கு பேர் ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தார்கள். நான், சேச்சா எதற்காகப் பிறந்தான். எதற்காக அத்தனை திறமையாகப்



படித்து, மணந்து எதற்காக அமெரிக்கா சென்று நியூயார்க் நகர வீதியில் விரயமாக ரத்தம் சிந்திச் செத்தான் என்பதை யோசிக்கையில் அப்போதே மலர் வளையங்களை வைக்கலாமா, வளாகத்துக்கு சென்றதுமா என்பதை விவாதித்தார்கள்.

''க்ரீன் கார்டு கெடைச்சதும் எல்லாருமா சேர்ந்து அமெரிக்கா போலாம்னு எழுதியிருந்தானே... நான் என்ன பாவம் செய்தேன்? இப்டி கண்காணாத தேசத்தில, சேச்சா... சேச்சா, இப்படி பண்ணிட்டியேடா!''

''தெருவில் அடிபட்டு சாகணும்னு என்ன நியாயம் இது!'' நப்பின்னை புழுதித் தலையும் திறந்த மார்புமாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பெட்டி மிகத் திறமையாக பேக் செய்யப் பட்டிருந்தது. அதை எப்படி எந்த உபகரணங்களைக் கொண்டு திறக்கலாம் என்பதற்கு குறிப்புகள் ஒரு காகிதத்தில் பாலிதீன் பையில் வைக்கப்பட்டிருந்தது. அதற்கான டூல்ஸ்ஸும் சேர்ந்து மார்ட்டின் அண்டு கம்பெனி எம்பாமர்ஸ் அண்ட் ஃப்யுனரல் டிரக்டர்ஸ் என்று கார்டு வைத்திருந்தது. "Have a Good Die" முதலில் அலுமினியப் பெட்டி. அதைத் திறந்ததும் உள்ளே பளபளவென்று பாலிஷ் போட்டு தேக்கு மரப்பெட்டி. அதில் எங்கள் முகங்கள் தெரிந்தன. அதை சீலைப் பிரித்து மூடியை நெம்புவதற்கு கார்ப்பெண்டரைக் கூட்டிவர வேண்டியிருந்தது. நச்சுதான் சொன்னான். ''அங்க இருக்கிற இண்டியன் அசோசியேஷன்ல இண்டர்நெட் மூலம் காண்டாக்ட் பண்ணி அவாள்லாம் ஒரே நாள்ல பணம் சேர்த்து முழு செலவையும் ஏத்துண்டாளாம்.''

''என்ன அருமையா பேக் பண்ணிருக்கான் பாருங்கோ. அமெரிக்கா அமெரிக்காதான்.''

பெட்டியைத் திறந்ததும் லேசாக ரோஜா வாசனை வீச சேச்சா, வெல்வெட் மெத்தையில் படுத்திருந்தான்.

''வாடி, வந்து பாரு. உன் புருஷனை சூட்டு போட்டுண்டு பார்க்கணும்னியே, பாரு!''

நான் அதிர்ச்சியுற்று சேச்சாவின் முழு உடலையும் அப்போதுதான் பார்த்தேன். அவன் உடலில் உள்ள கெட்ட திரவங்கள் நீக்கப்பட்டு நல்ல கலராக இருந்தது தேகமும், கைகளும். கன்னத்தில் லேசாக ரூஜ் தடவப்பட்டு வாய் லேசாக சிரிப்பது போல் 'க்ளிப்' வைக்கப் பட்டிருந்தது. தலை மயிர் மிக சுத்தமாக தழைய, படிய வாரப்பட்டு சேச்சா அற்புதமான சூட் அணிந்து கொண்டிருந்தான்.

**-இந்தியா டுடே, இலக்கிய ஆண்டு மலர், 1995.**

# ஜாய் ரைடு

**வி**மான நிலையத்தில் பணி புரிகிறவர்கள் அனைவரும் விமானத்தில் செல்வதில்லை. தரையை விட்டுப் பத்தடி கூட எவ்வாத ஜன்மங்கள் பலர் இருக்கின்றனர். அவர்களில் கே. கிருஷ்ணமூர்த்தியும் ஒருவன் (கே.கே). டிப்ளமா முடித்து பம்பாய் விமான பிடபிள்யுடி சிவில் இலாக்காவில் உதவி டிராப்ட்ஸ் மேனாகப் பணிபுரிகிறவன். எங்கள் ஊர்க்காரன். சுமார் ஐந்தடி நான்கு அங்குலமும் ஒல்லியான உருவமும் அதற்கு பொருத்தம் இல்லாத மீசையும் கொண்டு எப்போதும் கோடையோ குளிரோ ஃபுல்கை சட்டையும் சிமெண்ட் கலர் பாண்ட்டும் அணிந்திருப்பான். தொழில், ரன்வே காண்ட்ராக்டர்களை மேற்பார்வையிடுவது. டிராப்ட்ஸ் மேனுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று அவனும்தான் கேட்டான். அது டிபார்ட்மெண்ட்டுக்கே விளங்காத விந்தை. உலகத்தில் தம் விருப்பத்துக்கு ஏற்ற உத்தியோகம் செய்பவர்கள் இன்சூரன்சு ஏஜெண்டுகளைத் தவிர வேறு யாருமில்லை என்று சொல்வார்கள். கே.கே. அப்போதுதான் கல்யாணமாகி, மாமனார் வீட்டில் 'மாப்பிள்ளை ஏரோட்ரோமில் பணி புரிகிறார்' என்று கல்யாணத்தில் பேச்சு வந்தது. ''மாப்பிள்ளை ஏரோப்ளேனில் எல்லாம் போவீர்களா?'' என்று கேட்டதற்கு, ''அதற்கென்ன நிறையத் தடவை'' என்று புளுகியிருக்கிறான். அவர்களும் நம்பிக்

கொண்டு ''மாப்பிள்ளைக்கு ஏரோப்ளேன் ஓட்டக் கூடத் தெரியும். கிரவுண்டு இன்சினீயராக வேலை பார்க்கிறார். அடிக்கடி பிளேனில் போவார்'' என்று மிகைப் படுத்தி பெருமைப்பட்டுக் கொள்ள, கிருஷ்ணமூர்த்தி ஏரோ ப்ளேனுக்குள் கருப்பா சிவப்பா என்று கூடத் தெரியாத நிலையில் ஒரு ஜெட் பைலட்டாகி விட்டான்.

சுகன்யா (மனைவி) வீட்டுக் கல்யாணங்களிலெல்லாம் 'மாப்பிள்ளை பைலட்டாமே' என்று முதுகருகாமைப் பேச்சுக் கேட்க ஓரிரு தபா தர்மசங்கடமாகிவிட்டது. உதாரணமாக சுகன்யாவின் மாமா பிள்ளை விமானப் படையில் என்னவோவாக வேலை செய்கிறான். பெயர் ராம்சந்திரன். ஒரு முறை வந்த போது ''இவர் கூட அடிக்கடி பிளேனில் போவார்'' என்று சுகன்யா பெருமையாக சொல்லிக் கொள்ள,

''மாப்பிள்ளை நீங்க என்னவா இருக்கிங்க. ஏரோட்ரோமில்?'' என்றதற்கு அவன் மழுப்பலாக ''கிரவுண்ட் இன்ஜினியர்.''

''இன்டியன் ஏர்லைன்ஸ்லயா?''

''இல்லை பி டபிள்யூ டி'' என்றாள் சுகன்யா.

'' பிடபிள்யுடிகாரங்களெல்லாம் ப்ளேனில் போக முடியாதே.''

''என்னங்க அப்படியா?'' என்று சுகன்யா கேட்க,

''எனக்கு ஸ்பெஷல் பர்மிஷன்'' என்றான்.

அந்த பாழாய்ப் போன ராமச்சந்திரன் பிடிவாதமாக ''அப்டியெல்லாம் பர்மிஷன் இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே கிடையாது'' என்று சொல்லிவிட, மூர்த்திக்கு முகம் சிவந்து, ''அதெல்லாம் கொஞ்சம் கான்பிடென்ஷியல் மேட்டர்'' என்று நழுவியதற்கு ராமச்சந்திரன் ஒரு மாதிரியாகப் பார்த்து விடைபெறும் போது "சுகி மாப்பிள்ளை பொய் சொல்கிறார். கவனித்துக்



கொள்'' என்று சொல்லி விட்டுப் போன ராத்திரியே சண்டை வந்து விட்டது. அதன் சாராம்சம்:

''எதுக்காக ஏரோப்ளேன்ல போறேன்னு பொய் சொல்லணும். நமக்குள்ள பொய்யே கிடையாதுன்னு நினைச்சேன். இனிமேல் நீங்க சொல்ற ஒவ்வொரு வார்த்தையையும் சந்தேகிக்க வேண்டி வருமில்லையா?'' என்று பால கால ஔவையார்போல சுகன்யா பேச, மூர்த்திக்கு ஆவேசம் வந்து, ''இப்ப நான் ப்ளேன்ல போகலைன்னு யார் சொன்னது? எனக்கு பைலட் எல்லாம் தெரிஞ்சவங்க. அதனால் அப்பப்ப ஜாய் ரைடு அழைத்துக் கொண்டு போவாங்க.'' ''பின்ன உத்யோகத்தில் ப்ளேன்ல போறதான்னா சொன்னிங்க.''

''அப்படியும் சில வேளையில் உண்டு. அதெல்லாம் ஆபீஸ் விஷயம். விவரமா யாரும் சொல்ல மாட்டாங்க.''

''என்னவோ போட்டு குழப்பறிங்க.''

''பாரு சுகன்யா, ப்ளேன்ல போயிருக்கேன்னு சொன்னா நம்பணும். இந்த மாதிரி சின்ன விஷயங்களுக்கெல்லாம் பொய் சொல்லி எனக்கு என்ன ஆகணும்.''

''அதானே எனக்கும் புரியலை. சில பேர் நின்னா பொய் உக்காந்தா பொய்னு சொல்வாங்க. அந்த டைப்பா நீங்க?''

''பொய் இல்லைடி மூதேவி!!''

அவள், ''சரி சரி நீங்க சொல்றது அத்தனையும் உண்மை.''

''அடுத்த தடவை ப்ளேன்ல போறப்ப போட்டோ எடுத்துக் கொண்டு வந்து காட்டினாத்தான் உனக்கு சமாதானமாகும் போல.''

''அப்படி எதும் வேண்டாம். நீங்க ப்ளேன்ல போனதா சொன்னா நான் நம்பறேன். இதெல்லாம்வெச்சு மூதிரிக்க வேண்டாம் எனக்கு'' என்றாள்.

ஆனால் கே.கே. அதுதான் தீர்மானித்தான். எப்படியாவது ப்ளேனில் போய்க் காட்டிவிடுவது!

இந்த சம்பாஷணைக்கு அப்புறம்தான் கே.கே. என்னிடம் வந்திருக்க வேண்டும். ''நீதான் ப்ரெண்ட். இது மானப் பிரசினையாய்ட்டுது எனக்கு. ப்ளேன்ல போகணும். ஒற்றை என்ஜின் புஷ்பக் அல்லது க்ளைடர் மைக்ரோலைட்டுன்னு சொல்றாளே ஏதாவது ப்ளேனு... அதில நான் ஒரு பத்து நிமிஷமாவது போயாகணும். அப்பதான் என் மாமனார் வீட்டில என் மானம் காப்பாற்றப்படும். இப்ப என் மனைவி எது சொன்னாலும் 'நீங்க ப்ளேன்ல போறாப்பலயா இது' என்று அடிக்கடி குத்தலாக குத்திக் குத்திக் காட்டுகிறாள். எப்படியாவது உனக்குத் தெரிஞ்ச பைலட்டிடம் சொல்லி ஒரு ஜாய் ரைடாவது அழைத்துப் போயே ஆகணும்'' என்று கெஞ்சினான்.

நிற்க. என்னைப்பற்றி கொஞ்சம். நான் அப்போது பம்பாய் ஏட்டிஸி ட்யூட்டியில் விமான நிலையத்துக்கு வந்து சேரும் பிளேன்களை ரேடியோ தொடர்பு கொண்டு வழி காட்டி இறக்கும் ஆபீசராக இருந்தேன். அப்போதெல்லாம் பைலட்டுகளை கிளியரன்சுக்கு வருவார்கள். அதனால் பல பைலட்டுகள் அடிக்கடி சந்திப்பதால் நண்பர்கள். கிருஷ்ணமூர்த்தி என்னை தினசரி நச்சரித்துக் கொண்டே இருந்தான். பிரயாணிகள் ஃப்ளைட்டில் அவனை ஏற்ற முடியாது. ஆனால் பயிற்சிக்கான ட்ரெய்னிங் ஃப்ளைட்டு என்று உண்டு. பைலட்டுகள் லைசென்சு புதுப்பிப்பதற்காக பத்து பன்னிரண்டு முறை 'சர்க்யுட் அன்ட் லாண்டிங்' என்று சுற்றிச் சுற்றி ஏறி இறங்குவார்கள். ப்ளேன் காலியாகத்தான் சென்று வரும். இந்த மாதிரி ப்ளைட்டுகளில் சில சமயங்களில் சட்டம் அனுமதிக்காவிட்டாலும் தெரிந்தவர் சிலரை பின் சீட்டுகளில் உட்கார அனுமதித்து பெரிய மனது பண்ணுவார்கள். ப்ரின்ஸ் என்ற பைலட் எனக்குத்



தெரிந்தவர். அவர் ஒரு முறை பயிற்சி கிளியரன்சுக்கு வந்த போது அவரைக் கேட்டுக் கொண்டேன்.

''ஷ்யுர் வாயேன்.''

''எனக்கில்லை என் நண்பர் கிருஷ்ணமூர்த்திக்கு''

''எந்த மூர்த்தியாக இருந்தாலும் வரச் சொல்லேன். ப்ளேன் காலியாகப் போகிறது. இரண்டாம் நம்பர் ஹாங்கருக்கு நாளைக் காலை ஏழு மணிக்கு வரச் சொல்.''

நான் கிருஷ்ணமூர்த்தியை, ரன்வே காண்ட்ராக்ட் வேலையில் இருந்தவனை ஜீப் அனுப்பிக் கலைத்து வர வழைத்து போனில் பேசச் சொன்னேன். ''மூர்த்தி நீ கேட்டு கிட்டு இருந்தியே போயிங் ப்ளேன் காலியா போவுது. நாலு சுத்து சுத்திட்டு திரும்பி வந்துரும். அதனால நீ உடனே புறப்பட்டு வந்தின்னா மேல் விவரம் தரேன்.''

''உடனே வரேன்'' என்று வீட்டுக்கு ஓடிப் போய் தன் காமிராவை எடுத்து பைக்குள் ஒளித்து வைத்துக் கொண்டு கிருஷ்ணமூர்த்தி என் அலுவல் அறைக்கு வந்தான்.

மறுநாள் காலை ஏழரைக்கு அந்த சரித்திர பிரசித்தி பெற்ற பிரயாணம் துவங்கியிருக்க வேண்டும். நான் அன்று பிற்பகல் டியூட்டியில் இருந்ததால் ஜாய் ரைடு எப்படி இருந்தது என்று விசாரிக்க முடியவில்லை. ஆனால் மாலை மூன்றரைக்கு சுகன்யாவிடமிருந்து போன் வந்தது.

''என்ன சுகன்யா?''

''இவர் காலையில் ஏதோ ஆபீஸ் காரியமா ப்ளேன்ல போறதா சொன்னவர் இன்னும் திரும்ப வரலை. ஒன்பது மணிக்கு வரதா சொன்னார்.''

நான் சற்றே கவலைப்பட்டு காலை ஃப்ளைட் ப்ளான்களையும் லாக் புக்கையும் பார்த்ததில், காலை ஒரு போயிங் விமானம் பயிற்சிக்காக நான்கு முறை சர்க்யூட் அன்டு லாண்டிங் பண்ணியிருந்தது. அதன் பின் அது கடைசியாக இறங்கினதாகத் தெரியவில்லை.

''சுகன்யா நீ எந்த நம்பர்ல இருக்கே. நான் விசாரிச்சு சொல்றேன்'' என்று சொல்லி விட்டு ஏர்லைன்ஸ் இன்ஜினியரிங்கில் விசாரித்ததற்கு அவர்கள் அலட்சியமாக ''ஓ அதுவா! அது டில்லிக்குப் போய் விட்டதே!''

''டில்லிக்கா!!''

ட்யூட்டியில் இருந்த ஆபீசரிடம் கேட்ட போது ஏழரை மணிக்கு பம்பாயில் மான்சூன் சமயமாதலால் மழை திடீரென்று பிடித்துக் கொண்டு விட்டதாம். அதனால் அதை ஆல்டர்னேட்டிவ் மாற்று விமான நிலையமான டில்லிக்கு 'டைவர்ட்' பண்ணி விட்டார்கள்.''

''அந்த விமானம் எப்போது திரும்ப வரும்?''

''சாயங்காலம்தான் அது மீண்டும் ஃபெர்ரியாகும். இல்லை காலை ஷெட்யூல் ஃப்ளைட்டில் திரும்ப வரும்...''

''அய்யோ அதில் போன கிருஷ்ணமூர்த்தி என்றொருவன்...''

''கிருஷ்ணமூர்த்தி என்று யாரும் பைலட் இல்லையே.''

''பைலட் இல்லை சார். என் நண்பன் ஜாய் ரைடு போனான். ப்ரின்ஸ் அழைத்துச் சென்றார். அவன் என்ன ஆனான்?''

''அவனும் டெல்லிக்குத்தான் போயிருப்பான்.''

''அது தெரியும். எப்படி வருவான்?''

''தட்ஸ் ஹிஸ் ப்ராப்ளம். நீங்க ஏன் ஓர்ரி பண்ணிக்கறிங்க?''

நான் ட்யுட்டி முடிந்ததும் சுகன்யாவைப் போய் பார்த்தேன்.

கிருஷ்ணமூர்த்தி இன்னும் வரவில்லை. அவள் அழுது முகம் உப்பி கன்னம் சிவந்திருந்தாள்.

''வந்துருவான். சுகன்யா கவலைப்படாதே.''



''இத்தனை சள்ளை புடிச்ச வேலைன்னு அவர் எங்கிட்ட சொல்லவே இல்லையே. எங்கயாவது ப்ளேன் விழுந்துடுத்தோ, பகவானே!''

''பணம் எத்தனை வைத்திருந்தான்?''

''பர்சை எடுத்துக் கொண்டு போகவில்லையே!''

''டிபன் ஏதாவது சாப்ட்டானா?''

''இல்லை, போய் அரைமணியில் வந்து விடுகிறேன் என்று அவசர அவசரமா ஓடினார். ப்ளேனைக் கண்டு புடிச்சுருவிங்களா? சொல்லிடுங்க அண்ணா. அவருக்கு ஏதாவது ஆபத்தா? ஏதாவது ரகசியமான வேலைல போயிருக்கிறாரா? சொல்லி விடுங்களேன்!''

''அதெல்லாம் இல்லை வந்துருவான். வந்துருவான். ராத்திரிக்குள்ள வரலைன்னா எனக்கு மறுபடி போன் பண்ணு சுகன்யா.'' அவள் அழ ஆரம்பித்துவிட்டாள். ''சாப்பிடக் கூட இல்லை.''

நான் கூட்டிக் கழித்துப் பார்த்தேன்.

''கவலைப்படாதே. நாளைக் காலை வந்து விடுவான்.''

எனக்கு கே.கே.யின் நிலைமையை யோசிக்க கஷ்டமாக இருந்தது. போனவன் என்ன செய்தான்? கையில் காசில்லை.

ஒரு ஹவாய் செருப்பை போட்டுக் கொண்டு கிருஷ்ணமூர்த்தி மறுதினம் இரவு பதினோரு மணிக்கு ஏதோ பேயறைந்தாற் போல தோற்றத்துடன் காலில் போட்டிருந்த சப்பல் அறுந்து போய் அதற்கு சேப்டி பின் குத்தி, சோர்ந்து கண்கள் பஞ்சடைந்து வந்தானாம். சுகன்யா, ''என்னங்க, என்னங்க'' என்று கேட்க, ''இப்ப ஏதும் பேசாதே. சுடச் சுட உப்புமா பண்ணிக் கொடு'' என்றானாம். மறுதினம் என்னை ஆபீசில் டியூட்டியின் போது வந்து சந்தித்தான்.

''என்ன ஆச்சு கே.கே.?''

''அதை ஏன் கேக்கறே. ரெண்டு மூணு லாண்டிங் நல்லாத்தான் இருந்தது. அப்றம் என்ன ஆச்சுன்னா தாழ்வா பறக்கறானா தூக்கித் தூக்கி போட்டது. குப்புகுப்புன்னு வாந்தி வர ஆரம்பிச்சது. காலிப்ளேன் ஒரே எகிறி எகிறிக் குதிக்கிறது. பாத்ரூமுக்குள்ள வாயிலெடுக்கப் போனா இன்னும் அதிக ஆட்டம். எப்படியோ முகத்தல தண்ணி அடிச்சுண்டு ஜன்னலுக்கு வெளிய பார்த்தா ஒரே மழை. அப்புறம் எப்ப எறங்கப் போறதுன்னு தெரியலை. சுத்தி சுத்தி ஒரே தென்னைமரம்தான் தெரியறது. பைலட்டு பக்கம் கதவு மூடியிருக்கு. கடைசியில் ரெண்டு மணி நேரமாவது ஆயிருக்கும். திடீர்னு இறங்கறது ப்ளேனு- அப்பாடன்னு வெளியில எட்டிப் பார்த்தா ஊரே வேற மாதிரி இருக்கு. யு நோ சம்திங்? டில்லிக்கு போய்ட்டோம். அது நியாயமா ரங்ஸ்? பம்பாயில அரைமணி ஜாய் ரைடுன்னு சொல்லிவிட்டு ஒரேயடியா டில்லிக்கு அழைச்சுண்டு போய்ட்டு அம்போன்னு அனாதையா எறக்கி விட்டுர்றது நியாயமா? அந்த பைலட்டு என்னை மறந்தே போய்ட்டான்.''

''தெரியும்''

''தெரிஞ்சுண்டு என்னை அனுப்பிச்சே?''

''இல்லை கே.கே. அப்படியில்லை. எதாவது ட்ரபிள்னா ஜெட் விமானத்துக்கெல்லாம் ஆல்ட்டர்னேட் டெல்லிதான். மற்ற விமான நிலையங்கள்ல ரன்வே நீளம் போறாது பாரு.''

''அதென்ன நீளமோ? கைல மொத்தம் எட்டணா காசு இருக்கு. கால்ல ஒரே ஒரு ஹவாய் சப்பல். பட்டாப்பட்டி பைஜாமா போட்டுண்டு கொளுத்தற வெயில்ல என்னை இறக்கி விட்டுட்டு அந்தப் பைலட் ராஸ்கல் அவன் பேர் என்ன ப்ரின்சோ என்னவோ சொன்னியே, அவன் என்ன பண்ணினான் தெரியுமா? மத்யான ப்ளைட்டைப் புடிச்சு



போய்ட்டான்! நான் பதர்றேன். டில்லில ஒரு மனுஷா கெடையாது.'' அவன் கண்கள் நீர்த்திரையிட்டன. ''என்ன செய்வேன். என்ன செய்வேன்.''

''ஐம் வெரி சாரி கே.கே. கடைசில எப்படி வந்தே?''

''ஜனதா எக்ஸ்ப்ரஸ்ல வித் அவுட் டிக்கெட்ல வந்தேன்.''

''சாப்பாடு?''

''ஸ்டேஷன்ல இறங்கி ஒரு கச்சோடி வாங்கிண்டு புறப்படற சமயத்தில ஓடி வந்துட்டேன்.''

''பே பண்ணலை?''

''இல்லை.''

''ஐம் வெரி சாரி கே.கே. இப்படி விபரீதமா நடக்கும்னு.''

''உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. என் ஜாதக ராசி அப்படி'' அவன் கண்களில கண்ணீர் பனித்தது. அதைக் கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டு,

''ஆனா ஒண்ணு மட்டும் வெச்சுக்கோ ரங்ஸ், இனிமே என் பொண்டாட்டி ப்ளேன்ல போகலைன்னு புகார் சொல்ல மாட்டா பாரு! ஆசை தீர போட்டோ எடுத்துண்டுட்டேன். காமிராவை ஆட்டோவில் வெச்சே எட்டு எடுத்துண்டேன்! எகிறி எகிறி.''

''கே.கே. இவ்வளவு அல்லல்பட்டதுக்கு பேசாம நேரடியா ஒரு காரியம் செய்திருக்கலாமே சுகன்யாகிட்ட, என் வேலையைப் பத்தி உன்கிட்ட தப்பா சொல்லிட்டேன், என் வேலைல ப்ளேன்ல போற சந்தர்ப்பமே கிடையாதுன்னு உண்மையைச் சொல்லிருக்கலாமே கடிச்சா சாப்டுருவா?''

''அ! அதெப்படி?'' என்றான்.

-குமுதம், ஜுன், *1995.*

# தாசன்

பல்வேறு பரீட்சைகளில் தேறி பலவாறு இண்டர்வ்யூக்களில் சில நூறு கேள்விகளுக்கு விடையளித்து விட்டுக் கடைசியில் வேலை கிடைத்தது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். வேறு எழுதியிருந்தேன். அதற்குள் மத்திய சர்காரின் கெஜட் பதிவான ஆபீசரின் உத்யோகம். கெஜட் பதிவென்றால் அப்போதெல்லாம் அரசாங்க கெஜட்டில் மாற்றங்கள், உயர்வுகள் எல்லாம் பெயர் வரும். மற்ற பேரின் சான்றிதழ், மார்க் லிஸ்ட், ஜனன மரண சர்ட்டிபிகேட், போன்றவைகளில் Certified True Copy என்று கையெழுத்திடலாம். அதனடியில் தனக்கே உரிய நீலத்தில் ஒரு இரப்பர் ஸ்டாம்ப்,

**சீனியர் ஜியாலஜிஸ்ட்,**

**கவர்மெண்ட் ஆஃப் இண்டியா,**

என ஒத்தலாம். போலீஸ் அதிகாரிகள் இல்லாத போது ஒருவரைக் கைது பண்ணக் கூட உரிமை இருக்கிறது என்று சென்வர்மா சொல்வான்.

கதை, என் கெஜட் பதிவுச் சலுகைகளைப் பற்றி இல்லை, சந்தானத்தைப் பற்றியது. அவன் டிப்ளமஸ்தன் என்பதால் அவனை டெக்னிக்கல் அஸிஸ்டண்ட் (அ) டி. ஏ



என்றும் நாங்கள் எல்லாம் பட்டதாரி என்பதால் ஆபீசர்கள் என்றும், அரசாங்க வர்ணாசிரம நியதிப்படி அழைப்போம். என் போன்ற கெஜட் பதிவுள்ள உத்யோகிகளுக்கு உதவும் உத்யோகம் டி.ஏ.க்களுக்கு. ஆபீசர்கள் அதிகம். டி.ஏ.க்கள் குறைவு. அதனால் சந்தானம், ஆபிசில் யாருக்கு தாசன் என்பதில் சந்தேகமிருந்தாலும் அந்த திரௌபதிக் கடமையில் எல்லோரையும் திருப்திப் படுத்தும் வசீகரம் அவனுக்கு இருந்தது. பின்னாட்களில் இந்த வசீகரம் எதனால் என்று யோசித்திருக்கிறேன். இடைகாவி படர்ந்த பற்களின் சிரிப்பாலா, அதற்கு கண்கள் குறும்புடன் ஒத்துழைப்ப தாலா, துருவிப் பார்க்கும் பார்வையாலா அல்லது எப்போதும் மடிப்புக் கலையாமல் ஷோக்காக அணியும் உடைகளாலா, அவனிடமிருந்த மென்மையான புகையிலை மணமா, கழுத்துக்குள் எட்டிப் பார்க்கும் தங்கச் சங்கிலியா, பைக்குள் தெரியும் கைகுட்டையா, சலவை நோட்டுக்களா, கை விரற் பவழ மோதிரமா, என்று அனைத்தையும் யோசித்துப் பார்த்து இதெல்லாம் காரணமில்லை சந்தானத்தின் தைர்ய லீலைகள்தான் அவன் கவர்ச்சியின் காரணம் என்று கல்கத்தா டூரில்தான் கண்டுபிடித்தேன்.

நான்தான் டூர் தலைவன். உடன் சந்திரமூர்த்தியும் சென்வர்மாவும். சிரத்தையாக மூவ்மெண்ட் ஆர்டர், டூர் ப்ளான், அட்வான்ஸ் எல்லாம் ஏ. ஓ.விடம் கொடுத்த போது ''கூட யாரு டீ.ஏ.?'' என்றார்.

''சந்தானம்''

''கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்கப்பா, எங்கயாவது அழைச்சுண்டு போயிடுவான்.''

''எங்க பட்டாபி சார்?''

''எங்கயா...? கேக்கறதைப் பாரு'' என்று கண் சிமிட்டி டூர் அட்வான்ஸ் பணத்தைக் கொடுத்தார். நாங்கள் ராஜ்தானி எக்ஸ்பிரஸ்ஸில் சென்று கல்கத்தாவிலே இறங்கிய போது

டிபார்ட்மெண்ட்டிலிருந்து ஆட்கள் வந்திருந்தார்கள். சந்தானம் தியோடோலைட், காம்செட், ரேஞ்ஃபைண்டர், எல்லாவற்றையும் இறக்கி ஜீப்பில் வைத்துவிட்டு ''நாளைக்குத் தானே சர்வே ஆரம்பிக்கிறோம்'' என்றான்.

''ஆமாம் சந்தானம்.''

''என்னை சந்துன்னே கூப்பிடுங்க. உங்களுக்கெல்லாம் நான் தாசன். நீங்கல்லாம் க்ளாஸ் ஒன். நான் க்ளாஸ் த்ரீ நான்- கெஜட்டட்'' என்றான் கேலியில்லாமல்.

''நான் டவுன் வரைக்கும் போய் வரலாமா?''

''தாராளமா''

சந்தானம் எங்களை வரவேற்க வந்த லோக்கல் ஆசாமியைத் தோளை அணைத்து ''தாதா'' என்று விளித்து தனியாக அழைத்துச் சென்று பெங்காலியில் சிரித்துப் பேசினான். வெகு நாள் சினேகிதர்கள் போல.

**சா**யங்காலம் கெஸ்ட் அவுசில் கொசு வலைகளை விடுவித்துப் படுக்கையோரம் செருகிக் கொண்டு 'யுலிசிஸ்' படிக்க ஆயத்தமானேன். சட்டென்று சென்ட்டு வாசனை. சந்தானம் சென்வர்மாவுடன் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

''எங்க சந்தானம் கிளம்பிட்டே?''

''அண்ணா, டவுனுக்குப் போய் ஒரு காளிகோயில் விசேஷ தரிசனம் பண்ணிட்டு அப்படியே சோப்பு மற்ற சில சாமான்கள் வாங்கிக் கொண்டு வரணும். சந்த்ரு வரீங்களா?''

''கமான் சார். இட் வில் பி இண்ட்ரஸ்டிங்க்'' என்றான் வர்மா.

சந்திரமூர்த்தி, ''நான் வரலைப்பா'' என்றதும் என்னைப் பார்த்து ''பைரவர்?''

''நானும் வரலை சந்தானம். நீ போ''



பைரவர் என்பது என் நிஜப்பெயரல்ல. கதை எழுதுவதால் 'கல்யாண பரிசி'லிருந்து சந்தானம் கொடுத்த பெயர்.

சந்தானம் குளித்துத் தலை வாரியிருந்தான். மல் ஜிப்பா மெலிசாக இருந்தது. பையில் நிரோத் பாக்கெட் தெரிந்தது. கெஸ்ட் அவுஸ் பையனைக் கூப்பிட்டு ஏதோ கலக்கலுக்கு ஆர்டர் செய்திருந்து, வந்திருந்ததை எங்கள் அறையிலிருந்தே பானைத் தண்ணீரைச் சிறிதளவு சரித்துக் கொண்டு குடித்துவிட்டு வாயை அழித்துக் கொண்டு, ''அண்ணா, நான் போய்ட்டு வரேன். வர ராத்திரி பதினொண்ணாகும். கவலைப்படாதீங்க. கதவைத் திறந்து வெச்சிருக்கலாம். சௌகிதார் இருக்கான். சந்துரு சார், நீங்க ஷ்யுரா வரலையா. ஜீப் எடுத்துண்டு போறோம்.''

''இல்லை சந்தானம், ஷ்யுர்.''

''நல்ல அம்மன் தரிசனம், பைரவன் சார். சும்மா கடைத் தெருவில் வேடிக்கை பார்க்கலாம். பிரசித்தமான காளி கோயில். நீங்க வந்தா சந்துரு வந்துடுவார்.''

''இல்லை சந்தானம், ஐ ஆம் டயர்ட்.''

காளி கோயில் போக பையில் எதற்கு நிரோத் என்று கேட்கவில்லை.

ஜேம்ஸ் ஜாய்ஸ் பக்கம் மூன்றிலேயே கண்ணயர்ந்து விட்டேன். என்னதான் முதல் வகுப்பு என்றாலும் ஆயிரத்துச் சொச்சம் மைல் பிரயாணம், உடலெல்லாம் களைப்பாகப் பரவியிருந்தது. ராத்திரி பதினொண்ணரை மணிக்கு சந்தானம் மெல்ல கதவைத் திறந்தது கீலில் எண்ணெய் இல்லாததால் தெளிவாகக் கேட்டது. சந்தானம் லேசாக, ''ஹை அப்னாதில் தோ ஆவாரா''வைச் சீட்டியடித்துக் கொண்டு படுத்ததும் மீண்டும் லோக்கல் சரக்கை, 'களக் களக்' என்று ஊற்றிக் குடித்ததும் இருட்டில் கேட்டது. வாடிய மல்லிகைப் பூ வாசம் மிஞ்சியது.

மறுதினம் அதிகாலை குளித்துவிட்டு சுலோகங்கள் சொல்லிக் கொண்டிருந்தான். காம்செட்டுகளை இணைத்துப் பரிசோதித்துவிட்டு பாட்டரியைச் சார்ஜில் போட்டு விட்டு தியோடோலைட் மற்ற சாமான்களை ஜீப்பில் ஏற்றிவிட்டான். சந்த்ரு குளித்த பின்தான் நான் குளிக்கப் போனேன். என்னால் லேட் ஆவது குறித்து வருத்தப்பட்டேன். சந்திரமூர்த்தியிடம் சந்தானம் முந்தின ராத்திரியை வருணித்துக் கொண்டிருந்தான். ''ஒரு வருஷம் ஆச்சா? கண்டு பிடிக்கிறது கஷ்டமாக இருந்தது. ஏரியா ரொம்ப இம்ப்ரூவ் ஆய்டுத்து. ஆனா வொர்த் இட் சந்த்ரு சார். என்ன குட்டிங்க! ஒவ்வொண்ணும் தேவதை மாதிரி. ஒல்லியா எம்பிராய்டரி போட்ட தலைகாணி உறையும், தேக்கு மரக் கட்டில், புடவைத் தலைப்பில் சாவிக்கொத்து, தாகூர் படம், சாம்பிராணி புகை, ஜாப்ராணி, தேஸ்பத்தி போட்டு பான் அதும் எத்தனை அழகாக அப்படியே வெள்ளி பேப்பர் போட்டு. 'ஷொந்து பாபு... ஷொந்து பாபு' ன்தான் கூப்பிடுவா. என்னை இப்பவும் ஞாபகம் வெச்சிண்டிருக்கா. குளுப்பாட்டி விடாத குறை. நாளைக்கு வரப்ப குலாபின்னு கேட்டு வையுங்க, காத்திருப்பேன். எங்க உங்க ப்ரெண்டுங்களைக் கூட்டிட்டு வரலயான்னு நச்சரிச்சா சந்த்ரு சார். நீங்க அவளைப் பார்க்கணும், பார்த்தே ஆகணும், என்ன வர்மா...?

''மதுபாலா மாதிரியும் இருக்கா, நர்கிஸ் மாதிரியும் இருக்கா'' எனறான் வர்மா.

சந்தானம் தொடர்ந்து '' ஒரு வி எச் எஃப் செட் பவர் ட்ரான்சிஸ்டர் போயிருக்கு. மத்ததை வெச்சு மேனேஜ் பண்ணிடலாம். என்ன பைரவன் சார் இன்னும் ரெடியாகலை? நான் பாருங்க ராத்திரி தேவடியா வீட்டுக்குப் போய்ட்டு வந்து கார்த்தால எழுந்து நரசிம்ம கவசம் சொல்லிவிட்டுப் ப்ரெக் பாஸ்ட் பண்ணிட்டு ரெடியாய்ட்டேன். பராட்டாவும் தயிரும்...''



சந்தானத்தை வேலை சம்பந்த விஷயங்களில் குறை சொல்லவே முடியாது. சங்கடங்களில் அவன் சொல்வது எப்போதும் சரியாக இருக்கும்.

மாலை வேலை முடிந்ததும் ஆறு மணிக்கு மேல் படபடப்பாக இருந்தான். ''லோக்கல் சரக்கு எதாவது போடலைன்னா சுஸ்தாயடறது சார்.''

''இவன் டில்லில எண்ண பண்ணுவான் சந்த்ரு?''

''டில்லில இவன் முழுக்க முழுக்க வேற ஆசாமி. ஒரு யுபிகார பெண்ணை லவ் மேரேஜ் பண்ணிண்டு அழகான பொண்ணு, பிள்ளை. எட்க்வார்ட்டஸ் போனவுடனே எல்லாத்தையும் நிறுத்திடுவான். நல்ல கணவன். ரேஷன், அட்மிஷன், பால் டிப்போ, சப்ஜிமண்டினு ஸ்விட்ச் போட்டா மாதிரி மாறிடுவான்.''

''எப்படி ஒரு ஆளால ரெண்டு ஆளா இருக்க முடியுமா?''

''நீயே கேட்டுப் பாரு. அவன் சொல்ற பதில் உன்னைக் கன்வின்ஸ் பண்ணிடும்.''

அன்று மாலையும் வேலை முடிந்து கடைசி ரிக்கார்டுகளையெல்லாம் பத்திரப்படுத்தி சுத்தமாகக் குளித்து விட்டு வாசனாதி திரவியங்கள் மணக்க மணக்க சந்தானம் கிளம்பும் போது, சந்த்ரு கட்சி மாறிவிட்டான்.

''சந்த்ரு நீயும் எங்க கிளம்பிட்ட? சந்தானத்தோடயா...''

''இல்லை. ஒரு சத்யஜித்ராய் படம் பார்க்கப் போறேன்.''

''சந்தானம், நீ எங்க போறே?''

''நான் வழக்கம் போல் 'பஸந்த் சொலே ஜாபே...' வர்மா பாபு ஆஷோன். இன்னிக்கி வரலைன்னா குலாபி கண்ணால தண்ணி விட்டுடுவா. பைரவன் சார் நீங்க இங்க தனியா புஸ்தகம் படிச்சுண்டு இருக்கணுமா? வாங்களேன்.''

''வேண்டாம் சந்தானம். பெண்டாட்டி பசங்கள்லாம் இருக்கா.''

''எனக்கு மட்டும் பொண்டாட்டி பசங்க இல்லையா? அவ டில்லில இருக்கா, இவ கல்கத்தால. என்ன ப்ராப்ளம் வருங்கிறிங்க.''

நான் யோசித்து,''அவங்களை நேரா பார்க்க முடியாது.''

''அதெல்லாம் பக்வாஸ். உங்களுக்கு பயம் அவ்வளவு தானே? இல்லை தயக்கம்.''

''அப்படி இல்லை. என்னைச் சீரங்கத்தில் அப்படி வளர்க்கலை.''

''நான் மட்டும் என்னவாம்... காஞ்சிபுரம். இப்பக்கூட பிரபந்தத்தில் இருந்து கொடேஷன் கொடுப்பேன். **'கிளரொளி இளமை கெடுவதன் முன்னம்'**னு. நாங்கள்ளாம் சுயமாச்சர்யாள்...' என்று சார்மினார் பற்ற வைத்து நிரோத் பாக்கெட்டை ஜிப்பாவின் பக்கவாட்டுப் பையில் செருகிக் கொண்டான். கைகுட்டையை நேர்த்தியாக காலரில் செருகிக் கொண்டு டினோபால் விளம்பரம் போலச் சென்றான்.

''சந்த்ரு பி கோர்ஃபுல்'' என்றேன். எனக்கு என்னவோ சந்த்ரு சத்யஜித்ரே படம் போவதாகத் தோன்றவில்லை. அவனும் வலையில் வீழ்ந்து விட்டான்.

ராத்திரி மூன்றுபேரும் சிரித்துக் கொண்டே திரும்பி வந்தார்கள்.

''பைரவன் சார்ட்ட சொல்லுங்க சந்த்ரு என்ன நடந்துதுன்னு''

'' என்ன நடந்தது சந்த்ரு, நீ சத்யஜித்ரே படம் பார்க்கலைதானே?''

மீண்டும் சிரித்தார்கள். சந்தானம் அந்த கலக்கலை 3 கிளாஸ் ஊற்றி 'சியர்ஸ்' என்றான். நான் வாங்கிக் கொண்டு



விளிம்பை மட்டும் சுவைத்து வைத்தேன். ஒரு மாதிரி மரப்பலகை வாசனை வந்தது. சந்த்ரு ஒரு ப்ளேட் முந்திரிப்பருப்பை அவசரமாக தின்று கொள்ள சந்தானம் தரையில், தாசன் என்று உட்கார்ந்து கொண்டு, ''சந்த்ரு சொல்லுங்க பைரவன் கேட்கவாவது கேக்கட்டும்!''

சந்த்ருதான் சொன்னான்.

''நம்ப முடியாத இடம். மூணு மாடி கட்டிடம். வாட்ச்மேன். கூர்க்கா, சைக்கிள் ஸ்டாண்டு, ஸ்கூட்டர் ஸ்டாண்டு, கார் பார்க்கிங்... இருபத்துநாலு மணி நேரம் மெடிக்கல் ஷாப்! முழுமையான டீசண்டான இடம். என்ன மரியாதை தெரியுமா! வாங்கன்னு அழைச்சுண்டு போய் உடனே கதவைத் திறந்தாங்க. பெல் அடிச்சாங்க. லிப்ட் இருக்கு.''

''குடும்பஸ்தர்கள் இருக்கிற ப்ளாட்டிலயா?''

மீண்டும் கை தட்டிச் சிரித்தார்கள்.

''அந்தக் கட்டிடம் முழுக்க தேவடியா பைரவன் சார். ஒவ்வொண்ணும் ரிஜிஸ்டர்ல பேரு. அப்பாயிண்ட்மெண்ட் ரிஜிஸ்டர். ஒரு மாசம் முன்னாலயே புக் பண்ணணும். ஒவ்வொருத்திக்கும் மெடிக்கல் சர்ட்டிபிகேட், லிப்ட்டுக்கெல்லாம் இன்ஸ்பெக்ஷன் சர்டிபிகேட்டு போல. ஆனா சந்தானத்தைப் பார்த்ததும் ஒவ்வொருத்தியும் அப்படியே உருகறாளுக.''

சந்தானம் சந்திரமூர்த்தியைப் பெருமையுடன் பார்க்க, ''நீயும் வந்திருக்கலாம்பா என்ன எழுத்தாளன் நீ... ஜஸ்ட் ஃபார் ஃபன் அப்சர்வேஷன். கடைசி வரை எல்லாக் காரியங்களும் செய்யணும்னு அவசியம் இல்லையே. சும்மா பார்க்கலாம் இல்லையா? தேவதைகள் தடவிக் கொடுக்கிறது நல்ல அனுபவம் இல்லையா? அந்தப் பெண் வந்து பெங்காலில என்னவோ சொன்னாளே...சென்பாபு என்ன அது? பஸந்த் சொலியா ஜாபே... தாகூர் பாட்டு.''

''என்ன அர்த்தம்?''

**வசந்தம் போய்விடும்**
**ஆனால் பூக்கள் மீண்டும் வரும்**
**யௌவனம் போய் விடும்**
**ஆனால் மீண்டும் வராது!**

''டிவைன், அப்புறம் மெத்து மெத்துனுப் படுக்கை. உட்கார்த்தி வெச்சு சுடச்சுட சமூசாவும், ஏலக்கா போட்ட டீயும் கொடுக்கிறா. சமூசான்னா என்ன சமூசா! கடுகெண்ணை வாசனை கொஞ்சம் கூட வராம... படுக்கைல உட்கார வெச்சு ஷூவை கழட்டி விடுவா பைரவன் சார். அப்புறம் உடம்பப் பிடிச்சு விடுவா. அப்புறம் சித்தாரோ என்னவோ எடுத்துண்டு 'டிங் டிங் டிங்'னு, ஒல்லியா, வாசிக்கிறா. அப்புறம் ஒருத்தன் வந்து முறம் மாதிரி ஒரு வாத்தியம். அதிலதான் அந்தப் பாட்டு பாடினா பாகேஸ்ரீ ராகத்தில, ரவீந்திர சங்கீதம்... அப்பறம் பன்னண்டு வயசுப் பொண்ணு வந்து பாவாடை சட்டையோட ஜல்ஜல்னு சுத்திச்சுத்தி 'கத்தக்' ஆடறது. The Place is divine"

''அப்புறம்?'' என்றேன்.

''அப்றம் என்ன. அவாவா சௌகரியப்படி எந்த லெவலுக்கு மேலயும் போகலாம். எதுக்கும் தயார். ஆனா அததுக்கு ஒரு ரேட்டு. கடைசில மொத்தமா எல்லாத்துக்கும் கணக்குப் போட்டு பில் காட்டுவா. செக்காக் கூடக் கொடுக்கலாம்.''

சந்தானம் தன் வாழ்வின் உத்தேசத்தைச் சொன்னான்: ''நான் என் பெண்டாட்டிக்கு எல்லா வசதிகளும் கொடுத்திருக்கேன். எல்லா சுதந்திரங்களும். ஒரு நாள் கூட அவ கண் கலங்கினதில்லே. பசங்க படிப்பிலேயோ வீட்டுச் செலவிலேயோ எந்த விதக் குறையும் வெச்சிருக்கலை. அவளோட இருக்கிற வரைக்கும் முழு விசுவாசம். பிர்லா மந்திர் போவேன். ரிவோலி பக்கத்தில அனுமார் கோயில்



தவறாம போவேன். மலைமந்திர், பூஜை, புனஸ்காரம் ஒண்ணு விடறதில்லை. ரெண்டு குழந்தைகளும் நல்லா படிக்கிறாங்க. பொண்ணு அப்பா செல்லம், புள்ளை அம்மா செல்லம். ஆனா டூர் வந்துட்டா நான் வேற ஆசாமி. இதில் என்ன தப்பு இருக்குங்கறிங்க?''

''இந்த இரண்டுக்கும் பொருத்தம் இருக்கணும்னு நினைக்கலையா சந்து?''

''எதுக்கு இருக்கணும்? எதுக்குங்கறேன்?''

''துரோகம்ன்னு ஒரு வார்த்தை தெரியுமா உனக்கு?''

''அவளுக்குத் தெரியாத வரைக்கும் துரோகம் இல்லைதானே. துரோகம் எல்லாம் துருப்புடிச்ச வார்த்தை. 'என்ஜாய்'... அது ஒண்ணுதான் வார்த்தை. எல்லாப் பாதுகாப்பும் எடுத்துக்கணும். பைத்தியக்காரத்தனமாக ரிஸ்க் எல்லாம் எடுத்துக்கக் கூடாது. எதுக்கு வீண் பேச்சு? இன்னிக்குச் சாயங்காலம் நீங்க வந்தே ஆகணும். நான் ரிஜிஸ்டர்ல புக் பண்ணிட்டு வந்திருக்கேன். சுவர்ண லதாவுக்கு பெரிய வெயிடிங் லிஸ்ட்.''

''இல்லை சந்தானம். என்னை விட்டுரு''

''உங்களை யார் விடப்போறா பைரவன் சார். பயப்படாதிங்க ஒய்ஃப் கிட்டச் சொல்ல மாட்டேன்.''

''அப்படி இல்லை. என்னவோ தயக்கம்.''

''மாரோ கோலி''

**ம**த்யானம் வி.எச். எஃப் செட் பழுதானதை ரிப்பேர் பண்ணிவிட்டான். ''லோக்கல் பஜாரில் போய் ஒரு 3055 பவர் ட்ரான்சிஸ்டர் வாங்கிப் போட்டுட்டேன் பைரவன் சார். இப்ப ஃபர்ஸ்ட் க்ளாஸா ஓர்க் பண்றது.''

''சந்தானத்துக்கு 3055ம் தெரியும். 3045ம் தெரியும்'' என்றான் சென்வர்மா.

சந்தானம் கண் சிமிட்டி, ''3045ங்கறது அந்த அட்ரஸ்'' என்றான்.

தியோடோலைட்டைச் சமனப்படுத்தி லாட்டிட்டியுட், லாங்கிட்டியுட் பார்த்து டீவியேஷன் சார்ட்டிலிருந்து ட்ரு நார்த், மேக்னட்டிக் நார்த் எல்லாம் செட் பண்ணிவிட்டு க்ராஃபிக் ரிக்கார்டரை கேலிப்பேரட் செய்து... சந்தானம் ஒரு மெஷின்போல இயங்கி விட்டு பக்கத்தில் சேவகம் புரிய கை கட்டி நின்றான்.

வியப்பாக இருந்தது. இருபத்து நான்கு மணி நேரத்தைப் பலவித விசுவாசங்களாகப் பிரித்து வாழ முடியுமா என்ன? டில்லியில் பெண்டாட்டியிடம் முழு விசுவாசம். டூர் வரும்போது, பகலில் வேலை மேல், இரவில் கேளிக்கை மேல். அவ்வளவு பரமபூரண விசுவாசம். அவனைக் கடிந்துகொள்வதோ, தண்டனை கொடுப்பதோ இயலாததாகவே இருந்தது. சொந்த விருப்பு வெறுப்புகளினால் வேலைமேல் பாதிப்பு எதுவும் இல்லை. எஃப்.ஆர்., எஸ்.ஆர். எந்த விதிகளையும் அவன் மீறவில்லை. இருந்தும் சாயங்காலம் அவன் மேல் கடுமையாகக் கோபித்துக் கொண்டு விட்டேன். வேலை முடிந்து வந்ததும், சந்தானம், நான் உடன் வருவது தீர்மானித்த விஷயம்போல், ''பைரவன் சார், நீங்க குளிச்சுட்டு ரெடியாக இருங்க. டீ மட்டும் சாப்பிட்டுக்குங்க. சந்த்ருவும் வர்மாவும் ரெடியாய்டுவாங்க. நான் போய் ஒரு டாக்சி கொண்டு வந்துடறேன்.''

''நான் வரலை சந்தானம்.''

''நீங்க வரிங்க பைரவன் சார். இதான் லாஸ்ட் சான்ஸ். நாளைக்கு ஊருக்கு கிளம்பிடறோம். சொர்ணா காத்துக்கிட்டு இருக்கா.''

''நான் வரலைப்பான்னா!''

''ஏன்?''



''உடம்பு சரியில்லை''

''எதுக்கு பொய் சொல்றீங்க. வர இஷ்டமில்லைனா சரி. இஷ்டமிருக்கு, உங்களுக்கு பயம், அதான். கவலைப் படாதீங்க. உங்க கற்பு கலைஞ்சு போய்டாது. நிச்சயம் உங்க ஒய்ஃப் கிட்ட சொல்ல மாட்டேன். மத்த பயத்துக்குத்தான் இருக்கார் காண்டரிஷி.''

சென்வர்மா என் முகம் மாறுவதைக் கண்டு பேசாமல் இருந்தான். அவ்வளவுதான்! என் ஆத்திரம் முற்றிப் போயிற்று. அவன் எனக்குக் கீழ் வேலை செய்பவன். என் சேவகன்! இவன் என்ன என்னை இப்படிக் கொண்டாடுவது? இவ்வளவு சுதந்திரம் எடுத்துக் கொள்வது?

ஆங்கிலத்துக்கு மாறிவிட்டேன். ''லுக் மிஸ்டர் சந்தானம். உன் எல்லையை மீறி விட்டாய். உலகத்தில் உள்ள எல்லாரையும் டெம்ப்ட் பண்ண முடியாது. நான் வளர்ந்த விதமும் நீ வளர்ந்த விதமும் வேறு வேறாக இருக்கலாம். நீ அங்கெல்லாம் போவதை நான் விமர்சிக்க முடியாது. ஆனால் என்னை அழைத்தது ரொம்பத் தப்பு. டில்லி போன உடனேயே நான் உன் மேல் ஒரு காஷன் மெமொவும் சார்ஜ் ஷீட்டும் கொடுக்கப் போகிறேன்.''

சந்தானம் புன்னகைப்பதை நிறுத்தாமல், ''என்னன்னு.''

''மேலதிகாரிக்கு உரிய மரியாதைகள் கொடுக்காமல், மேலதிகாரியை கேலி பண்ணிப் பெயர் வைத்து அழைத்து விலைமகள் வீட்டுக்கு அழைத்ததாக...சந்த்ரு, சென் வர்மா நீங்க இரண்டு பேரும் சாட்சிகள்'' என்றேன். சந்தானம் எதும் பேசாமல் அறையை விட்டு வெளியே போய் விட்டான். மற்ற இருவரும் பேசவில்லை. வெளியே போய் வராந்தாவில் ஏதோ தாழ்ந்த குரலில் பேசிவிட்டு உள்ளே வந்தார்கள். நான் 'யுலிசிஸ்' புத்தகத்தின் மூன்றாம் பக்கத்தைத் தொடர்ந்தேன்.

சந்த்ரு, ''சந்தானம் ரொம்ப வருத்தப்படறான். சார்ஜ் ஷீட்டெல்லாம் வேண்டாம்னு தோணுது.''

''நோ இதற்கு மேல் நாம் இதைப் பற்றி பேச வேண்டாம்'' என்றேன் கடுமையாக.

டில்லிக்குப் போய் நான் எழுத்தில் புகார் கொடுக்கவில்லை. ஆனால் டைரக்டரிடம் இதைப் பற்றிப் பேசினேன். சந்தானம் என்னுடன் பேசுவதை நிறுத்தி விட்டான். அவனை விசாகப் பட்டணத்துக்கு மாற்றி விட்டார்கள். லீவில் போய்விட்டான். சென்வர்மாவும், சந்திரமூர்த்தியும் இதைப் பற்றி என்னுடன் பேசவில்லை.

அதன் பின், என் வாழ்க்கை மாறி விட்டது. நான் எழுதியிருந்த சிவில் சர்வீஸ் பரீட்சைகளில் ஐ.பி.எஸ். ரேங்க் கிடைத்து நாகாலாந்து, பி.எஸ்.எஃப்., லண்டனில் ட்ரெய்னிங், 'ரா', இப்படியெல்லாம் பலவித பாதை மாற்றங்களுக்குப் பின் இப்போது இந்த ஊரில் கொஞ்சம் பிரசித்தி பெற்ற போலீஸ் கமிஷனராக இருக்கிறேன்.

சந்தானத்தை ஏறக்குறைய மறந்திருந்தாலும் அவன் டிப்பார்ட்மெண்ட்டை விட்டு பங்களூர் வந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். பார்வையாளர் நேரத்தில் **ஆர். சந்தான கிருஷ்ணன்** என்று சீட்டு வந்த போது பழைய சந்தானத்தை எதிர்பார்க்கவில்லை.

''பைரவன் சார், தெரியலையா என்னை! ஜி.எஸ்.ஐ. *1975''*

சற்று நேரம் நான் விழித்து விட்டு, ''ஆ! சந்தானம் வாப்பா. உன் பேரு சந்தானகிருஷ்ணன்னு எனக்கு இருபது வருஷம் கழிச்சு இப்பதான் தெரியும். ஹௌ ஸ்ட்ரேஞ்ச்! உக்காரு. இந்த ஊர்லதான் இருக்கன்னு தெரியும். செட்டில் ஆனப்பறம் கான்ஸ்டபிளை அனுப்ச்சு விசாரிக்கலாம்னு இருந்தேன்.''



''என்னை ஞாபகம் வெச்சுண்டிருக்கிறதே பாக்யம். இன்னம் உங்கள் தாசன்தான்'' என்றான்.

அவனை நேராகப் பார்த்தேன். இருபது வருஷங்களுக்கு முந்தைய ஒரு ரகசியத்தின் பங்குதாரன் போலத்தான் என்னைப் பார்த்தான். காலம் அவனை அதிகம் மாற்றாமல் விட்டு வைத்திருந்தது. தலைநரைத்து... புகையிலை, பற்களை கரும்பழுப்பாக்கியிருந்தாலும் கண்களில் அந்த குறும்பு கலந்த சிரிப்பு பாக்கியிருந்தது.

''பைரவன் சார், அந்தக் கல்கத்தா டூரை மறக்க முடியுமா?''

''ஞாபகம் இருக்கு சந்தானம்'' என்றேன். இருபது ஆண்டுகள் கழித்து அந்த உரையாடலைத் தொடர்வது போல, ''நீங்களும் வந்திருக்கணும் பைரவன் சார். அன்னிக்கு சாயங்காலம் அப்புறம் போனமே, எங்க உங்க ஃப்ரண்டுன்னு கேட்டுண்டே இருந்தா.''

நான் புன்னகைத்து, ''பல தடவை யோசிச்சு பார்த்தபோது உன் ஆஃப்பரை ஏற்றுக் கொண்டு உன்னோட வந்திருக்கலாம்னுதான் தோணித்து சந்தானம். மடையன் மாதிரி உன் மேல் சத்தம் போட்டுட்டேன். எனிவே இட் இஸ் எ லிட்டில் லேட் நௌ. சுவர்ணலதாவுக்கு வயசாயிருக்கும், ஜானகிராமன் கதைல வர மாதிரி.''

''உங்க எழுத்துக்கு எவ்வளவு பெரிய அனுபவம் கெடைச்சிருக்கும் பாருங்கோ.''

''வாஸ்தவம்தான் சந்தானம்''

''சஷ்டியப்த பூர்த்தி பண்ணிக்கப் போறேன். டாட்டரை அமெரிக்காவில கொடுத்திருக்கேன். நல்ல ஐயங்கார் பையன். சன் எம். பி. ஏ. படிக்கிறான். நான் இங்க பங்களூர்ல ஒரு சைட் வாங்கி வீடு கட்டிட்டேன். அது வந்து... ரெவின்யு சைட்டு ரிலீஸ் பண்றதுக்குச் சின்ன ப்ராப்ளமாய்டுத்து.''

''சரி... அப்றம் சந்திக்கலாமா சந்தானம்? நிறைய விசிட்டர்ஸ் காத்துகிட்டு இருக்காங்க!''

''நம்ம பழைய சினேகிதத்தையெல்லாம் எண்ணி நீங்க எனக்கொரு சின்ன உதவி பண்ணணும்.''

''என்ன?''

அவன் ஒரு காகிதத்தைக் கொடுத்தான். நெருக்கமாக டைப் அடித்திருந்த அந்தக் கடிதத்தை முழுக்கப் படித்தேன். விஷயம் இதுதான். சந்தானம் வாங்கிக் கட்டியிருக்கும் சைட்டின் உரிமை பற்றிச் சிக்கலான ஒரு மனு வெங்கோபராவ் என்பவரிடமிருந்து. விற்றவரின் பெயர் தூல்சந்த்.''

''அதெல்லாம் நோ என்கம்பரன்ஸ் சர்ட்டிபிகேட் கொடுத்தும் இந்த மாதிரி ஆயிடுத்து. இந்த மனு எழுதியிருக்கானே வெங்கோபராவ், ரொம்ப சண்டைக்காரன். தமிழ்காரங்களைக் கண்டா ஆகாது.''

''சந்தானம், நான் எப்படி இதில உதவ முடியும்?''

''ஒண்ணுமில்லை. உங்க பேரைச் சொல்லி ஒரு போன் கால். அந்த பி.எஸ்.கே. தேர்ட் ஸ்டேஜ் சப்-இன்ஸ்பெக்டர் சந்த்ரே கௌடான்னு இருக்கான். அவனுக்கு ஒரு போன் கால் போட்டாப் போதும். அவன் போய் இந்த வெங்கோபராவை ஒரு மிரட்டு, ஒரு தட்டு தட்டினால் போதும். பயந்து சுருண்டுடுவான். கொஞ்சம் தயவு பண்ணேள்னா போதும், நாம கல்கத்தாவில் இருந்து என்ஜாய் பண்ணதெல்லாம் இப்பவும் பசுமையா இருக்கு. பாத்து பண்ணுங்க. எட்டு லட்சம் ரூபா போட்டு வீட்டைக் கட்டிட்டேன். இப்ப இடிடான்னா எப்படி? கார்ப்பரேஷன்ல வேற டிமாலிஷன் நோட்டிஸ் கொடுத்திருக்கான்.''

''ஓ! அப்படியா'' என்றேன் பேனாவை மூடி வைத்து விட்டு.



''முப்பத்தாறு எழுபத்திரண்டு தொண்ணுத்தாறு... போன் நம்பர்...''

நிதானமாக நான் சந்தானத்திடம் சொன்னேன். ''சந்தானம், நான் அன்னிக்கு கல்கத்தாவில நடந்ததுக்குப் பின்னால ரொம்ப வருத்தப்பட்டேன்.''

''அதனால் என்ன. பரவால்லை சார், நீங்க கொடுத்த கம்ப்ளேண்ட்னால எனக்கும் கொஞ்சம் சங்கடம் ஆச்சு. வைசாகுக்கு மாத்தி ரெண்டு ஃபேமிலி ரன் பண்ண வேண்டியதாய்டுத்து.''

நான் கவனிக்காமல், ''நான் வருத்தப்பட்டது உன்னைக் கோவிச்சுக் கிட்டதுக்காக இல்லை! உன்னோட அந்த அனுபவத்தைப் பங்கிட்டுக் கொள்ள எனக்கு தைரியமில்லாததோ கோழைத்தனமோ தயக்கமோ என்னவோ, என் ஜீன்ல அந்தத் தீரச்செயல் இல்லை. இதனுடைய மாரல் வேல்யுஸ், நல்லது கெட்டது, பாவ புண்ணியங்களையெல்லாம் நான் இங்க கொண்டு வரலை. நீ சொன்ன மாதிரி ஒரு இடத்துக்குப் போய் ஒரு மாடி ஏறி சில பெண்களைப் பார்க்கறதிலேயோ, அவங்க சிஸ்ருஷை பண்றதாலேயோ எப்படி என்னுடைய பவித்ரம் கெட்டு போயிருக்கும்னு அடிக்கடி என் வாழ்வில் யோசிச்சுப் பார்த்ததுண்டு. 'மனத்துக்கண் மாசிலனாகி' ன்னு வள்ளுவர் சொல்லியிருக்கார். நான் ஒரு மிக அரிய சந்தர்ப்பத்தை இழந்ததுக்காகத்தான் வருத்தப்பட்டேன். எதுக்காக அப்படி நடந்துண்டேன்னு பல ராத்திரிகள் யோசித்ததுண்டு. எதுக்காகன்னு இன்னிக்கித்தான் புரியறது.''

''எதுக்காக பைரவன் சார்?''

''சந்தானம், நான் உனக்கு இப்ப சுலபமா உதவி செய்யலாம். ஆனா படிச்சுப் பார்த்ததில் இந்த வெங்கோபராவ் கட்சியில நியாயம் இருக்கு. அதனால 'உனக்கு உதவி செய்ய முடியாது, கெட் அவுட்' அப்படின்னு

என்னால இன்னிக்கு சொல்ல முடியறது பாரு அதுக்காகத்தான். அன்னிக்கு நான் உன்னோட வரலை...''

என் வாழ்வில் சந்தானம் முதன் முறையாக புன்னகை மறைந்து முகம் வாடுவதைப் பார்த்தேன்.

**-கணையாழி, செப்டம்பர், 1995.**

# பிசாசு வந்த தினம்

**மா**ங்கொட்டை நாணுவின் வீட்டிற்கும் சாவுக்கார் வீட்டிற்கும் இடையில் இருந்த 'சிரேஸ்தார்' வீட்டு மாடியில்தான் பிசாசை என் கண்ணால் பார்த்தேன். ஸ்ரீரங்கநாதர் சத்தியமாக அதற்குமுன் சின்னராஜு அதை கோதர முக்கில் பார்த்திருக்கிறான். பங்குனி உத்தரத்துக்கு ஐந்து நாள் முன்னதாக. அதுதான் பிசாசு முதலில் வந்த தினம்.

எனக்குப் பிசாசுகளில் நம்பிக்கை இல்லைதான். நான் ஒரு 'ரேஷனலிஸ்ட்' என்று சொல்லிக் கொள்ளவில்லை. கடவுள் நம்பிக்கை எல்லாம் உண்டு. ஆனால் 'பிசாசு நம்பிக்கை' இல்லை. பங்குனி மாதம் கோ- ரதத்தை அதன் ஷெட்டிலிருந்து வெளியே இழுத்து வந்து தேர் தினத்திற்கு நான்கு நாள் முன்னாலேயே நிலைக்கு அருகில் விட்டு விடுவார்கள்.

அதைப் பார்த்துத்தான் பெருமாள் குதிரை வாகனத்தில் வீதிவலம் வரும்போது உற்சாகமாகி வையாளிக் குதிரை போடுவார். தினங்களில் சிறுவர்கள் தேருக்குள் நிலை வழியாக ஏறிக்கொண்டு வௌவால் புழுக்கை நாறும் இருட்டில் உள்ளுக்குள் இருக்கும் மரப்படிகளில்

இறங்குவார்கள். தேரின் மரச் சிற்பங்களில் வெட்டப்பட்டிருக்கும் குழப்பமான கெட்ட காரியங்களைத் தயக்கத்துடன் ரசிப்பார்கள்.

தேரில்தான் பிசாசைப் பார்த்ததாக சின்னராஜு சொன்னான். தேரில் மேலும் கீழுமாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தானாம். திடீரென்று யாரும் இல்லை. இருட்டிவிட்டதாம். தெருவில் விளக்குப் போய்விட சட்டென்று அவனுக்குள் பய அலை ஓடியிருக்கிறது.

இதோ அவன் வார்த்தைகளில்:

''எப்பவும் போல தேர் நிலைல குறுக்கால பலகை போட்டிருக்குமே அதிலிருந்து எறங்கறேன். மேல ஒரு மாதிரி சப்தம் கேக்குது. நெல்லுமிசின்ல நெல்லு இல்லாம ஓட்டினா கேக்குமே அந்த மாதிரி சப்தம். வௌவாலாங் காட்டியும்னு பார்த்தா இல்லை. குப்புன்னு மகிளம்பூ வாசனை. (முழங்கைவரை காட்டி) இவ்வளவு சைஸில சின்னதா மொத்தையா ஒண்ணு தெரிஞ்சுது. நல்லாப் பார்த்தேன். அது என்ன ரங்கு?''

''எப்படி இருந்தது? ஆம்பளையா பொம்பளையா?'' என்று கேட்டான் ரங்கு.

''பொம்பளை. ஆனந்தரங்கம் பொண்ணு இல்லை? தூக்கு போட்டுக்கிட்டு செத்துப்போச்சே? அதும் சாயல்ல... என்கூட பேசிச்சு.''

''என்னடா பேசித்து'' என்றேன் சற்றே நடுக்கத்துடன்.

''எனக்குத் தாவமா இருக்கு. எளனி கொண்டு வருவியா? எனக்கு தாவணி இல்லை, கட்டிக்கத் தருவியான்னுட்டு.''

''சே, புருடா விடாதடா'' என்று நெர்வசாகச் சிரித்து நான் அவனை நிராகரித்து விட்டாலும் சின்னராஜு அவ்வாறு 'வருவியா தருவியா' என்று ப்ராசமாகப் பேச வல்லவன் அல்லன்.



அவன் அப்பாவின் 'கொள்ளிடம் சலவைச் சாலை'யில் இஸ்திரி போடுகிறவன். என் க்ளாஸ் மேட்டு. ராமமூர்த்தி ஐயரிடம் அடி வாங்காத நாள் பள்ளியில் விடுமுறை நாள். அவன் பொதுவான ஒக்கபிலேரி உவர்மண், கழுதைகள், வெள்ளாவி இவற்றைச் சார்ந்திருக்கும். எனக்கு அத்யந்த சினேகிதன். நானும் அவனும் சேர்ந்துவிட்டால் தெரு நாய்களுக்குக் கதிகலக்கும். சின்னராஜுவின் கல்லடித் திறமை நாய் நாடில் பிரசித்தம். காலை ஒடிக்காமல் விடமாட்டான். வால் காணாமற்போய் நொண்டிக் கொண்டே அது கூவுவது மண்ணச்ச நல்லூர் வரை கேட்கும். சின்னராஜு பொய் சொல்லமாட்டான்.

''ஒரு வேளை 'மர்மயோகி' பார்த்தியோ சின்னராஜு?''

''இல்லை ரங்கு.''

''அப்புறம் அது என்ன செஞ்சிச்சு?''

''சிரஸ்தார் வீட்டாண்டை போய்ருச்சு. பத்தடி உயரத்தில் பறந்தாப்பலயும் இல்லை; மெதந்தாப்பலயும் இல்லை.''

இதுதான் அதன் முதல் நேர்காணல். இதைப் பற்றி கோவில் அதிகாரிகள் கேள்விப்பட்டு தேருக்கு பெருமாள் வருவதற்கு முன் சாந்தியெல்லாம் பண்ணினார்கள். மந்திரப் புகை தாங்காமல் ஓடிப் போய்விடும் என்று சொன்னார்கள். ஆனால் அது இடம் பெயர்ந்துவிட்டது.

மேற்குறித்த பிசாசை வடக்குச் சித்திரை வீதியிலேயும் ராமானுஜம் ஒரு சமயம் பார்த்ததாகச் சொன்னான். அவன் வார்த்தைகள் இதோ: ''நான் ஏதோ தூரம்ணா நடமாட்டம்னு நெனைச்சுண்டிருந்தேன். இப்பதான் புரியறது பூட்டின வீட்டில நிழலாடறது. கிட்டப் பார்க்க பயம். நரசிம்ம கவசம் சொல்லிண்டே ராத்திரி பூரா தூக்கமில்லை ரங்கு. தாகம், தாகம், அப்படிப்பட்ட தாகம்.''

''உனக்கா பிசாசுக்கா?''

''எனக்குடா. அது வெறுமன வாயை வாயை 'பப் பப்'னு திறக்கறது.''

''சொல்லாதே பயமா இருக்கு.''

பத்து பதினைந்து நாட்களுக்கு அதைப்பற்றிப் பேச்சு எதும் இல்லாவிட்டாலும் ரங்கு கடை நண்பர்களிடையே சின்னராஜு பார்த்ததும், ராமானுஜம் பார்த்ததும் ஒரே பிசாசா என்பதைப் பற்றி விவாதங்கள் இருந்தன.

''ஒரு வீதிக்கு ஒரு பிசாசு போறுண்டா'' என்றான் ரங்கு.

''ஏன், உனக்கு நம்பிக்கை இல்லையா?''

''பிசாசாவது ஒண்ணாவது. வீட்டில இருக்கறதுதான் பிசாசு.'' ரங்கு அவன் மனைவியைச் சொல்கிறானா. மாமியாரைச் சொல்கிறானா என்று யாரும் வினவவில்லை.

அதன்பின் அது சிரஸ்தார் வீட்டு மாடியில் தோன்றியது. சிரஸ்தார் வீடு' என்று பெயரிருந்தாலும் அதன் சொந்தக்காரர் சிரஸ்தார் கோபாலய்யங்கார் கொண்டையம் பேட்டை தோப்பில்தான் இருக்கிறார். இந்த வீட்டில் சங்கர்ராவும் மனைவி சாவித்ரியும் மரவை மரவையாக நான்கு குழந்தைகளும் வருஷக்கணக்கில் குடியிருக்கிறார் கள். மாதம் பதினைந்து ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டு.

சங்கர்ராவ் ஜங்ஷனில் ஒரு ஓட்டலில் சரக்கு மாஸ்டர். தினம் ராத்திரி பதினொன்றுக்குத்தான் வருவான். தூக்கக் குழந்தைகளை எழுப்பி முத்தம் கொடுத்துவிட்டு பாதாம் அல்வாவும் மனைவிக்கு மல்லிகைப் பூவும் தருவான். சீட்டாடுவான். எப்போதும் ரங்கு கடையில் அண்டா குண்டாக்களை வைத்து கைமாத்து வாங்கிக் கொண்டு போவான். சங்கர்ராவ்தான் அதை - வேம்பு மூலமாகப் - பார்த்தான்.



''ரங்கு, என்னவோ தெரியலை. எடுத்துக்கட்டி ஜன்னல் எல்லாம் திறந்திருக்கு. இவதான் முதல்ல பார்த்தா. யார் திறந்திருப்பான்னு நான் மாடி ஏறிப் போய் பார்த்திருப்பேன். இவ பயந்து, வேணாம், கார்த்தாலை பார்த்துக்க லாம்னுட்டா. அப்ப வேம்பு வந்தான். அவனை 'நீ ஏறிப்போய் பாரு வேம்பான்னு' டார்ச் லைட்டைக் கொடுத்து அனுப்பினோம். கொஞ்ச நேரத்தில பேஸ்த் அடிச்சாப்பல வரான். என்னடா வேம்புன்னா, மாடில ஏறிப் பார்த்தா ராயரே நான் இங்க இருகேன்னா. அது அங்க போறதுனான் ரங்கா. சன்னல் கதவெல்லாம் திறந்திருக்கு. காத்தில்லாம ஆடறது. அது எடுத்துக்கட்டி மேல கால்மேல கால் போட்டுண்டு உக்காந்துண்டிருந்ததாம். வேம்புவை பேர் சொல்லிக் கூப்பிட்டதாம்.''

''எதுடா?''

''அதுதாண்டா. சின்னராஜு பார்த்தானே அதே பிசாசு. புதுசா செல்லு போட்ட டார்ச்சு எப்படி ஈயம் எல்லாம் வழிஞ்சு அப்படியே பச்சையாப் போச்சு ரங்கா'' என்றான் சங்கர்ராவ். வேம்பு அப்போது அந்தப் பக்கம் பக்கெட்டில் கோதுமை மாவும் முளைக்கீரையுமாக வந்தான்.

''புடவை கட்டிண்டிருந்ததா வேம்பு?''

''சொல்ல முடியலை. மழுங்கலா நீலமா ஒரு நிழல் போல. முகம் மட்டும் பளிச்சுன்னு தெரிஞ்சுது. அதான் ஆனந்தரங்கம் பொண்ணு முகம். பேய் பேய்னு கூப்பிட்டு தாகத்துக்கு தண்ணி கொண்டாந்தியா, தாவணிக்கு துணி கொண்டாந்தியான்னு கேட்டுது.''

''தாவணி போட்டுக்கலையோ?''

''அப்படியும் சொல்றதுக்கில்லை. திருப்பதி மரப்பாச்சி மாதிரி ஒரு ஷேப்பு இல்லாத ஷேப்பு ரங்கா. ஆனா வெளிர் நீலத்தில... எனக்கு சொல்லத் தெரியலை. அப்படியே சப்த நாடியும் ஒடுங்கிப்போய் உடனே இறங்கி வந்துட்டேன்.

அப்புறம் நாலு நாளா ஜுரம் ரங்கா. அருணாசல டாக்டர்கிட்ட காட்டினா இந்த மாதிரி ஜுரம் நான் பார்த்ததே இல்லைங்கறார்'' என்றான் வேம்பு.

அன்றிலிருந்து பிசாசைவிட பிசாசைப் பற்றிய வதந்திகள் அதிகம் பரவ ராத்திரி ஏழாவது மணிக்கு கீழச் சித்திரை வீதியில் எல்லோரும் கதவை மூடிப் படுத்து விட்டார்கள். சங்கர்ராவ் ஓவர்டைம் பண்ணாமல் லால்குடி பாசஞ்சரில் சீக்கிரமே வீடு திரும்ப முற்பட்டான். ரங்கராஜா தியேட்டரில் மாலைக் காட்சிக்குக் கூட்டம் குறைந்து ராத்திரி ஷோவை ரத்து செய்யும்படி ஆகிவிட்டது.

யாரோ சொன்னார் என்று எவனைக் கண்டாலும் பூண்டு முடிந்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அதுதான் பரிகாரம். அந்த நாற்றம் பிசாசுகளுக்குப் பிடிக்காது என்று சொன்னதால், அரையர் கடையில் 'பூண்டு ஸ்டாக் இல்லை' என்று போர்டு எழுத வேண்டியிருந்தது.

சிரஸ்தார் வீட்டில் பிசாசு நிலை கொண்டுவிட்டது. நாலு நாள் கழித்து மீண்டும் மாடிக் கதவுகள் திறந்திருந்ததாகவும் அவ்வழியாகக் காற்றடித்ததாகவும் நிழலாடியதாகவும் சங்கர்ராவ் சொன்னான்.

''சாவித்திரி பயப்படறா. குழந்தைகள் எல்லாமே அலர்றது. எல்லாரும் உக்கிராண உள்ளில தலைமாட்டில வெளக்குமாத்தை வெச்சுண்டு படுத்துக்கறோம். பகல் வேளையில கொல்லைப்பக்கம் போறதுக்கு 'துணைக்கு வா'ங்கறா. என்ன செய்வேன் ரங்கு. நீதான் இதுக்கு ஒரு வழி சொல்லணும்'' என்றான்.

''வீட்டுக்காரர்ட்ட சொல்லிப் பார்க்கறதுதானே... கோபாலன் எச்சக் கையால காக்கா ஓட்டமாட்டான். இருந்தாலும்...''

''அவரா... வெள்ளையடிச்சே ஒரு மாமாங்கம் ஆச்சு. வாடகை கம்மின்னுட்டு ஒரு ரிப்பேரும் செய்யமாட்டார்.



ஆனா இது வேற சமாசாரம்னுட்டு சிரஸ்தார்ட்ட சொல்லிப் பார்த்துட்டேன். அவர் ஒரு பூசாரிய அனுப்பறேன், இப்ப அப்பன்னு தட்டிக் கழிச்சிண்டிருக்கார்'' என்றான் சங்கர் ராவ்.

ராத்திரியில் நடமாட்டம் குறைந்து பிசாசுகளைவிட பிசாசுக் கதைகள் திண்ணைகளில் உலவின. கொள்ளிடத்தில் கொள்ளிவாய்ப் பிசாசு தினம் பார்ப்பதை கேவி சொன்னான். செல்லாயி கோயில் அருகில் ஒரு சங்கிலிக் காட்டேரி உலாவுவதாகச் சொன்னார்கள்.

புதுசாக யாரைப் பார்த்தாலும் கால் தரையில் பாவுகிறதா என்று கவனிக்குமாறு வீணை ரங்கநாதன் சொன்னபோது பொறுமையிழந்து, ''வாட் நான்சென்ஸ்'' என்றான் ரங்கு. அவன் கார்ல் மார்க்ஸ் எல்லாம் படிப்பவன். ''திஸ் இஸ் டு மச். வாங்கடா நாம் ஒரு 'விஜிலென்ஸ் பார்ட்டி' அமைக்கலாம். இந்தப் பிசாசு தினம் சங்கர்ராவ் வீட்டு மாடிக்குத்தானே வரது. அங்கயே போய் டேரா போட்டுப் படுத்துக்கலாம். என்ன ஓய் பத்மனாபன் வறீரா? இல்லை பயமா?''

''பயம்னு இல்லை. இந்த மாசம் மாசியம் சோதம்பம் பண்ணணும். அது போய்டட்டுமேன்னு பார்க்கறேன்.''

சீமாரங்கன் என்னும் சீனிவாசராகவன் வருவதாகச் சொல்லிவிட்டு அப்புறம் ரங்கு கடைப்பக்கமே வராமல் கோவிலில் நுழைந்து உத்தர வீதி மார்க்கமாகத் தெற்கு வாசல் சென்று ஆபீசுக்குப் போனான்.

''என்னடாது எல்லாரும் இப்படிப் பயப்பட்டா எப்படி? நீயாவது ரெடியா?'' என்று என்னைக் கேட்ட போது அசட்டுத்தனமாக நான் ''வரேன், எனக்கு பயமில்லை'' என்று சொல்லிவிட்டேன்.

சின்னராஜுவும் வருவதாகச் சொல்லிவிட்டு ரங்கு, சின்னராஜு, வீட்டுக்காரர் சிரஸ்தார் கோபாலய்யங்கார்

தோப்பிலிருந்து ஒரு ஆளை அனுப்பியிருந்தார். வெள்ளைச்சாமி. நிஜப் பெயரா காரணப் பெயரா தெரியவில்லை. பார்த்தாலே வெள்ளை மீசையும் நரைத்த தலையுமாக அவனே பிசாசு போல, ஒரு நெகட்டிவ் போல இருந்தான்.

சங்கர்ராவிடம் சொன்னதில், ''எத்தனை பேர் துணைக்கு வந்தாலும் சரிப்பா நான் மொட்டை மாடிக்கு வரமாட்டேன். பெண்டாட்டியை தனியா விட்டுட்டு மேல வந்து ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆய்ட்டா நடுங்கியே செத்துப் போய்டுவா. எப்படியாவது பிசாசை அங்கிருந்து ஓட்டிட்டா போறும்பா'' என்றான்.

''கவலைப்படாத. என்னதான்னு பார்த்துர்றது வல்லார...'' என்று பிசாசைத் திட்டிவிட்டு, என்னைப் பார்த்து, ''உனக்குப் பயமே இல்லையே?'' என்றான்.

''ஆ ஆமாம் ரங்கா.''

''பயமா, இல்லையா, சரியாச் சொல்லு.''

''பப பயம் இல்லை.''

புதன்கிழமையிலிருந்து ஆரம்பிக்கலாம் என்று பேச்சு ஒருவாறு கதிகலக்கியது. வத்சலா ''ஏண்டாஆ உனக்கு இந்த வம்பெல்லாம். நீயா பேயை விரட்டப் போறே. ஒரு மண்புழுவை விரட்ட தைரியமில்லாதவன்'' என்று சிரித்தாள்.

நான், ''பாட்டிகிட்ட சொல்லாதே. படிக்கப் போறன்னு சொல்லியிருக்கேன்'' என்றேன்.

''நான் வேணா வரட்டுமா. எனக்கும் பேயைப் பார்க்கணும் போல இருக்கு'' என்றாள்.

வத்சலா தைரியசாலி. வீதிப் பையன்கள் வாத்தியார் வீட்டு விறகுக்கட்டையிலிருந்து வந்த பாம்பைக் கண்டு நடுங்கிக் கொண்டிருக்க வத்சலா அந்தப் பாம்பை குச்சியில் எடுத்து எல்லோரிடமும் காட்டியது ஞாபகம் வந்தது.



ரங்குவிடம் சொன்னபோது, ''பொம்மனாட்டி வேண்டாம். ரஜஸ் வலையா இருந்தா ஆபத்து'' என்றான்.

''வெள்ளைச்சாமி மாந்திரீகம் தெரிந்தவனாம். செப்புத்தகட்டில் ச்ரீயும் கிலியும் ஓங்கார யட்சிணி என்று யந்திரம் எழுதி ''ஆகாச எட்சிணி ஆகுருஷ்ணாய'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான். அவன் உடலில் இயற்கையாகவே ஒரு நடுக்கம் இருந்தது.

''பிரம்பு எதுக்கு பூசாரி?''

''41 நாள் மூலமந்திரத்தை ஜெபித்து இந்தக் குச்சியில ஏற்றியிருக்கு. இதைக் காட்ன உடனே போய்ரும்.''

அன்று ராத்திரி டார்ச் லைட்டு, முண்டாசு, பழைய செருப்பு, சீட்டுக் கட்டு, பெட்ரமாக்ஸ் விளக்கு இவற்றுடன் தேவைக்கதிகமான பூண்டும் எடுத்துக்கொண்டு சிரஸ்தார் வீட்டு மாடியில் போய் உட்கார்ந்து கொண்டோம்.

ராத்திரி ஒவ்வொரு மணியும் கோவில் மணியடிக்க கடைசி பாரிக் கொட்டு வீதிவலம் வந்து விலகிவிட அந்த அமானுஷ்ய மௌனத்தில் நாங்கள் மேலாக மிதப்பாகப் பேசிக்கொண்டிருந்தாலும் உள்ளூர எல்லாருக்கும் கன்றுக்குட்டி உதைத்தது.

சட்டென்று பெட்ரமாக்ஸ் விளக்கின் மேண்ட்டில் நிறமிழந்து அணைந்து போயிற்று. ரங்கு டார்ச்லைட் போடுகிறான், போடுகிறான், வெளிச்சம் வரவில்லை. இருள். கொஞ்சநஞ்சம் நிலாவையும் மேகம் மறைத்து விட்டது.

அப்போதுதான் ''பத்து, அங்க பாரு'' என்றார்கள் யாரோ. அவன் காட்டிய திசையில் மதிலோரத் தென்னை மரங்களில் சலசலப்பு சப்தம் கேட்க, நிழலாடியது.

''குச்சியை எடு, குச்சியை எடு'' என்றால் நான் குச்சியை எடுக்கப்போக அது கீழே விழுந்தது.

''தாயே, தாயே, நான் கோரிய வேலைகளை நீ செய்ய வேண்டும் தாயே, தாயே'' என்று பூசாரி கேட்க, எந்தத் திசையில் பார்ப்பது என்று தெரியவில்லை. மதிலோரத்தில் நிழலில் மாயமாய் வெள்ளைத் தீற்றல். நடந்து செல்வது...

''பூனைடா.''

''சே, பூனை இத்தனை பெரிசாவா, அதும் நிமிந்து நடந்து போகுமா இப்படி?''

''இருடா இருடா, கிட்ட வரட்டும். என்ன உன் கை இப்படி நடுங்கறது?''

''உன் கைதான் நடுங்கறது சின்னராஜு. இத்தனை உசரத்தில் அத்தனை வேகமா எப்படிரா 'ரமுடியும்? பிசாசுதாண்டா இது.''

''ஏய் தெரியறதா உனக்கு?'' ரங்கன் பகல்வேளையிலே கொஞ்சம் ஷார்ப்சைட்.

''தெரியறது. உனக்கு?''

''அதோ அங்க வெள்ளையா இருக்கே அதானே?''

நாங்கள் அனைவரும் அதன் வசீகரத்தில், அதை விரட்டுவதையோ பிரம்பால் போய் அடிப்பதையோ மறந்து போய்விட்டோம்.

''தாயே, உனக்கு என்னம்மா வேணும்? என்னம்மா வேணும்?'' என்றான் பூசாரி.

''சொன்னனில்லை. தாவத்துக்கு தண்ணி தருவியா? தாவணிக்கு துணி தருவியான்னு.''

''தர்றேன் தாயே, தர்றேன்'' என்றான் பூசாரி.

பயத்தில் படபடவென்று இருந்தது. எடுத்துக் கட்டியிலிருந்து அப்படியே குதித்து ஓடினபோது வலி தெரியவில்லை. பிடிபிடி என்று சப்தங்கள் கேட்க, கீழே சங்கர்ராவின் மனைவியும் குழந்தைகளும் உச்ச ஸ்தாயியில்



அலற, அப்போதுதான் என் கால் வலியின் உக்கிரம் முழுவதும் தாக்க நான் நினைவிழந்தேன்.

**பு**த்தூர் ஆஸ்பத்திரியில் மறுதினம் அழைத்துச் சென்று எக்ஸ்ரே எடுத்தபோது, கால் எலும்பு இரண்டு இடங்களில் முறிந்திருந்தது.

நான் ஆஸ்பத்திரியில் ஒரு மாசம் ஹார்னெசில் வைத்து படுத்திருந்து எழுந்ததும், இன்றும் அதன் விளைவாக விந்தி விந்தி நடப்பதும், சங்கர்ராவ் அடுத்த வாரமே வீட்டைக் காலி பண்ணிவிட்டு ஆண்டார் தெருவில் ஒரு ஸ்டோரில் ஒண்டுக் குடித்தனம் போய்விட்டதும் இந்தக் கதைக்கு அப்பாற்பட்ட விஷயங்கள்.

**ச**மீபத்தில் சீரங்கம் போயிருந்தபோது சிரஸ்தார் வீட்டை ஒரு பயத்தோடுதான் அணுகினேன். அது முழுவதும் இடித்து வேறு தினுசாக முன்பக்கம் லாந்தி டிஸ்டம்பர் அடித்து அடையாளம் மாறியிருந்தது.

''இப்ப அங்க யார் வசிக்கிறா ரங்கு?'

''சிரஸ்தார்தான். ஏதோ பரிகாரம் பண்ணி யந்தரம் வேல் எல்லாம் நட்டு சாந்தி ஹோமம் பண்ணிட்டார். பெரும்பாலும் இடிச்சுக் கட்டிட்டார் கோபலய்யங்கார்.''

''ரங்கு, அந்த வீட்டில் இருந்த பிசாசு என்னாச்சு?''

''அப்புறம் அது வரவே இல்லைடா.''

அப்போது அவ்வழியே தேவகாந்தாரி ராகத்தை முணுமுணுத்துக் கொண்டு வந்த அம்பி இந்தக் கதைக்கு மற்றொரு கோணம் இருப்பதாகச் சொன்னான்.

சிரஸ்தார், சங்கர்ராவை காலி பண்ணச் சொல்வதற்காக கோர்ட்டில் பலவிதமான கேஸ் போட்டும் பயனில்லாததால், சின்னராஜு கஞ்சா உருண்டை அடிப்பான், பகல்லேயே பேய், பார்த்திருக்கலாம். வேம்பு வெள்ளைச்சாமி

போன்றோரை கோபாலய்யங்கார் செட்டப் பண்ணியிருக்கலாம் என்று ஒரு சாத்தியக்கூறு இருப்பதாகச் சொன்னான்.

''எப்ப பிசாசைப் பத்திக் கேட்டாலும் சிரிக்கிறார்ரா!''

''சேச்சே நானே பார்த்தேனே அம்பி.''

''பாத்தியா? பார்க்க விரும்பினயா? மனசு தயார் ஆய்ட்டுதுன்னா எந்தக் காட்சியையும் பார்க்க முடியும்'' என்றான் அம்பி.

சேச்சே அப்படி இல்லவே இல்லை. அப்படி இருக்குமா என்ன?

இந்தச் சந்தேகங்களையெல்லாம் சொல்லிக் குழப்பி இந்தக் கதையின் சுவாரஸ்யத்தைக் கெடுக்க விரும்பவில்லை நான். இந்த இரக்கமில்லாத, மத்யஸ்தமில்லாத அறிவியல் உலகத்தில் தண்ணீரும் தாவணியும் கேட்கும் சில பிசாசுகளும் இன்னமும் தேவையென்றே தோன்றுகிறது.

- குங்குமம், 29.9.95

# சிறு சிறு கதைகள்

## கனவு

இந்தக் கதை கனவில் முடியப் போகிறது. இப்போதே சொல்லி விட்டேன்.

க்ரோம்பேட்டைக்கும் பல்லாவரத்துக்கும் இடையே மின்சார ரெயிலில் இரண்டு இளைஞர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருவன் உறுதியான உடலமைப்பு கொண்டு, மற்றவன், ஒல்லியாக இருந்தாலும் கல்லூரி மாணவர்கள் என்று உடனே சொல்லும்படி தலைமயிரும் உதட்டுக் கறுப்பும். ஒல்லிதான் கைகளை பலமாக ஆட்டிப் பேசினான். ''செகண்டு ஷோ பார்த்துட்டு ராத்திரி திரும்பி வரம் குரு. சுப்ரி, ராயபுரம் சரக்கு அடிச்சிருக்கான். நாந்தாண்டா மைக்கல் ஜாக்சன்னு நடு செண்டர்ல ஆடறான். லாரிக்காரன்லாம் கடுப்பாயிட்டான். மற்ற தோஸ்துங்க உசுப்பிவிட அய்யாக்கு சூடு ஏறி இடுப்பில கையை பதிச்சுகிட்டு இப்படி இப்படி டான்ஸ் ஆடுறான். நாங்க ஆறு பேரு. பாணா, மாஞ்சா, வேம்பன், நிஸ்ஸாரு போதுமா செட்டு? என்னா களை கட்டிருக்கும் பார்த்துக்க! இந்தச் சமயத்தில பாரு எதுத்தாப்பல சைக்கிள்ள ஒருத்தன் வரான்.

எம்மாதிரித்தான் குச்சியா ஒல்லி பிச்சானா. பின் சீட்டிலே பொஸ்தவ கட்டு. அப்றம் ஒரு ஃபிகரு பாவாடை தாவணி கட்டிக்கிட்டு சோக்கா, பளபளன்னு, வாசமா. எங்களைக் கண்டதும் பயந்து போய் ஓரங்கட்டறான். சுப்ரி இத பார்றான்னு, அப்படியே பாஞ்சு சைக்கிளை கேரியர்ல புடிச்சு நிறுத்தி ''எங்க போற வாத்தியரே, யாரு இந்த புல்புல்''னான்.

''இந்தப் புத்தகத்தை ப்ரெஸ்ல கொடுக்கணுங்க. நாளைக்கு வெளியீட்டு விழாங்க. எங்களை உட்டுருங்க,''ன்னு கெஞ்சறான்.

''பொண்ணு யாரு? தள்ளிட்டுதானே வந்தே''ன்னான் பாணா. ''இல்லைங்க. சம்சாரங்க. ஏய் பாவாடை தாவணி கட்டாதன்னு சொன்னனில்லை,''ன்னு அதட்டறான்.

''எல்லாரும் சம்சாரமாடா ஒனக்கு''ன்னு அதை லாவி அப்படி புடிச்சு இளுத்துகிட்டு வந்துட்டான். நானும் உள்ள பூந்து சந்தடி சாக்கில ஒரு கிஸ் அடிச்சிட்டேன். பொண்ணோ அலறுது. கை வளையல் ஒடைஞ்சு, பொஸ்தவம் எல்லாம் கீழே சிதறிப் போய், கடைசில என்ன ஆச்சு? அம்பாசடர்ல ஒருத்தன் வந்து கெடுத்தாம்பா. ரோட்டில நிறுத்திக் கெளவன் கேக்கறான். ''நீங்களாம் படிக்கலையா? அக்கா தங்கச்சி கெடையாதா''ன்னு. பொன்மொளியா உதுத்து, ரெண்டு பேத்தையும் கூட்டிட்டு போய்ட்டான். க்ரேட் ஃபன் யார், தமாஷ்! ஆறு பேரும் பதம் பார்த்திருப்போம். கடைசியா இந்த பொஸ்தவம்தான் மிஞ்சித்து. ஞாபகமா ஒரு பிரதி எடுத்துக்கிட்டேன்,'' என்று காட்டினான். இது வரை கதை கேட்டுக் கொண்டிருந்த திடமான இளைஞன் புத்தகத்தைக் கண்ணுற்றதும் திடுக்கிட்டு, ''என் தங்கச்சி புருஷன் போட்ட புஸ்தவம்டா இது படுபாவி'' என்றான். அடுத்து நடைபெற்ற கைகலப்பில் கொஞ்சம் ரத்தம் சிதறியது. அந்தப் புத்தகமும் சிதறி விழுந்தது. அது ஒரு கவிதைத் தொகுப்பு. பெயர் கனவு.

**- குமுதம், 7.7.1994.**

# புதிய நீதிக் கதை – 1

## தவளை சொன்ன கதை

கிரண் என்னும் சிறுவனும் நிலா என்னும் சிறுமியும் ஒரு பூஞ்சோலையில் விளையாட்டு எண்ணங்களுடன் நடந்து சென்றபோது ஒரு கரகரப்பான குரல் கேட்டது.

குரல் வந்த திசையைப் பார்த்தபோது, ஆச்சரியம். ஒரு தவளை ஒரு கல்லின்மேல் உட்கார்ந்து கொண்டு ''பாப்பா, சிறுவா! மாடத் தெரு கிருஷ்ணசுவாமி என்பவரைத் தெரியுமா உங்களுக்கு?'' என்றது.

கிரண் ஆச்சரியப்பட்டு, ''தவளை பேசுவதாவது? யாரோ பின்னாலிருந்து குரல் கொடுக்கிறார்கள்,'' என்றான்.

அதற்கு அந்தத் தவளை அபஸ்வரமாக, ''அப்படி யில்லை. நான் தான் பேசுகிறேன். கிருஷ்ணசுவாமியை அழைத்து வாருங்கள், நிரூபிக்கிறேன்.''

''தவளை பேசாது என்றுதான் எங்களுக்குப் பாடம் சொல்லித் தந்திருக்கிறார்கள். வா, போகலாம்,'' என்றாள் நிலா.

இப்போது தவளையின் குரலில் அவசரமும் பரிதாபமும் சேர்ந்து கொள்ள, ''இரு, இரு... சொல்வதைக் கேள். நான் தவளை இல்லை. ஒரு சபிக்கப்பட்ட ராஜகுமாரி. என் பெயர் ரத்தினா.''

''இதெல்லாம் 'சந்த மாமா'வில்தான் நடக்கும். எனக்கு கம்ப்யூட்டர் கிளாஸ் இருக்கிறது. வா, போலாம்,'' என்றான் கிரண்.

''கராத்தே, பரதநாட்டிய ப்ராக்டிஸ் இருக்கிறது. கிபோர்டு மாஸ்டர் வருவார்.''

'அய்யோ... கொஞ்சம் கேளுங்களேன்...' என்று தவளை தன் காலடியிலிருந்த சின்ன கைக்குட்டையை எடுத்து கண்ணைத் துடைத்துக் கொள்ள, நிலாதான் வியந்து போய், ''பாவமா இருக்கு கிரண். என்னதான் சொல்கிறது கேட்கலாமே.''

தவளை பேசியது.

''நான் மெய்யாலுமே ஒரு ராஜகுமாரி. ஒரு ரிஷி என்னை சபித்துவிட்டார். மூன்று நிமிஷம் அவகாசம் தந்தால், என் வாழ்க்கைக் கதையைச் சொல்லி விடுகிறேன்,'' என்றது.

''சொல்லு'' என்றான் கிரண்.

''ரத்தினபுரி என்ற சோழ நாட்டில் ராஜசிம்மன் என்றொரு ராஜாவின் ஏகபுத்திரி. ஒரு நாள் தோழிகளுடன் பந்தாடிக் கொண்டிருந்தபோது இந்த ரிஷி அசுவருதர் என்னும் குதிரை போன்ற முகம் கொண்ட கோபக்கார முனிவர், அந்தப் பக்கம் கடும் தவம் செய்து முடித்துவிட்டு நந்தவனம் குறுக்குவழி என்று திரும்பச் சென்று கொண்டிருந்தார். அப்போது, அவரைப் பார்த்து கண்சிமிட்டிவிட்டேன். அவர் கவனமும், தியானமும் கலைந்து, அவர் அத்தனை வருடம் செய்த தவத்தின் பலன்களை இழந்துவிட்டார். அதனால் கோபித்து என்னை,



'நீ ஒரு தவளையாக மாறக் கடவது!' என்று சபித்துவிட்டார். நான் எத்தனை மன்றாடிக் கேட்டேன். ''சுவாமி, நான் உங்களைப் பார்த்து கண்ணடிக்கவில்லை. என் கண்ணில் தூசி விழுந்தது தப்பா?'' என்றேன்.

அவர் யோசித்து, ''சபித்தது சபித்தாகிவிட்டது. உன்னை அடுத்த நூற்றாண்டில் இதே சுக்ல பட்சம் சதுர்த்தசியில் கிருட்டிணசுவாமி என்கிற மைலாப்பூர் என்னும் நகர மாடவீதி வாசி வந்து ஒருமுறை முத்தமிட்டால் போதும். மீண்டும் ராஜகுமாரியாகலாம்'' என்றார். அதனால் பிள்ளைகளே, ஒரே ஒரு உபகாரம் செய்யவேண்டும். இந்த விலாசத்தில் உள்ள கிருஷ்ணசுவாமியை அழைத்து வரவேண்டும்.

''அவர் இதுவரை வரவே இல்லையா?''

''வந்தார். அவரிடம் விவரம் சொன்னேன். அவர் ஆச்சரியப்பட்டு, பேசும் தவளையை தன் மனைவிக்கும் மகனுக்கும் காட்டவேண்டும் என்று போனவர், திரும்ப வரவேயில்லை. அதனால், தயவு செய்து இந்த விலாசத்துக்குச் சென்று, விசாரித்து அவரை அழைத்து வா பையா...''

அதைக் கேட்டு பரிதாபப்பட்ட கிரண், சரியென்று நிலாவுடன் தவளை கொடுத்த விலாசத்துக்குப் போனால், வீடு பூட்டியிருந்தது. அண்டை வீட்டில் கிருஷ்ணசுவாமி என்பவரை விசாரித்தார்கள்.

''கிருஷ்ணசாமியா? அவரை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருக்கிறார்களே.''

''அடடா... என்ன உடம்பு அவருக்கு?''

''உடம்பு ஏதும் இல்லை. பைத்தியம். தவளை பேசுகிறது... நான் பார்த்தேன். தோட்டத்துக்கு வா என்று மனைவியைப் புடவையைப் பிடித்து இழுத்தாராம். அவர்கள் பயந்துபோய் செடேட்டிவ் கொடுத்து,

ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணியிருக்கிறார்கள். பைத்தியம் முற்றிவிட்டது. தவளை எங்கேயாவது பேசுமோ?'' என்றார் பக்கத்து வீட்டுக்காரர்.

''பேசும்,'' என்று சொல்ல வந்த நிலாவை கிரண் தடுத்து நிறுத்தி, ''பேசாது'' என்று சொல்லி, ''அசடே... நம்மையும் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுவார்கள். வா, போகலாம்,'' என்று புறப்பட்டு கம்ப்யூட்டர் கிளாசுக்குப் போய்விட்டான் கிரண்.

நீதி : உண்மை சொல்லக்கூட வேளை வரவேண்டும்.

★

# புதிய நீதிக் கதை – 2

## தாயும் மகளும்

''என் பெண் என்னைப் போலவே இருக்கிறாள்,'' என்று ஒரு தாய் மிகவும் மகிழ்ந்தாள். அவள் பெயர் ப்ரதிமா. பெண் பெயர் மினி. முழுப் பெயர் தெரியாது.

தந்தை முகேஷ் சட்டா பெரிய பணக்காரர். பஞ்சாபியாக இருந்தாலும் குஜராத்தில் அகமதபாத் அருகில் ஒரு சின்தட்டிக் நூற்பாலை வைத்து ஏராளமாகச் சம்பாதிக்கிறவர். மிகவும் சிக்கனமாக, அந்தத் தொழிற்சாலை இருக்கும் பிரதேசத்தின் ஏழ்மையைப் பயன்படுத்தி, தொழிலாளர்களைத் தற்காலிகமாகவே வைத்துக் கொண்டு, தொழில் விதிகளில் தகிடுதத்தம் பண்ணி அவர் சம்பாதித்தார். அதையெல்லாம் மனைவி கலை, நாட்டியம், ஓவியம், 'பொத்திக்' சமூக சேவை என்று செலவழித்தாள். அவள் தன்னைத் தொந்தரவு செய்யாத வரை இந்த வீண் செலவுகளை அவர் அனுமதித்தார். மேலும் சட்டாவுக்கு இன்கம்டாக்ஸ் சலுகை வேறு கிடைத்தது.

தாய் நல்ல அழகு. நந்தலால் என்கிற ஒரு பிரபல சித்திரக்காரரை டில்லியிலிருந்து வரவழைத்து தாயின் சித்திரத்தின் முன் பெண் நிற்பது போல் சித்திரம் வரைந்து ஹாலில் மாட்டிக்கொள்ள, வந்து பார்த்தவர்கள் அனைவரும் ''தாயைப் போல பெண் அப்படியே உரித்து வைத்திருக்கிறாள். 'தாய் சின்ன வயதில் எப்படி இருப்பாளோ அப்படியே இருக்கிறாள் பெண்,'' என்று வியந்து பாராட்டினார்கள். அந்தச் சித்திரக்காரருக்கு ப்ரதிமா ஒரு பெரிய விருந்து வைத்து காந்தி நகரில் உள்ள கலை இலக்கிய கர்த்தாக்கள், தாடி வைத்த அறிவு ஜீவிகள் அனைவரையும் அழைத்து சித்திரக்காரருக்குப் பொன் னாடை, பெரிய விருது, ஒரு லட்சம் ரூபாய்க்குக் காசோலை எல்லாம் கொடுக்க, தந்தை ஓர் ஓரத்தில் ஸ்காட்ச் வைத்துக்கொண்டு கவனித்துக் கொண்டிருந்தார்.

மகள் மினி மெல்ல மாடியிலிருந்து இறங்கி வந்தாள். இருவருக்கும் உள்ள உருவ ஒற்றுமையை மீண்டும் வியந்து எல்லோரும் கைத்தட்டினார்கள். அந்த இளம் பெண்ணை ஏதாவது பேசச் சொன்னார்கள்.

''நீ என்ன செய்யப் போகிறாய்? பரதநாட்டியமா? ஒடிசியா? ஓவியமா?'' என்று கேட்டதற்கு அவள், ''அதெல்லாம் இல்லை. நான் எம்.பி.ஏ. படித்துவிட்டு அப்பாவின் கம்பெனியில் டைரக்டராகச் சேர்ந்து உற்பத்தியை இரட்டிப்பாக்கப் போகிறேன். நீங்கள் எல்லாம் எத்தனை பணவிரயம் செய்கிறீர்கள். வீட்டுக்குச் செல்லுங்கள்,'' என்றாள்.

அறிவு ஜீவிகள் அனைவரும் தந்தையைக் குற்றச் சாட்டுடன் பார்க்க, அவர் புன்னகையுடன் ''என்ன செய்வது, என் மகள் உருவத்தில்தான் தாயைப்போல இருக்கிறாள்.



சுபாவத்தில் என்னைக் கொண்டிருக்கிறாள். நல்லவேளை,'' என்றார். தொடர்ந்து, ''நாளை அவளை போர்ட் மெம்பராகச் சேர்க்கப் போகிறேன்,'' என்றார்.

**நீதி :** தாயைப் போல பிள்ளை
தந்தையைப் போல பெண்.

**- குமுதம், *9.3.95***

✦